விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 09 செவ்வாய்க்கிழமை (23.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 155

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

## அச்சுறுத்தல் குறித்து ஐ.நாவுக்கு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இறுதிப் போரில் மனிதப்பேரவலம் நடந்தேறிய முள்ளிவாய்க்கால் இழப்புக்களின் துயர நினைவுகளை அனுஷ்டித்த தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற அச்சுறுத்தல்கள், மிரட்டல்களை ஐ.நா மனித வுரிமை ஆணையாளருக்கும், தூதரகங்களுக்கும் அறிக்கையாக சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ள வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம்,

அச்சுறுத்தலுக்குள்ளானோர் தனிப்பட்ட விதத்திலாவது 23

## விடுதலைப் புலிகளால் பொலிஸார் மீது சூடு!

## விமலின் கட்சி புதுக்கதை

(கொழும்பு)

போர்க் காலத்தில் இந்தியாவில் தலைமறைவாகியிருந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களே தாயகம் திரும்பிய நிலையில் கிளிநொச்சி பளை பிரதேசத்தில் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மற்றுமொரு ஆயுதப் போராட்டம் ஆரம்பம் என்ற செய்தியையே அவர்கள் இந்த சம்பவத்தினை அடுத்து வழங்கியிருப்ப 24

## மாணவர் மோதல் ஐவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக கலைப்பீடத்தில் விரிவுரைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மூன்றாம் வருட மாணவர்கள் விரிவுரை அறைக்குள் புகுந்து தாக்கிய சம்பவம் ஒன்று யாழ்.பல்கலை 23

## குற்ற ஒப்புதல் நிராகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 9 வருடங்களாக சிறையில் இருக்கும் அரசியல் கைதி ஒருவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை 23

## யாழ்தேவி மோதி மாணவன் பலி

(அநுராதபுரம்)

கொழும்பிலிருந்து காங்கேசன் துறை நோக்கி நேற்று பயணித்த யாழ்தேவி ரயிலில் மோதுண்டு மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

அநுராதபுரத்திலுள்ள பிரபல பாடசாலையின் மாணவத் 23

# அஞ்சலி செய்வோரை அச்சுறுத்துவது தவறு!

## நல்லாட்சிக்கு அபத்தம் - ஜஸ்மின் சூகா



(ஜெனிவா)

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கற்களை தடைசெய்த பின்னர் தமிழ் செயற்பாட்டாளர்களையும் அவர்களின் குடும்பத்தினரையும் பொலிஸார் பயமுறுத்தி அச்சுறுத்துவதை உடனடியாக தவிர்த்துக் கொள்ளுவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூகா தெரிவித்துள்ளார். (23-ம் பக்.)

## ஜனாதிபதி இன்று அவுஸ். பயணம்

(கொழும்பு)

அரச தலைவர் ஒருவரின் விஜயத்திற்காக அவுஸ்திரேலியாவிடமிருந்து இலங்கைக்கு கிடைத்த முதலாவது உத்தியோகபூர்வ அழைப்பை நினைவுகூரும் வகையில் அவுஸ்திரேலிய பிரதமர் 23

## கர்ப்பிணி கொலை வழக்கை திசை திருப்ப முயற்சிகள்!

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கர்ப்பிணி பெண் படுகொலை தொடர்பான வழக்கினை திசை திருப்புவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாக சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதாக படுகொலை செய்யப்பட்ட கர்ப்பிணி பெண் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி கே.சுகாஸ் நீதிமன்றில் தெரிவித்துள்ளார். 24

## 7500 அகதிகளை வெளியேற்ற ஆஸி. முடிவு

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் சட்ட விரோதமாக தங்கியுள்ள சுமார் 7 ஆயிரத்து 500 அகதிகளை வெளியேற்ற முடிவு செய்துள்ளதாக அந்நாட்டு குடியுரிமை அமைச்சர் தெரிவித்துள்ளார். 23

## சமூக நீதியை உறுதிப்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது

ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கலகெதர)

மக்களுக்கு சமூக நீதியை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அர்ப்பணிப்புடன் உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



கலகெதர புதிய நீதிமன்றக் கட்டிடத் தொகுதியை நேற்று 24

## வித்தியா கொலை வழக்கு யாழிலேயே நடத்தப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவு பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலை தொடர்பான வழக்கினை யாழ்ப்பாணத்திலேயே நடத்துமாறு சட்டமா அதிபர் பிரதம நீதியரசரை கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த வழக்கை எங்கே நடத்துவது என்பது 24

## புதிய அமைச்சர்கள் பதவிப்பிரமாணம்



புதிய அமைச்சரவை மறு சீரமைப்பின் கீழ் 9 அமைச்சரவை அமைச்சுக்கள் மற்றும் ஓர் இராஜாங்க அமைச்சுக்கான புதிய அமைச்சர் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். (03-ம் பக்.)

## விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர், இந்திரா உதவி

(கொழும்பு)

தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் எம்.ஜி.ராமச்சந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு நிதி உள்ளிட்ட உதவிகளை வழங்கியதாக, குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய உ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தனியார் நிறுவனங்களில் வேலைக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

தனியார் நிறுவனங்களில் உடனடி வேலை வாய்ப்பினை பெற விரும்புவோர் யாழ். மாவட்டச் செயலகத்தில் தமது விபரங்களை பதிவு செய்யுமாறு யாழ்.மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அதிகாரசபையின் அனுசரணையில், தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வது தொடர்பாக தொழில் வழங்குநர் மற்றும் வேலைவாய்ப்பை தேடுவோருடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அதில் ஆண்களுக்கான தொழில்களாக தச்சு வேலை, மேசன் வேலை, நீர்க்குழாய் பொருததுதல், அலுமினிய பொருத்து வேலைகள் மற்றும் பெண்களுக்கான தொழில்களான குழந்தைகள் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு போன்ற வேலைகளுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டதுடன் விண்ணப்பங்களும் பதிவு செய்யப்பட்டது.

Acces மற்றும் NEM ஆகிய நிறுவனங்களில் இருந்து வருகை தந்த தொழில் வழங்குநர் தமது தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான விளக்கங்களை வழங்கியிருந்தனர். இந்த கலந்துரையாடலில் 100க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தமது விபரங்களை பதிவு செய்திருந்தனர்.

மேலதிகமாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளதால் தனியார் நிறுவனங்களில் மேற்குறித்த வேலைகளை மேற்கொள்ள விரும்புவோர் எதிர்வரும் இரு வாரங்களுக்குள் யாழ்.மாவட்ட செயலக புனர்வாழ்வு அதிகார சபை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்று தமது விபரங்களை பூர்த்தி செய்து வழங்க முடியும்.

மேற்குறித்த தொழில்களுக்கான வெற்றிடங்கள் வெளிமாவட்டங்களில் உள்ள காரணத்தால் வெளிமாவட்டங்களில் பணி புரிய விரும்புவோர் விண்ணப்பிப்பதுடன் உடனடி வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)


## விற்பனைக்கு

100 முட்டையிடும் கோழிகள், கோழி சொண்டு வெட்டும் மிசின், 1.5 KW ஜெனரேற்றர். (C-8650)

0769176049, 0765456551


உழவு இயந்திரத்தில் பயணித்த வேளை

# விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)

உழவு இயந்திரத்தில் சென்றுகொண்டிருந்த போது திடீரென தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கரவெட்டி துன்னாலை தெற்கை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கோநேசன் தங்கராசா (வயது-63) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவர் விபத்துக்கு முன் ஒரு வார காலமாக அடிக்கடி தலைச்சுற்று இருப்பதாக தெரிவித்து வந்த போதும் சிகிச்சை எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் கடந்த 13ஆம் திகதி உழவு இயந்திரத்தில் குடத்தனை நோக்கி சென்றுள்ளார். அப்போது குடத்தனை பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உழவு இயந்திரத்தில் இருந்து திடீரென தூக்கி வீசப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தை நேரடியாக பார்த்த ஒரு நபர் ஓடிச்சென்று தூக்கி இவரை மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இவர், சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் அங்கு உயிரிழந்துள்ளார்.

குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9,30)

# நிரந்தர தொழில் இன்மையால் உயிரை மாய்த்த குடும்பஸ்தர்

நிரந்தர தொழில்வாய்ப்பு இன்மை மற்றும் வருமானம் இல்லாத காரணத்தால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனது உயிரை மாய்த்துள்ளார்.

கோண்டாவில் குமரகோட்டத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான உலகநாதன் வசந்தகுமார் (வயது-39) என்ற நபரே மேற்படி தனது உயிரை மாய்த்துள்ளார்.

இவர் தனக்கு நிரந்தர தொழில் எதுவும் கிடைக்கவில்லை; வருமானம் இல்லை என அடிக்கடி பலருக்கும் வேதனையுடன் தெரிவித்து வந்துள்ளார். நேற்றைய தினம் மனைவியும் மகளும் வீட்டில் இல்லாத சமயம் வீட்டின் அறை ஒன்றில் இவர் தூக்கில் தொங்கி உயிரிழந்துள்ளார்.

இவருடைய தாய் மற்றும் சகோதரன் சம்பவத்தை கண்ணுற்று அவரை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9,30)


## மரண அறிவித்தல்

## மகேசு தங்கரட்ணம்



வடமராட்சி துன்னாலையைப் பிறப்பிடமாகவும் தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேசு தங்கரட்ணம் அவர்கள் 22.05.2017 அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா-செல்லம்மா தம்பதிகளின் புத்திரியும், மகேசு (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், பகீரதன் (ஆசிரியர்), பங்கயன் (ஆசிரியர்), வனஜா (ஆசிரியை), றோகநிக்ஷா ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி அன்னம் சின்னய்யா, செ.கந்தசாமி, திருமதி யோ.செல்வராணி ஆகியோரின் சகோதரியும், சுஜானன் அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.05.2017 இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தும்பளை, பருத்தித்துறை. (சி-8646)

தகவல்: குடும்பத்தினர் (0771750834)


# 327 கிலோ கஞ்சா மீட்பு



சுமார் 5 கோடி ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா (327 கிலோ கிராம்) பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வெல்லம்பிட்டிய, கலனிமுள்ள பகுதியில் வீடொன்றிலிருந்தே இந்த கேரள கஞ்சா நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)


## கண்ணீர் அஞ்சலி



மகேசு தங்கரட்ணம்

மண்ணில்: 09.01.1952

விண்ணில்: 22.05.2017

எமது பாடசாலை ஆசிரியர் பங்கயன் அவர்களின் அன்புத் தாய் மகேசு தங்கரட்ணம் அவர்கள் 22.05.2017 அன்று காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பாடசாலைச் சமூகம்

யா/அல்வாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை

சக்கோட்டை, பருத்தித்துறை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவக்கொழுந்து அகிலதாஸ்

வடமராட்சி மண்ணின் மைந்தர். வன்முறை அற்ற அரசியல் தலைவர். கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்பவர். கட்சி பேதம் பாராமல் உதவி செய்பவர். அண்ணன் சிவக்கொழுந்து அகிலதாஸ் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டமைக்கு எம் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர்:-

கரவை சிந்தாமணி விநாயகர் முன்பள்ளி அபிவிருத்திச் சங்கம், கரவெட்டி.

(C-8647)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

சபாபதிப்பிள்ளை இரத்தினகோபால்

(ஜெகா மோட்டர்ஸ் உரிமையாளர்)



தோற்றம் 26.11.1944

மறைவு 19.05.2017

சபாபதிப்பிள்ளை இரத்தினகோபால் அவர்கள் கடந்த 19.05.2017 அன்று காலமான செய்தி கேட்டு துயரடைகின்றோம். இவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் இவரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யோகதுரை குடும்பத்தினர்

(8696)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை மாற்றம் ஏன்?

## ஜனாதிபதி மைத்திரி விளக்கம்

(கொழும்பு)

புதிய எதிர்பார்ப்புக்களுடன் ஒரு நாடு என்ற ரீதியில் முன்னேறிச் செல்வதற்கு அமைச்சரவையில் மாற்றங்களை செய்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கமளித்தார். அந்த வகையில் நாட்டின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு புதிதாக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட அமைச்சர்களிடம் தான் கேட்டுக்கொள்வதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை மாற்றத்தின் கீழ் 9 புதிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர் ஒருவரும் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நட்புறவுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்காக கூட்டுப்பொறுப்பை நிறைவேற்ற ஒன்றிணையுமாறு புதிய அமைச்சர்களிடம் தெரிவித்த ஜனாதிபதி, மனிதர்களை நல்லவர்களாக மாற்றுவதன் மூலமே சமூகத்தையும் நாட்டையும் மாற்றுவதற்கு முடியுமென்றும் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.அபேகோன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-3)

## சுகாதாரத் தொண்டர்கள் பிரதமர் ரணிலுக்கு மகஜர்




(யாழ்ப்பாணம்)


தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு சுகாதாரத் தொண்டர்கள் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தங்களது நிலையை விளக்கி மகஜர் ஒன்று அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முன்பாக நேற்று 19ஆவது நாளாக போராட்டத்தை முன்னெடுத்த சுகாதாரத் தொண்டர்கள் அனுப்பி வைத்துள்ள மகஜரில் வடமாகாண சுகாதாரத் தொண்டர்கள் ஆகிய நாம் 1994ஆம் ஆண்டு தொடக்கம் யுத்த காலத்தில் மற்றும் நலன்புரி நிலையங்கள் முதல் கொண்டு இன்றுவரை எதுவித வேதனமுமின்றி தொண்டர் அடிப்படையில் நிரந்தர நியமனத்தை எதிர்பார்த்து வேலை செய்து வருகின்றோம். 2015 இல் உள்வாங்கப்பட்ட திட்டத்தில் சில அரசியல் வாதிகளால் பின்தள்ளப்பட்டு அரசியல் வாதிகளின் உறவினர்கள், நண்பர்கள் உள்வாங்கப்பட்டு தற்போது சேவையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். விடுபட்ட சுகாதார தொண்டர்களான எங்களை இரண்டாம் கட்டமாக உள்வாங்கப்படுவீர்கள் என்று வாக்குறுதி தந்தார்கள். 2015 ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்டவர்களிடம் கல்வித்தகைமை 8ஆம் தரத்திற்கு மேல் சேவைக்காலமின்றி நிரந்தர நியமனம் வழங்கினார்கள் .

தற்போதைய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் விடுபட்டவர்களை உள்வாங்குவதற்கு சாதாரண தரப் பரீட்சையில் 2சி4எஸ் சித்தியடைந்தவர்கள் உள்வாங்கப்படுவார்கள் என்று வடமாகாண அமைச்சு எங்களுக்குக் கூறியுள்ளது. தற்போதைய வேலைத்திட்டத்தில் மேல் மாகாணத்தில் ஆண்களை டெங்கு கட்டுப்பாட்டின் பிரிவிற்காக உள்வாங்கப்படவுள்ளனர். எனவே எங்களுடைய கோரிக்கை டெங்கு கட்டுப்பாட்டின் கீழ் பெண்களை உள்வாங்கப்பட வேண்டும்.

மேலதிகமாக ஆண்களை உள்வாங்கவும் 2015 முன்னைய காலப்பகுதியில் உள்வாங்கப்பட்டபடி விடுபட்ட சுகாதார தொண்டர்களாகிய எமது நிலைகளை கருத்தில் கொண்டு உள்வாங்க வேண்டும் என்று பிரதமரை வடமாகாணசபை சுகாதாரத் தொண்டர்கள் மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-23)

## புதிய அமைச்சர்கள் பதவிப்பிரமாணம்



புதிய அமைச்சரவை மறுசீரமைப்பின் கீழ் 9 அமைச்சரவை அமைச்சுக்கள் மற்றும் ஒரு இராஜாங்க அமைச்சுக்கான புதிய அமைச்சர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

பதவிப்பிரமாணம் செய்து கொண்ட அமைச்சர்களின் விபரம் வருமாறு,

அமைச்சரவை அமைச்சுப் பதவிகள்

01. மங்கள சமரவீர நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர்.

02. எஸ்.பி. திஸாநாயக்க சமூக வலுவூட்டல், நலன் பேணல் மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சர்.

03. டபிள்யு. டீ. ஜே. செனவிரத்ன தொழில், தொழில் உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சர்.

04. ரவி கருணாநாயக்க வெளிவிவகார அமைச்சர்.

05. மகிந்த சமரசிங்க துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சர்.

06. கயந்த கருணாதிலக காணி, பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

07. அர்ஜுன ரணதுங்க பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

08. சந்திம வீரக்கொடி திறன் விருத்தி, தொழிற் பயிற்சி அமைச்சர்.

09. திலக் மாரப்பன அபிவிருத்தி பணிகள் அமைச்சர்.

இராஜாங்க அமைச்சர்

01. மகிந்த அமரவீர மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர். (ஏற்கனவே உள்ள மீன்பிடித்துறை அமைச்சு உட்பட). (இ-3)

## கட்டடம் விழுந்த விவகாரம்; விசாரணை அறிக்கை இன்று

### அமைச்சர் சஜித்திடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

வெள்ளவத்தை பகுதியிலுள்ள கட்டடம் ஒன்று இடிந்து விழுந்த விவகாரம் குறித்து மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை இன்று வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அந்த அமைச்சின் செயலாளர் டபிள்யூ.கே.கே. அத்து கோரல இதனைத் தெரிவித்தார்.

தமது அமைச்சிற்கு சொந்தமான மூன்று நிறுவனங்கள் இந்த விசாரணைகளை மேற்கொண்டதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை, வெள்ளவத்தை சவோய் திரையரங்கிற்கு பின்னால் இருந்த கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தமையால், இருவர் உயிரிழந்ததோடு 21 பேர் காயமடைந்திருந்தனர்.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் அக் கட்டடத்தின் உரிமையாளர் பொலிஸில் சரணடைந்த நிலையில் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதற்கு இணங்க எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கட்டட இடிபாடுகளுக்குள் மேலும் சிலர் சிக்கியிருக்காலம் என கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்றும் தேடுதல் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-3)

## விக்னேஸ்வரனின் தாளத்துக்கு ஆட முடியாது-சரத் பொன்சேகா





வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தாளத்துக்கு அரசாங்கம் ஆட முடியாது என்று அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொடவில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர்,

"வடக்கில் இருந்து படையினரை வெளியேற்றும் வீண் முயற்சியில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஈடுபட்டுள்ளார்.

அவர் அரசாங்கத்திடம் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார். அவரது அழுத்தங்களுக்கு நாம் பணிய மாட்டோம்.

ஒவ்வொருவரும் போடுகின்ற தாளத்துக்கு அரசாங்கத்தினால் ஆட முடியாது. வடக்கில் நிலைகொண்டுள்ள படையினர் விலக்கிக் கொள்ளப்படமாட்டார்கள்.

பளையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை ஊடகங்கள் தான் வேறுவிதமான கண்ணோட்டத்துடன் பார்க்கின்றன.

ஆனால் இதேபோன்ற துப்பாக்கிச் சூடுகள் பிலியந்தலவிலும் களுத்துறையிலும் இடம்பெற்றிருக்கின்றன. இது ஒரு வழக்கமான சம்பவம் தான்" என்றும் அவர் கூறியுள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச்செயலரால் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் வாழ்வாதார உதவி திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட செயலகத்தால் கீழே குறிப்பிடப்பட்ட பொருட் களை பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படு கின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மாவட்ட மீள்குடியேற்ற அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 24.05.2017 ந் திகதி தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் இவை தொடர்பான மேலதிக தக்வல்களினை பெறவிரும்பின் மாவட்ட செயலக மீள்குடியேற்ற அலகின் 021 222 4029 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை மீள்குடியேற்ற அலகு, மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றுடன் நிறுவன வியாபார பதிவுச்சான்றிதழினையும் சமர்ப்பித்து 24.05.2017 முதல் 14.06.2017 வரை காலை 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான **1000/=** கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள். யாவும் தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15.06.2017 திகதியன்று மு.ப 9.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்ப்வர்கள் அரச அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் கையொப்பமிட்டு கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.
6. காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பொதி இலக்கம் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிட்ட முகவரியில் 15.06.2017 திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
7. கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
9. கேள்வி தொடர்பான முன் ஆயத்த கூட்டம் ( **Prebid Meeting**) 05.06.2017 மு.ப 10.00 மணிக்கு அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

| விபரம் | கேள்வி இல. | விபரம் | அண்ணளவான எண்ணிக்கை | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| பொதி 01 | JF/RES/LH/I/PCK01/2017 | நீர் இறைக்கும் இயந்திரங்கள் | 100 | 1000/= |
| | | மின்சார நீரிறைக்கும் இயந்திரங்கள் | 20 | |
| | | தூவல் நீர்பாசன உபகரணங்கள் | 7 | |
| | | மண்வெட்டிகள், பிக்கான், சவல் | 200 | |
| | | மருந்துதெளி கருவிகள் | 100 | |
| | | Alkathene Pipes | 5000 feet | |
| பொதி 02 | JF/RES/LH/I/PCK02/2017 | மரவேலை பட்டறை இயந்திரம் | 25 | 1000/= |
| | | 10" & 12" | 30 | |
| | | Circular saw, | 75 | |
| | | Angle grinder, | 30 | |
| | | Jig Saw, | 20 | |
| | | Cut off saw, | 20 | |
| | | Router, | 80 | |
| | | Driller, & Hammer driller, Sander, | 20 | |
| | | Planer | 15 | |
| | | Bench type driller | 15 | |
| | | Tile Cutter | 10 | |
| | | Welding Machine | 10 | |
| | | Air Compressors | 15 | |
| | | Electric Motors 25HP, 15 HP, 10HP, 3 HP, 2HP | 10 | |
| | | Cement block making Machine | 05 | |
| | | Coconut scrapper | 10 | |
| பொதி 03 | JF/RES/LH/I/PCK03/2017 | தையல் இயந்திரங்கள், | 100 | 1000/= |
| | | Over lock machine | 12 | |
| | | கத்தரிக்கோல்கள் | 150 | |
| | | Leather stitch machine | 10 | |
| பொதி 04 | JF/RES/LH/I/PCK04/2017 | துணிவெட்டும் மேசை -மரம் (Sewing Cutting Table) | 75 | 1000/= |
| | | மர இருக்கை ( Wooden Stools) | 75 | |
| | | Library Cupboard | 50 | |
| பொதி 05 | JF/RES/LH/I/PCK05/2017 | மா அரைக்கும் இயந்திரம் Rice flour grinding Machine (wet rice) | 10 | 1000/= |
| | | தூள் அரைக்கும் இயந்திரம் (Chilli rice grinding machine) | 05 | |
| | | நெல் உடைத்தல் இயந்திரம் | 05 | |
| | | அரிசி தீட்டல் இயந்திரம் | 03 | |
| | | கோப்பி அரைக்கும் இயந்திரம் மஞ்சள் மா அரைக்கும் இயந்திரம் | 05 | |
| | | Copra cutter | 05 | |
| | | Paddy pre cleaner | 01 | |
| | | Rubber Roll Sheller | 02 | |
| | | Polisher ( senior/Junior) | 02 | |
| | | De stoner | 02 | |
| | | Separator pocket type (Paddy & rice) | 01 | |
| | | Belt ( above 4 ply)-3", 4", 6" | 2500" | |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்

(G 8645)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜப்பானிய ஜெய்க்கா நிறுவனம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றின் இறுதிப் போட்டி

ஜப்பானிய ஜெய்க்கா (JICA) நிறுவனத்தின் தொண்டர்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதை பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசு வழங்கும் நிகழ்வும் இன்று 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டி காலை 11.30 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 12 மணிக்கு முடிவடையும். தொடர்ந்து உதைபந்தாட்ட கண்காட்சியும் பி.ப 2.00 தொடக்கம் 3.30 வரை பரிசு வழங்கல் நிகழ்வும் நடை பெறும்.

## நான்கு நாடுகள் பங்கேற்ற பெண்கள் கிரிக்கெட்டில் இந்திய அணி சம்பியன்



தென்னாபிரிக்காவிற்கு எதிரான இறுதிப்போட்டியில் இந்திய அணி 33 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 160 ஓட்டங்கள் சேர்த்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றதோடு, சம்பியன் கோப்பையையும் வசப்படுத்தியது.

இந்தியா, தென்னாபிரிக்கா, அயர்லாந்து, சிம்பாவே ஆகிய 4 நாடுகள் இடையிலான பெண்கள் ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்றது. இதில் தலா 5 வெற்றிகளுடன் முதல் இரு இடங்களை பிடித்த இந்தியாவும், தென்னாபிரிக்காவும் இறுதிப்போட்டியில் நேற்று முன்தினம் சந்தித்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி இந்திய பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 40.2 ஓவர்களில் 156 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக் களையும் இழந்தது. இந்திய தரப்பில் ஜுலன் கோஸ்வாமி, பூனம் யாதவ் தலா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய இந்திய அணி 33 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 160 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றதோடு, சம்பியன் கோப்பையையும் வசப்படுத்தியது. இந்திய பெண்கள் அணித் தலைவி மிதாலி ராஜ் 62 ஓட்டங்களுடனும், பூனம் ரவுத் 70 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

அணித் தலைவி பதவியில் மிதாலி ராஜிக்கு இது 100-வது ஆட்டமாகும். இந்த மைல்கல்லை எட்டிய 3-வது வீராங்கனை மிதாலி ராஜ் ஆவார். அதிக ஆட்டங்களுக்கு அணித் தலைவி பதவி வகித்த சாதனையாளர் வரிசையில் இங்கிலாந்தின் சார்லோட் எட்வர்ட்ஸ் (117 ஆட்டம்), அவுஸ்திரேலியாவின் பெலின்டா கிளார்க் (101) முதல் இரு இடங்களில் உள்ளனர்.

## ஐ.பி.எல் - 2017 கோப்பையுடன் சென்று பிள்ளையாரின் ஆசியைப் பெற்ற மும்பை



மும்பை இந்தியன்ஸ் அணி உரிமையாளர் மற்றும் அதிகாரிகள் ஐ.பி.எல். சம்பியன் கோப்பையை விநாயகர் கோவிலுக்கு கொண்டு சென்று ஆசி பெற்றனர்.

ஹைதராபாத்தில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல். இறுதிப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ், ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட் அணிகள் மோதின. முதலில் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 8 விக்கெட் இழப்புக்கு 129 ஓட்டங்கள் எடுத்தது. 130 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆடிய ரைசிங் புனே சுப்பர் ஜெய்ன்ட் அணி, 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 128 ஓட்டங்களே எடுத்தது.

இதனால் மும்பை இந்தியன்ஸ் ஒரு ஓட்ட வித்தியாசத்தில் வென்று ஐ.பி.எல். கோப்பையை கைப்பற்றியது. அத்துடன் ஐ.பி.எல். கோப்பையை மூன்றாவது முறை வென்று சாதனை படைத்துள்ளது. அந்த அணிக்கு ஐ.பி.எல். கோப்பையுடன், 15 கோடி ரூபாய் பரிசுத்தொகையும் வழங்கப்பட்டது.

இந்நிலையில், ஐ.பி.எல். வெற்றிக் கோப்பையானது மும்பையில் உள்ள பிரசித்திபெற்ற கோவிலான சித்திவிநாயகர் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மும்பை அணி உரிமையாளர் ஆகாஷ் அம்பானி மற்றும் அவரது அலுவலக அதிகாரிகள், கோப்பையை பூசாரியிடம் கொடுத்தனர். அப்போது பூசாரி, கோப்பையை தொட்டு ஆசி வழங்கினார்.

# மாவட்டச்செயலகம், கிளிநொச்சி
## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்.

**கிளிநொச்சி மாவட்டச்செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.**

| | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் நிர்மாணம் | ஒப்பந்த தொகை | வேண்டப்படும் ஆகக்குறைந்த ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/D04/DM T/UNK/169-8 | கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட உதயநகர் குளம் புனரமைத்தல் | 1.49 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C9 or above Irrigation & Land Drainage | ரூபா-15,000.00 வங்கி பிணை 31/08/2017வரை |
| 2 | KN/DPS/D04/DM T/SKK/169-9 | உருத்திரபுரம் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட செருக்கன் குளம் புனரமைத்தல் | 3.85 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-39,000.00 வங்கி பிணை 14/09/2017வரை |
| 3 | KN/DPS/D04/DM T/MSW/169-10 | பளை கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட மாசார் உவர்நீர் தடுப்பு அணை அமைத்தல் | 1.85 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C9 or above Irrigation & Land Drainage | ரூபா-19,000.00 வங்கி பிணை 31/08/2017வரை |
| 4 | KN/DPS/D04/DM T/RNK/169-11 | இராமநாதபுரம் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட இராமநாதபுரம் குளம் புனரமைத்தல் | 4.033 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-41,000.00 வங்கி பிணை 14/09/2017வரை |
| 5 | KN/DPS/D04/DM T/KNK/169-12 | கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட கந்தன் குளம் புனரமைத்தல் | 4.15 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-42,000.00 வங்கி பிணை 14/09/2017வரை |
| 6 | KN/DPS/D04/DM T/VDK/169-13 | கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட வெட்டுக்காட்டுக் குளம் புனரமைத்தல் | 3.5 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C8 or above Irrigation & Land Drainage | ரூபா-35,000.00 வங்கி பிணை 14/09/2017வரை |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட்(ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
   III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக் கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச்செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.(தொ.பே.இல:-0212285357, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 24.05.2017 ஆம்திகதியிலிருந்து 13.06.2017ஆம்திகதிவரை முற்பகல் 9.30மணி முதல் பிற்பகல் 3.00மணிவரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் மீளளிக்கப்படாத ரூபா 2000.00 கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச்செயலகம் கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 15.06.2017 ஆம் திகதி முற்பகல் 10.00மணிக்குமுன் கிடைக்கப்பெறல் வேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதிச்சுற்றறிக்கை 04/2016க்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

சுந்தரம் அருமைநாயகம்,
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(C-8642)

# மண்டப வேலைகள் ஆரம்பம்

(வரணி)

மாசேரி-வரணி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் கடந்தகால யுத்தம் காரணமாக சேதமடைந்து காணப்பட்டது. இதனைப் புனரமைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட 2 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் மண்டப வேலைகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன. கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் போன்றோருக்கு தனித் தனி அறைகள் அமைக்கப்படவுள்ளன. இதன்மூலம் பொதுமக்கள் தமது தேவைகளை ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதுடன் வீண் அலைச்சலைத் தவிர்க்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-103)

# குழுக்கூட்டங்களுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

(கட்டுடை)

வடமாகாண சபையில்,சபை அமர்வுகள் நடைபெறும் நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் நடத்தப்படும் குழுக்கூட்டங்களில் கலந்து கொள்கின்ற அனைத்து மாகாண சபையைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் நாள் ஒன்றிற்கு 1250 ரூபா வீதம் வழங்குவதற்கு வடமாகாண ஆளுநரின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வடமாகண பிரதிச் செயலாளர் அறிவித்துள்ளார். இதுவரை காலமும் 1000 ரூபாவே வழங்கப்பட்டு வந்த நிலையில் 01.01.2017 இலிருந்து 1250ரூபா வீதம் அதிகரிப்புச் செய்து வழங்கப்பட்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இக் கொடுப்பனவானது முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் அனைத்து வடமாகாணசபை உறுப்பினர்களுக்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது . (இ-102)

# தாய்ப்பால் புரைக்கேறி சிசு மரணம்

(யாழ்ப்பாணம்)

தாய்ப்பால் புரைக்கேறியதில், 15 நாட்களேயான பெண் சிசுவொன்று மரண மடைந்துள்ள சம்பவமொன்று, வட்டகொடை சவுத் மடக்கும் புர தோட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

20 வயதான இளம் தாயொருவர் 15 நாட்களுக்கு முன்னர் பிரசவித்த, தன்னுடைய பெண் சிசுவுக்கு, சனிக்கிழமை இரவு, தாய்ப்பால் கொடுத்து உறங்க வைத்ததன் பின்னர், அந்தத் தாயும் உறங்கி விட்டார்.

சிறிது நேரத்தின் பின்னர் கண்விழித்த அந்த தாய், அந்த சிசுவுக்கு, பாலூட்டு வதற்கு முயற்சித்துள்ளார். எனினும், அச்சிசு அசை வற்று கிடந்துள்ளது.

இதனையடுத்தே, தன்னுடைய பச்சிளம் பாலகி மரணமடைந்து விட்டதை அறிந்துள்ளார். அதனையடுத்து, அந்த விவகாரம் தலவாக்கலை பொலிஸா ருக்கு அறிவிக்கப்பட்டது.

அந்த வீட்டுக்கு,சனிக்கிழமை இரவு வந்த பொலிஸார், அந்த வீட்டை குற்றப்பிரதேசமாக குறிப்பிட்டதுடன், அந்தச் சிசுவின்சடலத்துக்கும்பாதுகாப்பு வழங்கினர்.

இந்நிலையில், ஸ்தலத் துக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை சென்ற நுவரெலியா மாவட்ட நீதவான், பிரேத பரிசோதனை க்காக சிசுவின், சடலத்தை நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கு மாறு உத்தர விட்டார். அத்துடன், இச்சம் பவம் குறித்து மேலதிக விசாரணைகளை, மேற் கொண்டு வருவதாக தலவாக்கலை பொலி ஸார் தெரிவித்தனர். (இ-3)

**டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி**
பைவர் கிளாஸ் மோல்ட், பைவர் கிளாஸ் உற்பத்தி, றபர் மோல்ட் மற்றும் சிறுவர்களுக்குத் தேவையான உள்ளக, வெளியக விளையாட்டு உபகரணங்கள் தரமான முறையில் செய்து தரப்படும். (சி.8589)
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 021 222 8680, 077 592 5088

# இராசி பலன்

23.05.2017
(வைகாசி 09, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
துவாதசி முற்பகல் 8.52 மணிவரை
அச்சுவினி பி.இரவு 4.03 மணிவரை
சுபநேரம் 10.22 -11.52 மணிவரை
இராகுகாலம் 2.52-4.22 மணிவரை
பிரதோச விரதம், அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் | புத சந் | சூரி செவ் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும்.

**மேடம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எதிர்பார்க்காமல் செய்த காரியமொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விரத வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், தொழிலில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரும்.

**கடகம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், பேச்சில் இனிமை ஏற்படும், பயணங்கள் கைகூடும்.

**தனுசு:** கேளிக்கை, கொண்டாட்டங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**விருச்சிகம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வைத்திய அதிகாரிகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று 22 ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்த நிலையில், இந்தப் போராட்டம் வடக்கு மாகாணத்திலும நடைபெற்றது. இதனால் யாழ்.போதனா வைத்தியசாலை உள்ளிட்ட அனைத்து வைத்தியசாலைகளிலும் நோயாளர்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியிருந்தமையை காணமுடிந்தது.





சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக மாணவர் அமைப்புக்கள் போராட்டம் நடத்தி வருகின்றன.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியமைக்கு எதிர்ப்பை வெளியிட்டு இவ்வாறு போராட்டம் நடத்தப்படுகிறது.

குறித்த போராட்டத்தில் வட மாகாண வைத்தியர்கள் காலை 8மணி முதல் நண்பகல் 12 மணிவரை பின்வரும் கோரிக்கைகளைமுன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

1.சைட்டம் மருத்துவ கல்லூரிக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட போராட்டத்தில்மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் கைதுசெய்தமை,

2.இலங்கை மருத்துவ சபை மீது மேற்கொண்ட வெடிகுண்டு தாக்குதல் சம்பவத்திற்கு காரணமானவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்காமை,

3.சைட்டம் மருத்துவ கல்லூரியின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி சம்பந்தப்பட்ட சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணை முடிவடைந்த பின்னரும் எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதற்கும்,

4.தொழிற்சங்க நடவடிக்கைகளையும் அதன் தலைமையையும் நசுக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதற்கு கண்டனம் தெரிவித்தும்,

5.சைட்டம் மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கு அரச வைத்தியசாலைகளை பயன்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு வழங்கியதற்காக இலஞ்ச, ஊழல் ஆணைக் குழுவில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் மேற்கொண்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளையும் முன்னெடுக்காமை.

மேலும், எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர், ஏனைய அனைத்து தொழிற்சங்கத்தினர் உதவியுடன் காலவரையறை இன்றிய போராட்டத்தில் ஈடுபடவும் தீர்மானித்துள்ளனர். இந்த நிலையிலேயே வடக்கிலும் நேற்றைய பணிப்புறக் கணிப்புப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

இதனால் விடுதி நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவு நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

குறிப்பாக தூர இடங்களில் இருந்து வந்த நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கி காணப்பட்ட தோடு, வைத்தியர்களின் பணிப்புறக் கணிப்பால் வெளிநோயாளர் பிரிவில் பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்கள் நீண்டநேரம்காத்திருந்தனர். எனினும் அவசர பிரிவுகள் வழமை போன்று எந்த இடையூறுகளுமின்றி இயங்கியிருந்தன. (இ-4)

## காரைக்காடு வீதியை கவனிப்பார்களா?

### புனரமைப்பைக்காண ஏங்கும் மக்கள்

(மந்துவில்)

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் ஆரம்பித்து கிழக்கு நோக்கி கொடிகாமம் சந்தையை அடையும் சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான 50 வருடம் பழைமை வாய்ந்த காரைக்காடு வீதி மிகவும் மோசமாக சேதமடைந்து கவனிப்பாரற்று காணப்படுகிறது.

அரசஊழியர்கள்,பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள் மற்றும்பொதுமக்கள்என நூற்றுக்கணக்கான பயணிகள் தினமும் செல்லும் இவ்வீதியை புனரமைக்க எவரும் முன்வரவில்லை என மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மணல்குவியல்கள் மற்றும் கற்குவியல்களாகவும் காணப்படும் இவ் வீதியில் மாரி காலத்தில் பாரிய கிடங்குகளில் மழை நீர் தேங்கி மக்கள் பயணிக்க இயலாது காணப்படுகிறது. இதனால் மக்கள் வேம் புராய், மீசாலை, புத்தூர் சந்தியூடான சுமார் 4 கிலோமீற்றர் நீளமான வீதியை பயன்படுத்தும் துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே 3 கிராம சேவகர் பிரிவுகளினூடாக செல்லும் இவ் வீதியை கிராம சேவகர்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தி இவ்வீதியை புனரமைக்க முன்வர வேண்டும் என மக்கள் எதிர்பார்த்துள்ளனர். (இ-101)

## மஹோற்சவம்

(மந்துவில்)

தென்மராட்சி மந்துவில் வடக்கு இராஜராஜேஸ்வரி அம்பாளின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 31 ஆம்திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் அலங்கார உற்சவங்கள் நடைபெறவுள்ளன.

தினமும் காலை 9 மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் பூசைகள் இடம் பெறும். இது தவிர உற்சவகாலத்தில் தினமும் அன்னதானம் வழங்கப்படும்.

உற்சவ இறுதி நாட்களான 8.6.2017 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 9.6.2017 வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (இ-101)

## நிர்வாகத் தெரிவு இடம்பெறவில்லை

(வரணி)

வரணி பிரதேச வைத்தியசாலையின் நலன்புரிச் சங்க பொதுக்கூட்டம், இந்த ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு என்பன இடம்பெறவில்லை. பிரதேச மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வைத்தியசாலையாக இவ் வைத்தியசாலை காணப்படுகிறது.

மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக் கூறவும் வைத்தியசாலையின் அபிவிருத்தி தேவைகளை சுட்டிக் காட்டவும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். எனவே வைத்தியசாலை நிர்வாகத்தினர் உடனடியாக நலன்புரிச்சங்க கூட்டத்தைக் கூட்டி வைத்தியசாலையின் அபிவிருத்தியை மேலும் துரிதப்படுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-103)




## சின்னச்சந்தை வீதி எப்போது திருத்தப்படும்?

(மந்துவில்)

தென்மராட்சி மந்துவில் பகுதியை ஊடறுத்துச் செல்லும் பிரதான சின்னச் சந்தை வீதி, நீண்ட காலமாக திருத்தப்படாமலுள்ளது.

தினமும் நூற்றுக்கு மேற்பட்ட பிரயாணிகள் இவ் வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் இவ்வீதியை பயன்படுத்துகின்றனர்.

சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், வைத்தியசாலை, சிறிய சந்தை என மக்களுக்கு சேவை வழங்கும் பலதரப்பட்ட அமைப்புக்கள் இவ் வீதியில் உள்ளன. தினமும் 4 தடவைகள் தனியார் பேருந்துகள் இவ் வீதியில் சேவை வழங்குகின்றன.



இவ் வீதியில் பல இடங்கள் மக்கள் பயணிக்க இயலாதவாறு மிகவும் மோசமாக பாதிப்புற்றுள்ளது. மழை காலங்களில் தேங்கி நிற்கும் வெள்ளநீர் நாட்கணக்காக நிற்பதால் மக்கள் விபத்துக்கள் போன்ற பல்வேறு அசெளகரியங்களை சந்திக்கின்றனர்.

அரசியல்வாதிகளால் இதன் கிளை வீதிகள் பல திருத்தப்பட்ட போதும் தமக்கும் இவ் வீதிகளுக்கும் தொடர்பில்லை என கைவிரிக்கின்றனர்.

அப்படியானால் இவற்றை யார் திருத்துவது? சம்பந்தப்பட்டவர்கள் காலம் தாழ்த்தாமல் உடனடியாக இதனை சீர் செய்து மக்களுக்கு சீரான போக்குவரத்துக்கு உதவ வேண்டும் என மக்கள் கேள்வியுடன் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-101)

## விழிப்புணர்வு

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந் நாட்டிலிருந்து மதுவையும் புகைத்தலையும் ஒழிப்பதற்கான விழிப்புணர்வு செயற்பாடு பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக இன்று 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது. (இ-7)

## சந்தையை தரமுயர்த்தவும்



(மந்துவில்)

தென்மராட்சியில் கொடிகாமம், வரணி சாவகச்சேரி சந்தைகளின் மையத்தில் இயங்கும் மந்துவில் கிளைச் சந்தை 25 வருட கால பழைமையுடையது. ஏறக்குறைய 10 இற்கு மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு கணிசமான சேவையை ஆற்றிவருகிறது. இக் கிளைச் சந்தை வரணி, புத்தூர்ச் சந்திகளை இணைக்கும் குறுக்கு வீதியில் அமைந்துள்ளது.

இங்கு மரக்கறிகள், பழங்கள், தேங்காய்கள், மீன்கள் ஒரே இடத்தில் நெருக்கமாக வைத்து வியாபாரம் செய்வதால் சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுவதாக மக்கள் விசனப்பட்டுள்ளனர்.

தூயநீர், மலசலகூடம் போன்ற வசதிகள் அறவே கிடையாது. உள்ளூரில் கிடைக்கும் மரக்கறி வகைகளை உள்ளூர் வியாபாரிகள் நேரடியாக இங்கு வைத்து விற்கின்றனர்.

மேலும் நான்கு சிறு மரங்களின் உதவியுடன் கூரையால் வேயப்பட்ட கொட்டில்களில் வியாபாரிகள் பொருட்களை வைத்து விற்கின்றனர். மழை காலங்களில் மக்கள் பொருட்களை கொண்டு வந்து விற்கவோ? பொருட்களைக் கொள்வனவு செய்யவோ முடியாத அவலம் காணப்படுகிறது.

எனவே இச் சந்தையின் தரத்தை உயர்த்த சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-101)

## பொதுக் கூட்டம்

பருத்தித்துறை தம்புசிட்டி சதாவதானிகதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் 30 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத்தின் மண்டபத்தில் அதன் தலைவர் மு. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-60)

## மக்களின் காணிகளில் மீண்டும் மண் அகழ்வு

(கொழும்புத்துறை)

அரியாலை உதயபுரம் பகுதியில் மக்களின் காணிகளில் மண் அகழ்வு மீண்டும் ஆரம்பித்துள்ளது.இம்மண்ணை அகழ்ந்து கொழும்புத்துறை கடற்கரை வீதியால் உழவுஇயந்திரம் மூலம் தினமும் கொண்டு செல்கின்றனர். இம்மண் அகழ்வு காரணமாக மண் அரிப்பு ஏற்படக் கூடும். அதனை அறிந்தும் யாரும் இவ் விடயத்தை கருத்திற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை என அப்பிரதேசமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-107)

## விளையாட்டு விழா

புலோலி தென் மேற்கு கந்த முருகேசனார் மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் மு. ஜெகதேவன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் பருத்தித்துறை கிளை முகாமையாளர் சிதம்பரப்பிள்ளை தவலிங்கம் கலந்து கொள்வார். (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

## சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி தமிழக சட்ட சபையில்...



கலப்பு பொறிமுறை நீதி விசாரணைக்கு ஐ.நா. மனித வுரிமைகள் பேரவை அனுமதி வழங்கியபோது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றி வீரர்களை மின்சார நாற்காலியில் இருந்து காப்பாற்றி விட்டேன் என்று கூறினார்.



இதன் பொருள் சர்வதேச விசாரணை நடந்தால் போர்க் குற்றம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு மின்சார நாற் காலியில் இருத்தி தண்டனை வழங் கப்பட்டிருக்கும் என்பதுதான்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறிய மேற்படி கரு த்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் கூடச் சிந்தித்திருக்க வேண்டும்.

வெற்றி வீரர்களை மின்சார நாற்காலியில் இருந்து காப்பாற்றி விட்டேன் என ஜனாதிபதி மைத்திரி சூளுரைத்ததை ஒரு சட்ட வரையறைக்குள் உட்படுத்தி ஆராய்ந்தால் மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் போர்க்குற்றம் புரிந்தது உண்மை என்றும் சர்வதேச விசாரணை நடந்திருந்தால் அது அம்பலமாகி சம்பந்தப்பட்ட வர்களை மின்சார நாற்காலியில் இருத்தி தண்டனை வழங்கப் பட்டிருக்கும் என்றும் உணர முடியும்.

எனினும் இது தொடர்பில் தமிழ் அரசியல் தலைமை எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் கலப்பு நீதி விசாரணையை ஏற்பது போல காட்டிக் கொண்டது.

இலங்கையில் நடந்த போர்க் குற்ற விசாரணை தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியு றுத்திய அமெரிக்கா தனது நிலைப் பாட்டை மாற்றி கலப்பு நீதி விசாரணைக்கு அங்கீகாரம் வழங் கியமையும் நீதி விசாரணையில் வழக்கறிஞர்கள், சர்வதேச நீதி பதிகளின் வகிபங்கு இருக்க வேண் டுமாயினும் அதற்கு இலங்கை அரசின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் பரிந்துரை செய்ததன் ஊடாக, உள்ளக விசாரணை என்ப தற்கு அமெரிக்கா உடன்பட்ட தென்று கூறுவதே பொருத்துடையது.

எனினும் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக மௌனம் காத்தது.

இருந்தும் கலப்பு நீதிப் பொறி முறை என்பது ஒரு கண்துடைப் பாக இருக்குமேயன்றி, அதனால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படமாட்டாதென்பதே உண்மை என தமிழ்மக்கள் மீது விசுவா சமுள்ள தமிழ் அரசியல் தலைமகள் சுட்டிக்காட்டின. இருந்தும் கலப்பு நீதிப்பொறிமுறை என்பது கூட இன்னமும் சாத்தியமாகவில்லை என்பதே உண்மை.

நிலைமை இதுவாக இருக்கை யில் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்கள் ஏலவே தமிழக சட்ட சபையில் 16.09.2015 அன்று ஒரு தீர்மானத்தை முன்மொழிகிறார்.

அத்தீர்மானம் போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை மீது சர்வ தேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாக அத்தீர்மானம் இருக்கிறது.

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கொண்டுவந்த இத்தீர் மானத்தை சட்டசபை ஏகமனதாக ஏற்றுக்கொள்கிறது.

இதற்காக சட்டசபையின் அனை த்து உறுப்பினர்களும் எழுந்து நின்று மிகவும் கண்ணியத்துடன் தீர் மானத்தை நிறைவேற்றுகின்றனர்.

இலங்கையில் நடந்த போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசா ரணை ஒன்றுதான் போர்ப் பாதிப் புக்குள்ளான தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் என தமிழக சட்டசபை தீர்மானம் நிறை வேற்றியமை ஒரு முக்கியமான விடயம் என்பதை எவரும் மறு தலிக்க முடியாது.

சர்வதேச போர்க்குற்ற விசார ணையை வலியுறுத்தி தமிழக சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்த போது, இலங்கையின் பேரின வாதிகள் அதிர்ந்து போயினர்.

தமிழ் மக்களுக்குச் சார்பாக யார் கதைத்தாலும் சீற்றம் கொள்ளும் பேரினவாதிகள் தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பிலும் கொதி ப்படைந்தனர்.

எனினும் அவர்களின் கொதி ப்பை மாணிக்ககங்கையில் ஆற்ற முடியுமேயன்றி தமிழகத்தைப் பார்த்துக் கிடக்கும் இலங்கைக் கடலிலும் நின்றுகூட அவர்களால் ஆர்ப்பரிக்க முடியாது என்பதுதான் உண்மை.

இங்குதான் தமிழகத்தின் முத ல்வராக இருந்த செல்வி ஜெய லலிதா அவர்கள் ஈழத்தமிழ் மக்கள் மீது கொண்ட பற்றும் பாசமும் பளிச்சிடுகிறது.

2009 ஆம் ஆண்டு வன் னிப் போர் நடந்த போது, தமிழகத்தின் முதலமைச்சராக கலைஞர் கருணாநிதி இரு ந்தார். அவர் தலைமையி லான திராவிட முன்னேற்றக் கழகத்தின் பக்கதுணையுடன் மத்தியில் காங்கிரஸ் கட்சி செய்கிறது.

கலைஞர் கருணாநிதி நினைத்திருந்தால், வன்னி யுத்தத்தை நிறுத்தி பல்லா யிரக்கணக்கான தமிழ் மக்க ளின் உயிர்களை பாதுகாத் திருக்க முடியும்.

ஆனால் விடுதலைப்புலி கள் ஒழிக்கப்பட வேண்டு மென்பதில் கலைஞர் கருணா நிதி மிகவும் உறுதியாக இரு ந்தார்.

வை.கோபாலசாமி, பழ. நெடுமாறன் போன்றவர்கள் விடுதலைப்புலிகளை ஆதரிப் பது கலைஞர் கருணாநிதிக் குப் பிடித்திருக்கவில்லை.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்த வை.கோபாலசாமி மீது கலைஞர் கருணாநிதி கடும் கோபம் கொண்டிருந் தார். நாம் தமிழர் கட்சியை உருவாக்கிய சீமான் மீது கலைஞருக்கு இனம்புரியாத வெறுப்பு.

ஆனால் இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை தங்கள் இதயங்களில் வைத்து வழி படுபவர்கள். விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் இருந் தால், அவர்கள் இலங்கையில் வெற்றி சூட்டினால் தலைவர் பிரபாகரன் என்ற பெயர் தமிழகத்தின் தேர்தலிலும் செல்வாக்குச் செலுத்தும் என்று நினைத்த கலைஞர் கருணாநிதி...

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பூர்வீக நிலத்தில் இராணுவம் குடியிருக்க நாம் தெருவோரத்தில்

## கேப்பாப்பிலவு மக்கள் ஆதங்கம்



மாதிரிக்கிராமத்தில் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வரும் தாம் எப்போது தமது பூர்வீக நிலத்திற்கு செல்வோம் என்று எதிர்பார்த்து காத்திருப்பதாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாப்பிலவு மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

138 குடும்பங்களுக்கு சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்டுள்ள தொடர் போராட்டம் நேற்று 84 ஆவது நாளை எட்டியுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக சொந்த நிலத்தைவிட்டு வெளியேறிய பொதுமக்கள் இன்று வரை மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

மீள்குடியேற்றம் செய்யப் போவதாக தெரிவித்து, கடந்த 2012 ஆம் ஆண்டு மாதிரிக்கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் கடந்த எட்டு வருடங்களாக பொதுமக்கள் தமது நிலத்திற்கு செல்வதற்கான தொடர் கவனயீர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்து வந்த நிலையில் தமது காணிகளுக்குள் கால் பதிக்கும் வரையான தொடர் போராட்டத்தை கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில் தமது பூர்வீக நிலத்தில் இராணுவத்தினர் குடியிருக்க தாம் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருவதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மூதாட்டி ஒருவர் கவலை வெளியிட்டுள்ளார். இதேவேளை நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு வந்த பருத்தித்துறையைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் அணியொன்று ஒரு தொகுதி உலருணவுப் பொதிகளையும் கையளித்து சென்றது. (2-5-281)

# 360 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளன

## உதவி செய்ய விரும்புவோர் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இடப் பெயர்வின் பின்னரான மக்கள் மீள்குடியேற்றத்தின் போது, 2ஆயிரத்து 932 குடும்பங்களைச் சேர்ந்த 9ஆயிரத்து196 அங்கத்தவர்கள் இதுவரையில் மீள் குடியேறியுள்ள நிலையில், யுத்தம் காரணமாகவும் மற்றும் ஏனைய காரணங்களாலும் தமது வாழ்க்கைத் துணையை இழந்த நிலையில் 360 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பெரும் பொருளாதார ரீதியான பாதிப்புக்களை எதிர்கொண்ட நிலையில் வாழ்ந்து வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.றமேஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவின் கீழ் 15 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன.

இங்கு குடியேறியுள்ள குடும்பங்களில் பெண்களைத் தலைமையாகக் கொண்ட 360 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவற்றில் அநேகமான குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்திற்கு தொழில் வாய்ப்புக்கள் இன்றி வறுமையுடன் போராடி வரும் நிலை காணப்படுகின்றது.

இதனால் இக் குடும்பங்களின் கீழுள்ள சிறுவர்கள் போசாக்கான உணவுகள் மற்றும் பாடசாலை செல்வதற்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள் உட்பட நீண்ட தூரம் பயணம் செய்யாது பாடசாலை சென்று வருவதற்கு துவிச்சக்கர வண்டிகள் இல்லாமை போன்ற பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் பலர் பாடசாலை கல்வியை விட்டு இடை விலகி வரும் நிலை காணப்படுகின்றது.

எனவே, இந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்தும் வகையில் நல்லின ஆடுகள், மாடுகள், உட்பட சுயதொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கையை வசதி படைத்த தனி மனிதர்கள் முதல் புலம்பெயர் தமிழ் அமைப்புகள், அரசியல் கட்சிகள் எனப்பல தரப்பட்டவர்களும் இணைந்து உதவிட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உதவிட விரும்புவோர் எமது பிரதேச செயலக தொலைபேசி இலக்கங்களான 024 324 8098 அல்லது 021390 0060 ஆகியவற்றின் ஊடாக தொடர்பு கொண்டு தகவல்களை பெற்று பாதிக்கப்பட்ட குடும்பங்களிடமே நேரடியாக உதவித் திட்டங்களை கையளிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)




# ஆயுள்வேத சித்த மருத்துவ வைத்தியசாலை பாண்டியன் குளத்தில் திறந்து வைக்கப்பட்டது

(மல்லாவி )

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் கீழ் உள்ள பாண்டியன்குளத்தில் தற்காலிக கட்டடத்தில் இலவச ஆயுள்வேத சித்த மருத்துவ வைத்திய சாலை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் பா.சிவபாலராஜா தலைமையில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வைத்திய நிலையத்தை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்துள்ளார். இதன்போது தலைமை உரையாற்றிய பிரதேச சபையின் செயலாளர் குறிப்பிடுகையில்,

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு ஏழு வருடங்கள் கடந்த நிலையில் இங்குள்ள மக்களுக்கு இலவச ஆயுள்வேத வைத்திய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய வசதிகள் இல்லாத நிலை காணப்பட்டது.

இதற்கமைவாக எமது பிரதேச சபைக்கு ஆயுள்வேத வைத்தியர் ஒருவரும், ஆயுள்வேத மருந்தாளர் ஒருவரும் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களின் சேவையை பிரதேச மக்கள் உடனடியாகப் பெற்றுக் கொள்ளும் வகையில், பாண்டியன் குளத்தில் அமைந்துள்ள சுகாதார திணைக்களத்திற்குரிய தாய்/சேய் மருத்துவ சிகிச்சை நிலையத்தின் ஒரு பகுதியில் தற்காலிகமாக ஆயுள்வேத வைத்திய சிகிச்சை நிலையம் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையானது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் தினசரி காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நோயாளர்களுக்கு சிகிச்சைகளை வழங்கவுள்ளது.

இதேவேளை, வைத்திய சாலைக்குரிய நிரந்தர ஆயுள்வேத வைத்தியசாலை அமைப்பதற்கு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம் பிரதேச மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக நடப்பாண்டுக்குரிய நிதி ஒதுக்கீட்டின் மூலம் 30 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார்.

இதற்கமைய கட்டடம் அமைப்பதற்குரிய கேள்விக் கோரல்கள் செய்யப்பட்டு மிக விரைவில் இந்த வைத்திய நிலையம் நிரந்தர கட்டடத்தில் இயங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.றமேஸ், சாவகச்சேரி சித்த ஆயுள்வேத வைத்திய அதிகாரி, மல்லாவி பிரதேச ஆயுள்வேத வைத்திய அதிகாரி, மாந்தை கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-5-15)

# தேசிய இளைஞர் விருதுப் போட்டி; விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(மல்லாவி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான 39 ஆவது தேசிய இளைஞர் விருதுப் போட்டிக்கான விண்ணப்பங்களை வவுனியா மாவட்ட இளைஞர், யுவதிகளை அனுப்பி வைக்குமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவுனியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ.கேசவன் அறிவித்துள்ளார்,

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இளைஞர், யுவதிகளின் கலை, கலாசார திறமைகளை தேசிய ரீதியில் கொண்டு செல்வதற்கு இப் போட்டி நிகழ்வுகள் அமையவுள்ளதால் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளின் போது எழுத்திலக்கிய விருதுப் போட்டிகள், அறிவிப்பாளர் போட்டிகள் (ஆங்கிலம், தமிழ்), பேச்சு போட்டிகள் (ஆங்கிலம்,தமிழ்), இளம் பாடகர் போட்டி (ஆங்கில்ம், தமிழ்), கிராமிய பாடல் போட்டிகள், கிராமிய நடனம், புத்தாக்க நடனம், பரதநாட்டியம், அபிநயம், சாஸ்திரீய இசைக்குழுக் கருவிகள் இசைத்தல் போட்டிகள், புகைப்பட வடிவமைப்பு ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகள் யாவும் பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டம் என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

வெற்றியீட்டுவோர் பெறுமதியான சான்றிதழ்கள், பரிசில்கள் என்பன வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

போட்டிகளுக்கு விண்ணப்பிப்போர் 13 வயது தொடக்கம் 29 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

நாடகப் போட்டிக்கு விண்ணப்பிப்போர் 15 வயது தொடக்கம் 35 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க முடியும்.

போட்டிகள் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் சு. காண்டீபனின் 076 380 6990 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவோ அல்லது இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ.கேசவனின் 077 505 8672 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவோ தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார். (2-5-15)

# எரிபொருள் நிரப்பு நிலையத் திறப்பு விழா

(பூநகரி)

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டாவது எரிபொருள் பூநகரி வாடியடியில் பூநகரி-யாழ்ப்பாணம் வீதியில் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பூநகரி ப.நோ.கூ.ச. தலைவர் து.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும் இத் திறப்பு விழா நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங் கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகம், முன்னாள் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், வடக்கு மாகாண கூட்டுறவுஅபிவிருத்தி ஆணையாளர் க.சிவகரன், பெற்றோலியக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் வீ.சண்முகநாதன், பூநகரி பிரதேச செயலர் சி.க.கிருஸ்ணேந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-5-84)

# ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் பாரபட்சம்

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் கடந்த காலத்தில் வீட்டுத்திட்டம் வழங்கப்படும் போது பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதெனவும் கிராம சேவகர் பிரிவுகளுக்கிடையே வெவ்வேறு நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதாக சென்ற வாரம் பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அரச ஓய்வூதியர் சங்க கூட்டத்தில் ஆதாரங்களுடன் உறுப்பினர்களால் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

இனிவரும் அரச ஓய்வூதியர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்ட நிலையில் 75% மானோருக்கு வீட்டுத்திட்டம் கிடைக்காமையினால் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் சம்பந்தமாக தகவல்களை சேகரித்துள்ள அரச ஓய்வூதியர் சங்க செயலாளர் மு.எமிலியாம்பிள்ளை பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்டர்களுக்கு நியாயம் கிடைக்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். (2-5-84)

# புத்தாண்டு விழாவும் கைவிசேடம் வழங்கலும்

(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடா அரசினர்-தமிழ் வித்தியாலயத்தின் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக புத்தாண்டு விழாவும் மாணவர்களுக்கு கைவிசேடம் வழங்கும் நிகழ்வும் பாடசாலை அதிபர் ம.அருளானந்தம் தலைமையில் கடந்த 17ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.


இந்நிகழ்வில் கிளிநொச்சி வலய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன்.தில்லைநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு புத்தாண்டு தினப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கு பாடசாலை அதிபரால் கைவிசேடம் வழங்கப்பட்டது. இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு

## நோயாளர்கள் சிகிச்சையின்றி அவதி



வடக்கு மாகாண வைத்திய சாலைகளில் கடமையாற்றும் மருத்துவர்கள் நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் இன்று காலை 8 மணி வரை 24 மணிநேர பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தால் நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் கைது செய்தமை, சைட்டம் மருத்துவக் கல்லூரியின் முன்னால் தலைமை அதிகாரிகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காமை, சைட்டம் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அரச வைத்திய சாலையை பயன்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு வழங்கியதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு எந்தவித விசாரணையும் முன்னெடுக்காமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பணிப்புறக் கணிப்பு நடைபெற்றது.

இந் நிலையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மருத்துவர்கள் பணிப் புறக்கணிப்பானது. நேற்றையதினம் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய வைத்தியசாலைகளிலும் முன்னெடுக்கப்பட்டது. இந் நிலையில் மேற்படி வைத்தியசாலையின் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்ததுடன் வெளி நோயாளர் பிரிவு முழுமையாக இயங்கவில்லை. இதனால் சிகிச்சை பெற சென்ற நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டதுடன் நீண்ட நேரம் காத்திருந்து விட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். (2-5-250)

# வாகன விபத்தில் ஒருவர் படுகாயம் பனிக்கன்குளம் சந்தியில் சம்பவம்



(பனிக்கன்குளம்)

ஏ-9 வீதி பனிக்கன்குளம் சந்தியில் நடைபெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக மோட்டார் போக்குவரத்து வாகனபரிசோதகர் யு.எல்.ஏ. அப்துல் வஹாப் என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது ஏ-9 வீதி பனிக்கன்குளம், சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கன்ரர் வாகனத்துடன் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்தக் கொண்டிருந்த சொகுசு வாகனம் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளானது. இதன் போது சொகுசு வாகனத்தின் முன் பகுதி பலத்த சேதத்திற்குள்ளானது. சம்பவம் அறிந்த மாங்குளப் பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து விசாரணையைமேற்கொண்டனர். (2-5-281)

# இரணைதீவு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை சந்தித்தனர் த.தே.ம.முன்னணியினர்



கிளிநொச்சி இரணைதீவு பூர்வீக மண்ணில் மீள்குடியேற்றம் செய்யுமாறு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை நேற்று முன்தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சந்தித்து ஆதரவு தெரிவித்திருந்தது. நேற்று முன்தினம் பிற்பகல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார். பொன்னம்பலம். செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோர் நேரில் சென்று மக்களுடன் கலந்துரையாடினர். இதன்போது ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த கஜேந்திரகுமார்,

தமது பூர்வீக மண்ணில் குடியேறுவதற்காக மக்கள் இன்று வீதியில் இறங்கி போராடுகின்றனர். இவ்வாறு மக்கள் போராட்டத்தினாலே தமது உரிமைகளை வென்றெடுத்து வருகின்றார்களேயன்றி எவரும் பெற்றுக்கொடுக்க தயாராக இல்லை. இந்நிலையில் மக்கள் வீதியில் இரவு பகலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டின் பிரதமரை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனது வீட்டிற்கு அழைத்து சென்று உறவினர்களை அறிமுகப்படுத்தியுள்ளார். இருவரும் ஒரே வானூர்தியில் பயணித்துள்ளனர். இவ்வாறு மிக நெருக்கமான உறவை வைத்திருக்கும் அவர்கள் மக்களிற்காக எதையும் பேசியதாக தெரியவில்லை.

மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் மக்களை மறந்து தமது நெருக்கமான உறவை அரச தலைவர்களுடன் கொண்டுள்ள உண்மையை மக்கள் உணர்ந்து எதிர்வரும் காலங்களில் செயற்பட வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (2-5-15)

# முப்பது வருடங்கள் பழமை வாய்ந்த பிள்ளையார் கோவிலில் புத்தர் சிலை

(பரந்தன்)

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கிராமத்தில் முப்பது வருடங்களாக இருந்து வரும் பிள்ளையார் கோவிலின் காணியை கடந்த எட்டு வருடங்களாக புத்தர் ஆக்கிரமித்து இருப்பதாக கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள கிருஸ்ணபுரம் கிராமத்தில் காணப்பட்ட அரச மரத்தில் கடந்த முப்பது வருடங்களாக பிள்ளையார் கோவில் ஒன்று காணப்பட்டது. பிள்ளையார் கோவிலும் கிழக்கு திசையாக வீதியை பார்த்த படி சிறியளவில் அமைக்கப்பட்டு பொது மக்களால் வழிபாடு செய்யப்பட்டு வந்த நிலையில் 2009 இற்கு பின்னர் மீள் குடியேற்றத்தில் கிருஸ்ணபுரம் கிராமத்திற்கு மக்கள் வருகை தந்த போது பிள்ளையார் இருந்த அரசமரத்திற்கு கீழ் புத்தர் இருப்பதனையும் பிள்ளையார் கோவில் காணியில் சிறிய புத்த கோவில் அமைக்கப்பட்டுள்ளதை மக்கள் அவதானித்தனர். இது தொடர்பில் கடந்த எட்டு வருடங்களாக அமைதி காத்தனர். இந்த நிலையில் பிள்ளையார் வலுக்கட்டாயமாக இடம் பெயர வைக்கப்பட்டு அதே காணியில் புத்த கோவிலுக்கு அருகில் வடக்கு திசையியை பார்த்தப்படி சிறியளவில் பிள்ளையார் ஆலயம் படையினரால் உருவாக்கப்பட்டுள்ளது. கிழக்கு திசை பார்த்திருந்த பிள்ளையார் வடக்கு திசைக்கு திருப்பபட்டுள்ள நிலையில புதிதாக வந்த புத்த பெருமான் கிழக்கு திசையில் வீதியை பார்த்தப்படி காட்சியளிக்கின்றார்.

ஆதலால் பொது மக்கள் தங்களின் பிள்ளையார் ஆலயத்தை மீண்டும் ஆகம விதிப்படி கிழக்கு திசைக்கு மாற்றி அமைப்பதற்கு பல தடவைகள் இராணுவத்தினருக்கு தெரியப்படுத்திய போது செய்து தருவதாக கூறியும் இதுவரை அமைத்து தரவில்லை எனவும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (2-5-312)




# ஜனாதிபதி நில மெஹெவர நடமாடும் சேவை நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான நில மெஹெவர ஜனாதிபதி மக்கள் சேவை தேசிய திட்டத்தின் நடமாடும் சேவை நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந் நடமாடும் சேவையில் திருமணப்பதிவு, அரச ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல், சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல் ஆகியன நடைபெற்றது.

இதில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் சிவமோகன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான க.சிவநேசன், து.ரவிகரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-5.281)

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் குடியரசு தின நிகழ்வு அனுஷ்டிப்பு



(பரந்தன்)

இலங்கை ஜனநாயக குடியரசு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிலையில் இலங்கை ஜனநாயக குடியரசு தின நிகழ்வு நேற்றுக்காலை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமான இந் நிகழ்வில் அரசாங்க அதிபர் தலைமை உரை ஆற்றுகையில், 1948ஆம் ஆண்டு பெப்ரெவரி மாதம் 4 ஆம் திகதியிலிருந்து இலங்கை பிரித்தானிய காலணித்துவத்திலிருந்து மீண்ட போதிலும் தொடர்ந்தும் பிரித்தானிய அரசின் கிரீடத்தின் கீழ் டொமினிக் நிலைமையுடைய சுதந்திரமொன்று மட்டும் உரித்தாக இருந்தது.

ஆனால் 1972ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் யாப்புடன் இலங்கை மக்களுக்குப் பொறுப்பு கூறுகின்ற முழுமையான இறைமையுடையமற்றும் சுதந்திர அரசாக மாறியது.

இக்குடியரசு உருவாவதற்கான சந்தர்ப்பங்கள் இவற்றுக்காக தலைமையேற்ற தலைவர்களின் பங்களிப்புகள் தானாகும்.

இந் நிகழ்வில் உதவித் திட்டப்பணிப்பாளர் கேதீஸ்வரன், அனைத்து செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-5-312)

# புதுக்குடியிருப்பு நகர் பகுதிகளில் மின்விளக்குகளை பொருத்துங்கள்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட புதுக் குடியிருப்பு நகர் பகுதிக்கு வீதி விளக்குகளை பொருத்தி தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதிக மக்கள் நடமாட்டம் கொண்ட புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதி கடும் இருளடைந்த பிரதேசமாக காணப்படுவதோடு சமூக விரோத செயல்கள், களவு உள்ளிட்டவற்றுக்கு வாய்ப்பாகவும் காணப் படுவதோடு பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் வீதியால் பயணிப்போர் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த பகுதிக்கு ஒளி யூட்டுவதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-5-281)

# வவுனியாவில் காணாமல்போனோரின் உறவுகளின் போராட்டம் தொடர்கின்றது

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மேற்கொண்டு வரும் சுழற்சி முறையிலான போராட்டம் நேற்று 88ஆவது நாளாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வவுனியா மத்திய அஞ்சல் அலுவலகத்திற்கு அருகே மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தப் போராட்டம் கையளிக்கப்பட்ட தமது உறவினர்களை விடுவிக்கக்கோரியும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரியும் மற்றும் அவசரகால சட்டத்தினை நீக்குமாறு கோரியும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் சாதகமான பதில் கிடைக்கும் வரையில் போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். (2-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம்-இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவில் சப்பறத்திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

# நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தும் ஊட்டச்சத்து மிக்க உணவுகள்

Health Care மருத்துவ உலகம் உங்கள் நலம் உங்கள் கைகளில்

உடல் இயக்க பயிற்சிகளுடன் ஊட்டச்சத்து மிக்க உணவுகளையும் அவசியம் சாப்பிட்டுவர வேண்டும். அவையே நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த உறுதுணையாக இருக்கின்றன.



உடலின் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிப்பதற்கு உடற்பயிற்சிகள், ஊட்டச்சத்துக்கள், சுவாச பயிற்சி, தியானம் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

உடல் இயக்க பயிற்சிகளுடன் ஊட்டச்சத்து மிக்க உணவுகளையும் அவசியம் சாப்பிட்டு வர வேண்டும். அவையே நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த உறுதுணையாக இருக்கின்றன. அத்தகைய உணவு வகைகள் குறித்து பார்ப்போம்.

* சிட்ரஸ் பழங்கள் உடல் ஆரோக்கியத்தையும் நோய் எதிர்ப்பு தன்மையையும் மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பவை. அவற்றுள் தோடம்பழம், எலுமிச்சை, திராட்சை போன்ற பழங்களில் விற்றமின் சி அதிகம் நிரம்பியிருக்கிறது. அவை இரத்த வெள்ளை அணுக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு, நோய் தொற்றலில் இருந்தும் உடலை பாதுகாக்கும். அத்துடன் காய்ச்சல் போன்ற உடல்நல பாதிப்பில் இருந்தும் காக்கும்.

* எலுமிச்சை பழம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆற்றல் கொண்டது. உடலுக்கு நன்மை செய்யும் பக்ரிறீயாக்களின் செயற்பாடுகளை ஊக்குவித்து உடல் வெப்ப நிலையை சீராக பராமரிக்க உதவுகிறது. எலுமிச்சை பழத்தை சாறு பிழிந்து தண்ணீர், சூப்கள், சலாட்டுகளில் கலந்து சாப்பிடலாம்.

* பேரீச்சம் பழத்தில் இரும்பு சத்து அதிகம் இருக்கிறது. அதனை தேனுடன் கலந்து சாப்பிட்டு வரலாம். தொடர்ந்து சாப்பிட்டு வருவது உடலுக்கு சக்தியை தரும். நோய் எதிர்ப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

* மஞ்சள், சோம்பு, பூண்டு போன்றவை உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பக்ரிறீயாக்களை எதிர்த்து போராடும் தன்மை கொண்டவை. அதனை அன்றாட உணவில் பயன்படுத்தி வருவது நோய் எதிர்ப்பு சக்தியை பெருக்கும்.

* பீன்ஸ், சிப்பி வகை மீன்கள் போன்றவற்றில் துத்தநாக சத்துக்கள் அதிகம் இருக்கின்றன.

பொதுவாகவே உடலில் துத்தநாக பற்றாக்குறை ஏற்பட்டால் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து உடல் பலவீனமாகிவிடும். ஆதலால் துத்தநாக சத்துக்கள் கொண்ட உணவுகளை அவசியம் சாப்பிட்டு வர வேண்டும்.

* கீரை வகைகளில் தாதுக்கள், விற்றமின்கள், இரும்பு சத்துக்கள் அதிகம் இருக்கின்றன. அவை நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிப்பதோடு பலவகையான நோய்கள் வராமல் தற்காத்துக்கொள்ளவும் உதவி புரிகின்றன.

* தயிர் மற்றும் பால் சார்ந்த பொருட்கள் உடலுக்கு நன்மை செய்யும் பக்ரிறீயாக்களின் செயற்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கின்றன.

மேலும் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் உதவுகின்றன.

* கரட், தக்காளி, நெல்லிக்காய், பச்சைக் காய்கறிகள் போன்றவற்றில் விற்றமின் ஏ, விற்றமின் சி, விற்றமின் ஈ இது போன்றவை நிறைந்திருக்கின்றன. அவை உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதோடு உடலுக்கு தீங்கு விளைவிக்கும் நோய் தொற்றலில் இருந்தும் காக்கின்றன.



## வாகனம் மதிலில் மோதியது

(கரணவாய்)


கப்ரக வாகனம் ஒன்று மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது. நெல்லியடி-கலிகை வீதியில் உள்ள சாமியார் அரசடிச் சந்தியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (21.05.2017) பிற்பகல் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

நெல்லியடியில் இருந்து சென்று கொண்டிருந்த வாக



னத்தின் சக்கரத்தில் காற்றுப் போனதால் இழுத்துச் செல்லப்பட்டு அருகில் இருந்த வீட்டு மதிலை உடைத்து சென்றது. (இ-60)



கோவிலாக்கண்டி மேற்கு தச்சன் தோப்பு கந்தையா கனகம்மா நிதிய கௌரவிப்பும் ஊக்குவிப்பும் அண்மையில் கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் உரையாற்றுவதையும் சான்றோர் கௌரவிக்கப்படுவதையும் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA
## VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain application from the qualified persons for the under mentioned posts in vavuniya campus of the University of Jaffna (Pampaimadu,Vavuniya).

1. **Faculty of Applied Science**
   - I. Technology Stream
     Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/ Lecturer (Probationary)
     In Information Communication Technology
   - II. **Department of Physical Science**
     Senior Professor/ Professor of information & Communication Technology
     Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Informtion & Communication Technology
   - III. **Department of Bio Science**
     Senior Professor/ Professor of Environmental Science
     Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) Environmental Science /Waste water treatment /Wildlife Management & Conservation

**Note**
Preference will be given to those who have specialization at postgraduate qualification/ Doctoral degree in Environmental Science/ Waste Water Treatment /Wildlife Management &Conservation for the post of Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II in Environmental Science.

2. **Faculty of Business Studies**
   Instructor in Computer Technology Grade II

   **I.Department of Economics & Management**

   **Human Resource Management**
   Senior Professor/Professor of Human Resource Management
   Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Human Resource Management

   **Project Management**
   Senior Lecturer Grade I/Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Project Management

**Note**
Preference will be given to those who have special Degree in Project Management or any relevant degree in one or more of the following fields for the post of project Management.
- Business Project Management / Strategic Project Management
- Regional Planning and Development/ Project Risk Management
- Operations Management /Business Process Management

**ii. Department of Finance & Accountancy**
Senior Professor/ Professor of Accounting and Finance /Accounting /Finance
Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II /Lecturer (Probationary) in Accounting & Finance/ Accounting /Finance

**Note**
Preference will be given to those who have specialized in Accounting and Finance

**iii. English Language Teaching Units**
Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II /Lecturer(Probationary) in English Instructor in English Grade I/Instructor in English Grade II

**SALARY AND OTHER BENEFITS**

| POST | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs. 128, 870 - 11 x 274 - 159,010/- p.m |
| Professor | Rs. 108,490 - 13 x 2,520 - 141, 250/ - p.m |
| Senior Lecturer Gr.I | Rs. 87,415 - 7x2,020 - 101,555/- p.m |
| Senior Lecturer Gr.II | Rs. 76, 275 - 11 x 1,520 - 92,995/-p.m |
| Lecturer (Probationary) | Rs. 53,235 - 10 x 1,240 - 65,635/- p.m |
| Instructor in Computer Technology Gr.II & Instructor in English Gr.I | Rs. 49,860 - 3x1,240 - 53,580 (EB) 54,820 - 14 x 1, 240 - 72,180/- p.m |
| Instructor in English Gr.II | Rs. 47,760 - 19 x 690 - 60,870/- p.m |

**Note**
The above salary scales are fully operative w.e.f.01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2017,2018,2019 & 2020 will be made in accordance with the University Grants Commissions Circular No.17/2016 dated 05.12.2016.
In addition to the above salary

1. The following allowances will be paid as the percentage of the basic salary to the financial value existed as at 31.12.2015
   - i) Academic allowances
     - Senior Professor -152%
     - Professor -147%
     - Senior Lecturer Gr.I/Gr.II -136%
     - Lecturer (Probationary) -100%
   - ii) Additional monthly allowance -20% of the basic salary (for all the post)
   - iii) Research allowance -35% (payable based on the research activity),(Lecturer- Academic staff)
2. Cost of living allowance of Rs.7,800/-p.m

**Statutory benefits**
- i. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
- ii. Membership in Universities Provident fund and Pension Scheme in the University system
- iii. Gratuity payments
- iv. Employees Trust fund benefits
- v. Free Medical Service

**Closing date** (application should reach us on or before the given date)
**Post of Senior Professor /Professor - 22.08.2017**
**Other posts - 23.06.2017**

Applications and other documents for the post of Senior Professor/ Professor shall be sent to the **Vice Chancellor** with a covering letter. Application for the other posts shall be sent to the **Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.**

Applications forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either on person or by post, on a payment of Rs. 100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self- addressed stamped envelope 23x10 c.m in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs. 100/- per application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** position should submit **seperate application.**

Applications from the University System / Government Departments/ Corporations and Statuary Board should channel their applications through the H[illegible]d of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected with out intimation. Only short- listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
22.05.2017


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது போராட்டம் வலுவடையும் லஹிரு வீரசேகர நம்பிக்கை

(கொழும்பு)

அதிகாரத்தை முறைகேடான வகையில் பயன்படுத்தி எமது போராட்டத்தை முடக்க முற்படுவதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் லஹிரு வீரசேகர தெரிவித்துள்ளார். அத்துடன், தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் எமது போராட்டம் இன்னும் வலுவடையுமே தவிர, குறைவடையாது எனவும் அவர் கூறியுள்ளார்.

மாலபே சைட்டம் மருத்துவ கல்லூரிக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

எவ்வாறான தடைகளை ஏற்படுத்தினாலும் எமது போராட்டத்தை தடுக்க முடியாது. தடைகளை ஏற்படுத்துவதன் மூலம் போராட்டம் இன்னும் வலுவடையுமே தவிர குறைவடையாது. எமது போராட்டம் தொடர்ந்துகொண்டே தான் இருக்கும். இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமாயின் சைட்டம் மருத்துவ கல்லூரியை மூட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# வாசு வைத்தியசாலையில்



(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கொழும்பு தேசிய வைத்தியசால்லியில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார். இருதயம் தொடர்பான நோய் காரணமாக இவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# தீமூட்டி எரிக்கப்பட்ட இளம்தாய்; புத்தளம் பகுதியில் கொடூரம்

(புத்தளம்)

புத்தளம் நள்ளாந்தளுவ பிரதேசத்தில் கணவனால் தீமூட்டி எரிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இளம் தாய் புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த சனிக்கிழமை மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என புத்தளம் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் அனுர குணவர்தன தெரிவித்தார்.

மதுரங்குளி நள்ளாந்தளுவ பிரதேசத்தைச் சேர்ந்த முஹம்மது தமீம் சாமிலா (வயது- 19) எனும் இளம் தாயே இத்தீயினால் எரிந்து மரணமாகியுள்ளார்.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நள்ளாந்தளுவ பிரதேசத்தில் மனைவிக்கும், கணவனுக்கும் இடையே ஏற்பட்டு வந்த குடும்ப தகராறு காரணமாக ஆத்திரமடைந்த கணவன் தனது மனைவியை தீமூட்டிக் கொலை செய்ய முற்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்காக அனைவரும் சென்றிருந்த வேளையிலேயே சந்தேக நபரான கணவன் தனது 19 வயதுடைய மனைவியை கட்டிவைத்து அவரது உடம்பின் மீது மண்ணெண்ணெயை ஊற்றிப் பற்ற வைத்துவிட்டு அவர் அவ்விடத்தை விட்டும் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், தீயில் எரிந்துகொண்டிருந்த குறித்த பெண்ணின் கூக்குரல் கேட்டு அவ்விடத்திற்கு சென்ற அயலவர்கள் பள்ளிக்கு தொழுகைக்காகச் சென்றவர்களின் உதவியுடன் கடுமையான தீக்காயங்களுக்கு உள்ளாகியிருந்த பெண்ணை புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

அத்துடன், கடந்த 15 நாட்களாக புத்தளம் மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலைகளில் குறித்த இளம் தாய்க்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த போதிலும், அவரது நிலைமை கவலைக்கிடமாக காணப்பட்டதுடன், புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த சனிக்கிழமை மாலை உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த பெண்ணின் கணவரான சந்தேக நபர் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்று தலைமறைவாகியிருப்பதாகத் தெரிவித்த புத்தளம் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் அனுர குணவர்தன, அவரைக் கைது செய்வதற்கு-நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறினார்.

மரணமான இளம் தாய்க்கு ஏழு மாதக் கைக்குழந்தையொன்று இருப்பதுடன், அவர் நான்கு மாத கர்ப்பிணி எனவும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.


இதேவேளை திருமண வாழ்வின் போது உடல் ரீதியான இம்சைகளுக்கும் உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கும் உள்ளாகிய இந்தப் பெண், முஸ்லிம் காதி நீதிமன்றத்தின் ஊடாக விவாகரத்து கோருவதற்கு முயற்சித்திருந்தார்.

ஆனால் அது பலனளிக்கவில்லை. இதனையடுத்து தனக்கு இழைக்கப்படுகின்ற குடும்ப வன்முறை குறித்து பொலிஸாரிடம் இந்தப் பெண் முறையிட்ட போதிலும் பொலிஸார் அவரை சூழ்ந்திருந்த ஆபத்துக்களுக்கு மத்தியிலும் கணவனுடன் சென்று சமாதானமாக வாழுமாறு அறிவுறுத்தி அந்தப் பெண்ணை அனுப்பி வைத்தனர். அதன் பின்பே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது என்று பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பைச் சேர்ந்த முக்கியஸ்தராகிய ஸ்ரீன் ஸரூர் தெரிவித்தார்.

இளவயதுத் திருமணத்தை அனுமதிக்காத இலங்கையின் அரசியலமைப்பானது, விருப்பத்திற்கு மாறான முறையில் சிறுமிகள் மற்றும் பெண்கள் முஸ்லிம் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்து வைக்கப்படுவதை தடுத்து நிறுத்தவில்லை. அந்தவகையில் அவர்களது உரிமைகளை அரசியலமைப்பு பாதுகாக்க தவறியிருக்கின்றது என ஸ்ரீன் ஸரூர் சுட்டிக்காட்டினார். (இ-3)

# மகனின் மரண தண்டனையை மறுபரிசீலனை செய்யுங்கள்

## குல்பூஷன் தாயார் கடிதம்



'என் மகனின் மரண தண்டனையை மறுபரிசீலனை செய்யுங்கள்' என பாகிஸ்தானுக்கு குல்பூஷன் ஜாதவ் தாயார் கடிதம் எழுதியுள்ளார்.

இந்திய கடற்படை முன்னாள் அதிகாரி குல்பூஷன் ஜாதவுக்கு பாகிஸ்தான் மரண தண்டனை விதித்தது. ஈரானில் இருந்து பாகிஸ்தான் பலுசிஸ்தானுக்குள் நுழைந்து உளவு பார்த்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால் அவர் பணி ஓய்வு பெற்ற பிறகு ஈரானில் ஒரு நிறுவனம் நடத்தி வந்ததாகவும், அங்கிருந்து கடத்தி வரப்பட்டு பொய் குற்றம் சுமத்தி தண்டனை வழங்கி இருப்பதாகவும் இந்தியா தெரிவித்தது.

மரண தண்டனையை இரத்து செய்யும் படி பாகிஸ்தானிடம் இந்தியா கேட்டுக் கொண்டது. அதற்கு பாகிஸ்தான் மறுக்கவே இந்தியா சர்வதேச நீதிமன்றை நாடியது. இந்தியாவின் மனுவை விசாரித்த நீதிமன்று இந்த வழக்கு விசாரணை முடியும் வரை குல்பூஷன்ஜாதவின் மரண தண்டனையை நிறைவேற்றக்கூடாது என தடை விதித்தது.

மேலும், அவரை இந்திய தூதர்சந்திக்க அனுமதி வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பு அளித்தது. அது பாகிஸ்தானுக்கு பலத்த தோல்வி என கருதப்படுகிறது.

இது குறித்து பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பின் ஆலோசகர் சரதாஸ் ஆசீஷ் இஸ்லாமாபாத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது ஜாதவ் மீதான வழக்கில் சர்வதேச நீதிமன்றில் பாகிஸ்தானுக்கு தோல்வி என கூறுவதை ஏற்க முடியாது.

ஏனெனில் ஜாதவ் மரண தண்டனைக்கு தான் சர்வதேச நீதிமன்று தடை விதித்துள்ளது. அதேநேரத்தில் அவருடன் இந்திய தூதர் சந்திக்க அனுமதிக்கும் படி உத்தரவிடவில்லை. அடுத்த தடவை வலுவான சட்டக் குழு சர்வதேச நீதிமன்றில் ஆஜராகி தங்களது திறமையான வாதத்தை எடுத்து வைக்கும்.

மேலும் குல்பூஷன் ஜாதவின் தாயார் பாகிஸ்தான் அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அதில் தனது மகனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை மறுபரிசீலனை செய்யும்படி கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வழக்கு அதிகார வரம்பு குறித்தது அல்ல நாட்டின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்டது. ஒரு போதும் தீவிர வாதத்தை அனுமதிக்க முடியாது. அதற்காக தூதரக உதவி வழங்க முடியாது என்று வாதிட்டது. ஆனால் அந்த வாதத்தை சர்வதேச நீதி மன்று நிராகரித்து விட்டது. ஜாதவை இந்திய தூதர் சந்திக்க அனுமதி வழங்க வேண் டும் என உத்தரவிட்டது. (இ-3)

# புதிய உயிரினத்துக்கு அப்துல் கலாம் பெயர்

## அமெரிக்க விஞ்ஞானிகள் கௌரவம்



(டில்லி)

சர்வதேச விண்வெளி நிலையத்தின் வடிகட்டிகளில் கண்டுபிடித்துள்ள புதிய உயிரினத்துக்கு 'நாசா'வின் விஞ்ஞானிகள், முன்னாள் ஜனாதிபதி மறைந்த டாக்டர் அப்துல் கலாமின் பெயரை சூட்டி கௌரவித்துள்ளனர்.

விண்வெளி்ல்ஐ.எஸ்.எஸ் என்று அழைக்கப்படுகிற சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்து, பன்னாட்டு விஞ்ஞானிகள் ஆய்வுப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மிதக்கும் விண்வெளி நிலையம், பூமியில் இருந்து சுமார் 400 கி.மீ. உயரத்தில் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் அந்த சர்வதேச விண்வெளி நிலையத்தின் வடிகட்டிகளில் (பில்ட்டர்களில்) ஒருவிதமான புதிய உயிரினத்தை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான 'நாசா'வின் முக்கிய ஆய்வுகூடமான 'ஜெட் புரோலிபியன் லேபரட்டரி'யின் ஆராய்ச்சி விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த புதிய உயிரினம், பக்றீரியா வடிவத்திலானது. இந்த உயிரினம் பூமியில் காணப்படுவதில்லை. சர்வதேச விண்வெளி நிலையத்தில் மட்டுமே காணப்படுகின்றன என விஞ்ஞானிகள் கூறினர். இந்த உயிரினத்துக்கு 'நாசா'வின் விஞ்ஞானிகள், இந்தியாவின் ஏவுகணை விஞ்ஞானியும், முன் னாள் ஜனாதிபதியுமான மறைந்த டாக்டர் அப்துல் கலாமின் பெயரை சூட்டி கௌரவித்துள்ளனர்.

இந்த உயிரினத்துக்கு அவர்கள் சூட்டியுள்ள பெயர் 'சோலிபாசில்லஸ் கலாமி' என்பதாகும்.

இதுபற்றி 'ஜெட் புரோலிபியன் லேபரட்டரி'யின் மூத்த ஆராய்ச்சி விஞ்ஞானி கஸ்தூரி வெங்கடேஸ்வரன் கூறும்போது, "புதிதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ள பக்றீரியாவுக்கு சொலிபாசில்லஸ் கலாமி என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த பக்றீரியாவின் பேரினம், சொலிபாசில்லஸ் ஆகும். நானும் ஒரு தமிழன் என்ற முறையில் டாக்டர் கலாம் விண்வெளி ஆராய்ச்சியில் அளித்துள்ள பங்களிப்புகளை அறிவேன்" என்றார்.


அப்துல் கலாம் 1963-ம் ஆண்டு, 'நாசா'வில் பயிற்சி பெற்றதும், அங்கு பயிற்சி பெற்று வந்த பின்னர்தான் அவர் நாட்டின் முதல் ரொக்கெட் ஏவுதளத்தை உருவாக்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-3)

பாரதச் செய்தி

# 3 நாட்களுக்கு முன்பு மாயமான மாலைதீவு கப்பலை இந்திய கடற்படையினர் மீட்டனர்

(டில்லி)

3 நாட்களுக்குப் பிறகு மாலைதீவு தலைநகர் மாலியின் கிழக்கு பகுதியில் இருந்து 120 கடல் மைல் தொலைவில் மாயமான கப்பலை இந்திய டோர்னியர் விமானம் நேற்றுக்காலை கண்டு பிடித்து மீட்டது.



இந்திய பெருங்கடலில் அமைந்துள்ள நாடு மாலைதீவு. இந்த நாட்டு இராணுவத்துக்கு சொந்தமான 'மரியா 3' என்ற கப்பல் 6 வீரர்களுடன் கடந்த 18ஆம் திகதி கே. துல்தாஷ் என்ற தீவில் இருந்து எல்.ஹேஹன் என்ற தீவுக்கு சென்று கொண்டிருந்தபோது மாயமானது. மாயமான இந்த கப்பலை கண்டுபிடித்து தரும்படி இந்திய கடற்படையிடம் மாலைதீவு அரசு கோரிக்கை விடுத்தது.

இதையடுத்து மாலைதீவு கடற்படையினரும், இந்திய கடற்படைக்கு சொந்தமான டோர்னியர் விமானம் மற்றும் ஐ.என்.எஸ். கிரிச் கப்பலும், மாயமான கப்பலை தேடும் பணியில் ஈடுபட்டு வந்தது.

இந்த நிலையில் 3 நாட்களுக்கு பிறகு மாலைதீவு தலைநகர் மாலியின் கிழக்கு பகுதியில் இருந்து 120 கடல் மைல் தொலைவில் மாயமான அந்த கப்பல் தத்தளித்து கொண்டிருப்பதை இந்திய டோர்னியர் விமானம் கண்டு பிடித்தது.

இதனையடுத்து அங்கு சென்ற ஐ.என்.எஸ் கிரிச் கப்பல், மாயமான கப்பலில் இருந்த வீரர்களுக்கு தேவையான உதவிகளை செய்தது. 'மரியா 3' கப்பலில் இருந்த 6 பேரும் பத்திரமாக உள்ளதை கிரிச் கப்பல் உறுதி செய்துள்ளதாக இந்திய கடற்படை செய்தித் தொடர்பாளர் டி.கே. சர்மா தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள மாலைதீவுக்கான இந்திய தூதர் அகிலேஷ் மிஸ்ரா "சவாலான வானிலைக்கு மத்தியிலும் தீரத்துடன் போராடி கப்பலை மீட்ட இந்திய கடற்படை வீரர்களின் செயலை எண்ணி பெருமிதம் கொள்கிறேன்" என்றார். (இ-3)

# சசிகலாவை நீக்க முடியாது

## தம்பிதுரை கூறுகிறார்





(சூளகிரி)

"கட்சியின் பொதுக்குழுவால் தேர்வு செய்யப்பட்ட சசிகலாவை தனிப்பட்ட முறையில் நீக்கிவிட முடியாது" என்று தம்பிதுரை தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குடிநீர் பணிகள் குறித்து நேற்று முன்தினம் பாராளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரை ஆய்வு மேற்கொண்டார். அப்போது சூளகிரியில் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், கட்சியில் எங்களுக்குள் பிளவு என்பது கிடையாது. நாங்கள் அனைவரும் விரைவில் ஒன்றுபடுவோம். கட்சி நிறுவன தலைவர் எம்.ஜி.ஆரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் இந்த நேரத்தில், மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் ஆட்சி சிறக்க நாங்கள் பணியாற்றி வருகிறோம். கட்சியில் நாங்கள் அனைவரும் நண்பர் கள்தான். மைத்ரேயன் எம்.பி.யும் நண்பர், கழகத்தின் உறுப்பினரான அவர் ஜெயலலிதாவால் உருவாக்கப்பட்டவர்தான். பிரச்சினைகளை எங்களுக்குள் பேசி தீர்த்துக்கொள்வோம்.

சசிகலா முறைப்படி பொதுக்குழுவால் தேர்வு செய்யப்பட்டவர். நானோ, மற்றவர்களோ அவரை தனிப்பட்ட முறையில் நீக்கிவிட முடியாது. அனைவரும் ஒன்று சேர்ந்து, பொதுக்குழு எப்படி செயல்பட்டதோ அவ்வாறே மீண்டும் செயற்படுத்த வழிகாண வேண்டுமே தவிர, மற்றபடி தனிப்பட்ட முறையில் யாரையும் குறை கூறுவதை ஏற்க முடியாது. டி.டி.வி. தினகரன் அவராகவே முன்வந்து, ஒதுங்கிவிடுவதாக சொல்லிவிட்டார். பன்னீர்செல்வம் ஆகட்டும், எடப்பாடி பழனிச்சாமி ஆகட்டும், அல்லது மற்றவர்களாகட்டும், எல்லோரும் அ.தி.மு.க.தான் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியிலுள்ள முக்கிய முனை சரிந்ததாகத் தகவல்

உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியில் உள்ள ஹிலாரி முனை சரிந்துள்ளதாகவும், இனிவரும் காலங்களில் மலையேற்ற வீரர்களுக்கு இது ஆபத்தாக இருக்கும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகின் மிக உயரமான சிகரமாக கருதப்படும் இமய மலையில் உள்ள எவரெஸ்ட் சிகரம் நேபாளத்தில் இருக்கிறது. உலகம் முழுவதும் உள்ள மலையேற்ற வீரர்கள் இந்த சிகரத்தில் ஏறுவதை தங்கள் வாழ்நாள் சாதனையாக எண்ணி வருகின்றனர். இச்சிகரத்தின் உச்சியை அடையும் வழியில் இருக்கக்கூடிய ஹிலாரி முனை சரிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஹிலாரி முனை அழிந்து விட்ட செய்தியை பிரிட்டனை சேர்ந்த மலையேற்ற வீரரும் மற்றும் பயணக் குழு தலைவருமான டிம் மோஸ்டேல் மே 16 ஆம் திகதி மலை உச்சியை அடைந்த பிறகு உறுதிப்படுத்தியுள்ளார். தன்னுடைய பேஸ்புக் பக்கத்தில், "ஹிலாரி ஸ்டெப் இனி இல்லை, அது அழிந்து விட்டது" என்று பதிவிட்டுள்ளார்.

மலையேற்ற வீரர்களுக்கு பெரும் சவாலாக இருக்கும் இம்முனை சுமார் 12 மீற்றர் உயரத்திற்கு பாறைகள் உடைய பகுதியாக இருந்து வந்தது. எப்போது இம்முனை சரிந்திருக்கும் என் பது சரிவர தெரிய வில்லை. இருப்பினும், கடந்த 2015-ம் ஆண்டு நேபாளத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் போது சரிந்திருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 1953 ஆம் ஆண்டில் முதன்முறையாக எவரெஸ்ட் சிகரத்தை ஏறிய சேர் எட்மண்ட் ஹிலாரியின் நினைவாக இந்த பகுதிக்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதத்திற்கு எதிராக ஒன்றிணைய வேண்டும்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முஸ்லிம்களுக்கு சவுதியில் அழைப்பு



(கொழும்பு)

**உலகிற்கு பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ள தீவிரவாதத்திற்கு எதிராக அனைத்து முஸ்லிம்களும் ஓரணியில் ஒன்றிணைய வேண்டும் என்று சவுதி அரேபியாவில் வைத்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.**

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது முதல் அயல்நாட்டு பயணமாக சவுதி அரேபியா சென்றுள்ளார்.

அவருடன்மணைவிமெலினா ட்ரம்ப் உள்ளிட்ட வெள்ளை மாளிகை அதிகாரிகள் சென்றுள்ளனர். நேற்று முன்தினம் அந்நாட்டு மன்னர் சல்மானை சந்தித்து ட்ரம்ப் பேச்சு வார்த்தை நடத்தினார். அப்போது இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு துறைகளில் மெகா ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. குறிப்பாக அமெரிக்காவிடம் இருந்து சுமார் 70 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இராணுவத் தளபாடங்களை வாங்க சவுதி அரேபியா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

பின்னர், ட்ரம்ப் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று வருகிறார். அதில் பங்கேற்று பேசிய ட்ரம்ப் தீவிரவாதத்திற்கு எதிராக முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும் என பேசினார். மேலும், தீவிரவாதத்திற்கு எதிராக நடக்கும் போரில் அமெரிக்காவுக்கு ஆதரவாக அனைத்துநாடுகளும்கைகோர்க்க வேண்டும் எனவும் ட்ரம்ப் அழைப்பு விடுத்தார். (இ-3)

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சவுதியில் வாள் நடனம்



(ஜெட்டா)

தனது முதல்அயல்நாட்டுப் பயணமாக சவுதி அரேபியா சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உற்சாகமாக அந்நாட்டின் பாரம்பரிய வாள் நடனம் ஆடினார். இந் நிலையில் முபாரா பலஸில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற ட்ரம்ப் அந்நாட்டின் பாரம்பரிய நடனமாக அறியப்படும் 'அர்தா' எனும் வாள் நடனம்' ஆடினார்.

சவுதி மன்னர் குடும்பத்தினர்புடைசூழ ட்ரம்ப்வெகு உற்சாகமாக நடனமாடினார்.

சவுதி சுற்றுப்பயணம் முடிந்த பின்னர், இஸ்ரேல் செல்லும் ட்ரம்ப் அந்நாட்டு பிரதமர்பெஞ்சமின் நேதன்யாகுவை சந்தித்து பேசுகிறார்.

சுற்றுப்பயணம் முடிந்த பின்னர்தனது சொந்த நாட்டுக்கு அவர் திரும்புகிறார். (இ-3)

## அமெரிக்கர் வரைந்த ஓவியம் 720 கோடி ரூபாவுக்கு ஏலம்



(நியூயோர்க்)

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல ஓவியர் ஜீன் மைக்கேல் யாசித் 1982ஆம் ஆண்டில் வரைந்த மண்டை ஓடு போன்ற தலை அமைப்பு கொண்ட ஓவியம் ரூ.720 கோடிக்கு ஏலம் போனது.

அமெரிக்காவை சேர்ந்த பிரபல ஓவியர் ஜீன் மைக்கேல் யாசித். இவர் புருக்ளினில் ஹைதி மற்றும் பியூடரோரிகன் நாடுகளை சேர்ந்த தம்பதியரின் மகன். இவர் பலவிதமான ஓவியங்களை வரைந்து புகழ் பெற்றார்.

தனது வாழ்நாளில் ஓவிய உலகில் 8 ஆண்டுகள் கொடி கட்டிப்பறந்த அவர் 1988ஆம் ஆண்டு தனது 27ஆவது வயதில் மரணமடைந்தார்.

இவர் 1982-ம் ஆண்டில் மண்டை ஓடு போன்ற தலை அமைப்பு கொண்ட ஓவியம் வரைந்தார். அதற்கு அவர் தலைப்பிடவில்லை.

அவர் வரைந்த இந்த ஓவியம் நியூயோர்க்குள் சோத்ய மையத்தில் சமீபத்தில் ஏலம் விடப்பட்டது. அந்த ஓவியம் 110.5 மில்லியன் டொலர் அதாவது 720 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது.

இதை ஜப்பானைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஏலத்தில் எடுத்தார். இதன் மூலம் இந்த ஓவியம் புதிய வரலாற்று சாதனை படைத்துள்ளது.

ஓவியர் பாசித் இறந்து 30 ஆண்டுகளுக்கு பிறகு அதிக விலைக்கு ஏலம் சென்றுள்ளது. (இ-3)

## ஐ.எஸ்.பிடியிலிருந்த 4 கிராமங்கள் மீட்பு!

(மொசூல்)

மேற்கு மொசூல் நகர் அருகே கைரவான் பகுதியில் 4 கிராமங்களை ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து ஈராக் படைகள் மீட்டன.

கிழக்கு மொசூல் நகரை ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் இருந்து ஈராக் படைகள் கடந்த ஜனவரி மாதம் மீட்டு விட்டன. மேற்கு மொசூல் நகரையும் தங்கள் வசப்படுத்துவதற்காக ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் ஈராக் படைகள் பெப்ரவரி மாதம் முதல் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் மேற்கு மொசூல் நகர் அருகே கைரவான் பகுதியில் 4 கிராமங்களை ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து ஈராக் படைகள் மீட்டு விட்டன. கைரவான் பகுதி டல் அபார் நகரையும், சிரிய எல்லைகளையும் இணைக்கிற பகுதி ஆகும்.

கைரவான் பகுதியில் 4 கிராமங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதால், ஐ.எஸ். பயங்கரவாதிகளின் விநியோக பாதைகள் தடை செய்யப்பட்டு விட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

இந்த நடவடிக்கையின்போது ஐ.எஸ். பயங்கரவாதிகள் தரப்பில் பெருத்த உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

ஈராக் இராணுவ செய்தி தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் யாஹ்யா ரசூல், "மேற்கு மொசூலைப் பொறுத்தமட்டில் 89.5 சதவீத பகுதிகள் ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்கப்பட்டு விட்டன. சில மாவட்டங்கள் மட்டுமே எதிரிகள் வசம் உள்ளன" எனக் கூறி இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## ஆப்கானிஸ்தானில் பொலிஸாரை குறிவைத்து தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 25 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் சோதனைச் சாவடிகளில் உள்ள பொலிஸாரை குறிவைத்து தலிபான் தீவிரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலில் 25 பொலிஸார் பலியாகினர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் ஜபூல் மாகாணம் ஷாஜாய் மாவட்டத்தில் உள்ள பல்வேறு சோதனைச் சாவடிகளில் நேற்று முன்தினம் பொலிஸார் தங்களது வழக்கமான பணிகளை மேற்கொண்டனர்.



அப்போது, அங்கு வந்த தலிபான் தீவிரவாதிகள் பொலிஸாரை குறிவைத்து கனரக மற்றும் இலகுரக ஆயுதங்களை கொண்டு பயங்கரமாக துப்பாக்கிச் சூடு நிகழ்த்தினர்.

தலிபான்களின் இந்த தாக்குதலில் 25 பொலிஸார் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 15-க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல்களுக்கு தலிபான் பயங்கரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடி வரும் அமெரிக்கா, நேட்டோ மற்றும் ஆப்கானிஸ்தான் படைகளுக்கு இந்த ஆண்டு மற்றொரு சவாலான ஆண்டாக இருக்கும் என்று அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜேம்ஸ் மேட்டிஸ் ஏற்கனவே எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் பதவிக்காலங்களை பாராளுமன்ற அனுமதியின்றி நீடிக்க முடியாது

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மாகாணசபைகளின் பதவிக்காலத்தை பாராளுமன்றத்தின் பெரும்பான்மையின்றி நீடிக்க முடியாது. தற்போதைய சூழ்நிலையில் அவ்வாறானதொரு விசேட சட்ட மூலமொன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுமாயின் நிச்சயம் தோற்கடிக்கப்படும் என நீதியானதும் சுயாதீனமானதுமான தேர்தல்களை கண்காணிக்கும் (பவ்ரல்) அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நீதியானதும் சுயாதீனமானதுமான தேர்தல்களை கண்காணிக்கும் (பவ்ரல்) அமைப்பின் தலைவர் ரோஹண ஹெட்டியாராச்சி குறிப்பிடுகையில், மாகாணசபைகளின் பதவிக்காலம் நிறைவடையவுள்ள நிலையில் அதற்கான பதவிக்காலத்தை மேலும் நீடிக்கும் வகையிலான விசேட சட்டமூலமொன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுமாயின் தற்போதைய சூழலில் குறித்த சட்டமூலம் நிச்சயமாக தோற்கடிக்கப்படும்.

இந்நிலையில் மாகாண சபைகளின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கான விசேட சட்டமூலமொன்று பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படுமாயினும் அதன்பின்னர் குறித்த விசேட சட்டமூலம் தொடர்பில் ஆராய்ந்து ஆலோசனைகள் முன்வைக்கப்படுவதற்காக உயர்நீதிமன்றத்தில் அச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும்.

உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த சட்டமூலத்திற்கான அங்கீகாரத்தை பெறும் பொருட்டு அதனை மக்கள் கருத்தறிய உயர்நீதிமன்றத்தால் முன்வைக்கப்படும்.

அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் மாகாணசபைகளின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு நாட்டு பிரஜைகள், சிவில் அமைப்பினர் மற்றும் புத்திஜீவிகள் இதற்கு தமது எதிர்ப்பினையே நிச்சயம் வெளிப்படுத்துவர். மக்களது ஆதரவின்றிய குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்திலும் நிறைவேற்றப்படுவது சாத்தியமற்ற விடயமாகும் என ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரையில் தேர்தல்கள் நடத்தப்படாமல் இருப்பதால் நல்லாட்சி அரசாங்கத்தின் மீது கூட்டு எதிரணி குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளதுடன் தேர்தல்கள் தொடர்ந்தும் காலதாமதப்படுத்தப்படுவதால் மக்களின் அடிப்படை உரிமைகளிலும் பாதிப்பேற்பட்டுள்ளதாகவும் சிவில் அமைப்புக்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மஹரகம நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் தீ




(கொழும்பு)

மஹரகம நகரில் அமைந்துள்ள முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான வர்த்தக நிலையம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அக்குறணை பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான கார்ப்பட் மற்றும் லெதர் விற்பனை நிலையம் ஒன்றே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

இந்த தீ விபத்து நேற்று அதிகாலை 4 மணியளவில் ஏற்பட்டுள்ளது. தீயணைப்புப் படை மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தற்பொழுது தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக முஸ்லிம் வர்த்தகர்களின் வியாபார நிலையங்களை இலக்கு வைத்துத்தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## பேருந்துக் கட்டணம் அதிகரிக்கும்

வருடாந்தம் ஜ°லை 1ஆம் திகதி முதல் இடம்பெறும். தனியார் பேருந்துக் கட்டண திருத்தத்தின் போது. பேரு ந்து கட்டணமானது குறைந்த தொகையில் அதிகரிக்கும் என்று தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறி வித்துள்ளது. இதனடிப்ப டையில் ஆகக் குறைந்த கட்டணமான 9 ரூபாய் 10 ரூபா வரை அதிகரிக்கப்படும் என்று அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார். (இ-3)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு : 1988 இந்து<br>நட்சத்திரம் : பரணி<br>கி.பா :36<br>உயரம் : 6'<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: B/7390 | பிறப்பு : 1988 இந்து<br>நட்சத்திரம் : புனர்பூசம்<br>கி.பா : 55 செவ் 8 ல்<br>உயரம் ; 5'6"<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/6211 |
| பிறப்பு : 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்:A/L/சாரதி<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/7391 | பிறப்பு : 1990 இந்து<br>நட்சத்திரம் : பூரம்<br>கி.பா : 23செவ் 8 ல்<br>உயரம் : 155cm<br>தகைமை/தொழில்:BAஆசிரியர்<br>தொ.இ: G/5685 |
| பிறப்பு : 1984 இந்து<br>நட்சத்திரம் : கேட்டை<br>கி.பா : 35<br>உயரம் : 164cm<br>தகைமை/தொழில்:BScலண்டன் PR<br>தொ.இ: B/7392 | பிறப்பு : 1989 இந்து<br>நட்சத்திரம் : உத்தரம்<br>கி.பா : 43செவ் 12 ல்<br>உயரம் : 165cm<br>தகைமைதொழில்:BAஆசிரியர்<br>தொ.இ: G/5686 |
| பிறப்பு : 1981 இந்து<br>நட்சத்திரம் : உத்தராடம்<br>கி.பா : 36<br>உயரம் : 5'9"<br>தகைமை தொழில்:கணனி பொறியியளாளர் கனடா<br>தொ.இ: B/7393 | பிறப்பு : 1986 இந்து<br>நட்சத்திரம் : கார்த்திகை<br>உயரம் : 5'1"<br>தகைமை/தொழில்:BSc/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/7213 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 300 அற[illegible]


### பலி எண்ணிக்கை அதிகரிப்பு

## இடிபாடுகளுக்குள் பெண்ணின் சடலம்

சரிந்து வீழ்ந்த வெள்ளவத்தை கட்டடத்தின் இடிபாடுகளுக்குள் இருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டது.

குறித்த பெண் மொரட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதான பெண் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் சம்பவத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 3 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மேலும் 23 பேர் வரை காயமடைந்தனர்.

இதையடுத்து இடிபாடுகளுக்கு மத்தியில் தேடுதல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. (இ-3)

## அமைச்சரவை மாற்றம் குறித்து இப்படிச் சொல்கிறார் மகிந்த!

அமைச்சரவை மாற்றம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார்.

சிலாபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் மாற்றம் செய்வது என்பது சாதாரணமாக ஜனாதிபதிக்கு உள்ள உரிமையாகும். ஆனால், இன்று ஜனாதிபதிக்கு அதனை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், பிரதமர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். அதிகாரத்தைப் பயன்படுத்தும் பிரதமர், ஜனாதிபதி என்ற இரண்டு பேர் இருக்கும் போது, நாட்டுக்கு வேலை செய்ய முடியாது.

இவ்வாறு சென்றால், நாட்டின் நிலைமை மோசமாகும். அதுதான் எமது கவலை என மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். (இ-3)

## நினைவேந்தல் நிகழ்வு நடத்த மெரினாவில் அனுமதி மறுப்பு

இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதன் 8ஆம்ஆண்டு நினைவு தினத்தையொட்டி. சென்னை மெரினா கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நினைவஞ்சலி நிகழ்வை நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

சென்னை மெரினா கடற்கரையில் ஜல்லிக்கட்டு போராட்டம் நடந்த பிறகு. அங்கு போராட்டம். பேரணி, ஆர்ப்பாட்டம் உள்ளிட்ட எந்த நிகழ்வுக்கும் பொலிஸார் அனுமதி வழங்குவதில்லை. அங்கு 24 மணி நேரமும் பொலிஸார் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரில் அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதன் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நினைவஞ்சலி நிகழ்ச்சிக்காகவும் இலங்கை மீது. ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் சில தமிழ் அமைப்புகள் மெரினாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கூடவுள்ளதாக தகவல் வெளியானது.


மறுமலர்ச்சி திராவிடர் முன்னேற்றக்கழகம், விடுதலை சிறுத்தைகள், மே-17 இயக்கம், தமிழர் வாழ்வுரிமைக் கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம் உட்பட பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்பினர் மெரினாவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கூட்டம் நடத்தவும் அனுமதி கேட்டுள்ளனர். ஆனால், பொலிஸார் அனுமதி வழங்க மறுத்து விட்டனர்.

இதைத்தொடர்ந்து மெரினா, பெசன்ட் நகர் கடற்கரையில் பொலிஸார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டுள்ளனர் தடையை மீறி கடற்கரையில் திரண்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கைது நடவடிக்கைபாயும்எனசென்னை பொலிஸ் ஆணையர் ஏ.கே. விஸ்வநாதன் எச்சரித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அமைச்சில் காலடி வைத்தால் விளைவுகள் வேறுவிதமாக இருக்கும்

## ஞானசாரருக்கு பிரதியமைச்சர் ஹரிஸ் எச்சரிக்கை





(கொழும்பு)

**சிறுபான்மைச் சமூகத்தினருக்கு எதிராக அடாவடித்தனங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஞானசார தேரர் தனது அமைச்சிற்குள் காலடி வைத்தால் விளைவுகள் வேறுவிதமாகவே அமையும் என விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சர் எச்.எம். எம்.ஹரிஸ் எச்சரித்துள்ளார்.**

மட்டக்களப்பில் நேற்று இடம் பெற்ற பாராட்டுவிழா ஒன் றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பிரதிய மைச்சர் இதனைத் தெரிவித் துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சர் மனோ கணே சன் போல் என்னால் பொறு மையுடன் நடந்து கொள்ள முடியாது.

எனது அமைச்சிற்குள் ஞானசார தேரர் குழுப்பும் எண் ணத்துடன் வந்தால் எனது நடவடிக்கைகள் வேறு பாணி யில் இருக்கும்.

அண்மைக் காலங்களில் சிறுபான்மைச் சமூகங்கள் மீதான இவர்களின் நட வடிக்கைகள் மோசமானவை யாக காணப்படுவதுடன் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமும் இருக்கின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய பொலிஸ்துறை கைகட்டி இனவாதிகளின் பின்னால் நிற்கின்றது.

அத்துடன் குருநாகல் பள்ளிவாசல் தாக்குதல் தொடர் பான இவர்களின் விசா ரணைச் செயற்பாடுகள் இது வரை ஆக்கபூர்வமாக இடம் பெற்றிருக்கவில்லை" என பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரிஸ் மேலும் தெரிவித் துள்ளார். (இ-3)

# இந்தியாவின் சுமேதா இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

இந்தியக் கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்ப லான ஐஎன்எஸ் சுமேதா மூன்று நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறை முகத்தை வந்தடைந் துள்ளது.

கடற்படை மரபுகளுக்கமைய இந்தியக் கடற்படைக் கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் வரவேற்பு அளித்தனர். இந்தி யக் கடற்படைக் கப்பலான



சுமேதா கொழும்பில் தரித்து நிற்கும் போது, அதி லுள்ள இந்தியக் கடற்படை யினர் இலங்கை கடற்படையின ருடன் இணைந்து, கூட்டுப் பயிற்சி, கலாசார மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர்.

இதற்கிடையே, இந்த ஆண் டில் இலங்கைக்கு துறைமுகப் பயணங்களை மேற்கொண்ட 20 ஆவது வெளிநாட்டுக் கடற்படைக் கப்பல் இதுவாகும். கடந்த 2016ஆம் ஆண் டில் 57 வெளிநாட்டுப் போர்க் கப்பல் கள் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தன என் பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# பயங்கரவாதத் தடைச்சட்டம்; கைதி ஜனாதிபதிக்கு கருணை மனு

(கொழும்பு)

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் ஆயுட் காலச் சிறைத்தண்டனை யும் அதற்கு மேலதிகமாக 50 வருட கடூழிய சிறைத்தண் டனையும் அனுபவித்து வரும் சிறைக்கைதி ஒருவர் ஜனாதிபதிக்கு தனது ஆயுட் கால சிறைத்தண்டனையை சாதாரண சிறைத் தண்ட னையாக குறைப்பதற்கு கருணை மனுக் கடிதம் அனு ப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக் கடிதத்தில், கடந்த 1993ஆம் ஆண்டு பயங்கர வாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுஅறியாத ஒரு குற்றத்திற்காக கடந்த 24 வருடங்கள் சிறை வைக்கப்பட்டுள்ளேன்.

இந்நிலையில்தயவு கூர்ந்து எனது இந்தக் கருணை வேண்டுகோளை பரிசீலித்து நானுமொரு சாதாரண பிர ஜையாக இந்நாட்டில் வாழ சந்தர்ப்பமளிக்குமாறு தயவு டன் வேண்டுகின்றேன்.

கடந்த 1993.09.27 அன்று வந்தாறுமூலை மக் கள் குடியிருப்பு பிரதேசத்தில் இராணுவத்தினரும்பொலிஸா ரும் இணைந்து மேற்கொ ண்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கடந்த 1994ம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ஆயுட்கால சிறைத் தண்டனையும் அதற்கு மேலதிகமாக 50 வருட கடூழியச் சிறை தண்ட னையும் வழங்கித் தீர்ப்ப ளிக்கப்பட்டது.

கருணைஉள்ளம்கொண்ட ஜனாதிபதி எனது 43 வய தில் 24 வருட சிறைவாழ்க் கையை அனுபவித்துக் கொண்டிருப்பதை கருத்திற் கொண்டு நிறைவேற்று அதி காரம் மிக்க ஜனாதிபதியா கிய தங்களுக்கு அரசிய லமைப்பில் வழங்கப்பட்டு ள்ள ஆணைக்கமைவாக எனது ஆயுட்கால சிறைத் தண்டனையினை சாதா ரண சிறைத் தண்டனை யாக குறைத்து தருமாறும் எனதுவாழ்க்கையின் சத் தான இளமைக் காலம் கடந்து விட்ட நிலையில் மிகுதி வாழ்வுக்கேனும்ஒளியேற்ற உதவுமாறும் மேலும் தனது கருணை மனுவில் குறிப் பிட்டுள்ளார். (இ-3)

# இன்று ஒரு தகவல்

## தொழிலைச் சொல்ல வெட்கமா?

என் எழுத்துக்களை எம்ஃபிலில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அப்பணியை அண்மையில் முடித்துள்ள நண்பர் இளங்கோவன் என்னை முதலில் சந்தித்த போது தம்மை இப்படித்தான் அறிமுகப்படுத்திக்கொண்டார். என் அப்பா ரோடு போடும் தொழிலாளி. என் அப்பா எவ்வளவோ கஷ்டப்பட்டு என்னை எம்.ஏ படிக்க வச்சார். இப்போ எம்ஃபில் பண்ணலாம்னு இருக்கேன்.

இளங்கோவின் அணுகுமுறை எனக்கு பிடித்திருந்தது. அப்பா தார் சாலை போடுகிற தொழிலாளி என்பதை வெளிப்படையாகச் சொன்னதோடு அப்படிப்பட்ட அப்பா என்னை இப்படி ஆளாக்கியிருக்கிறார் என்று பெருமைப்படச் சொன்னார்.

நான் விமானத்தில் நியூயோர்க் பயணமான போது என் அருகில் படு நாகரிகமாக இருந்த தமிழர் நான் நியூயோர்க்கில் உள்ள ஒரு தென்னிந்திய ஹோட்டலில் சமையற் காரனாக இருக்கிறேன் என்றார். அந்தக் குரலில் கொஞ்சமும் நாணமோ, கேவலமான தொனியோ இல்லை. அவர் அப்படிச் சொன்ன விதம் என்னை மிகவும் கவர்ந்தது.

இதற்கெல்லாம் நேர் எதிரான சம்பவங்களைத் தான் நான் அதிகம் பார்க்கிறேன்; கேள்விப் படுகின்றேன்.

என்னை அண்மையில் சந்தித்த ஒரு வாசகர் நான் பாங்கில் வேலை செய்கிறேன் என்றார். என் வாய் சும்மா இருக்கப்படாதா? கிளார்க்கா, ஒபிஸரா?என்றேன். அவர் முகம் மாறிப்போய் கிட்டத்தட்ட தலையைத் தொங்கப் போட்ட நிலையில் சப்ஸ்டாப் ஆக இருக்கிறேன் என்றார். இதை முதலிலேயே சொல்லியிருந்தால் பிரச்சினை இல்லையே!

ஒருவர் நான் கன்ஸ்ட்ரக்ஷன் லைன்ல இருக்கேன் என்றார். நாகரிகமாய் விசாரித்தால் பெரியார் வேலை இதை முதலிலேயே சொல்லி விடலாமே! ஏன் மற்றவர் குடையும் அளவுக்கோ கண்டுபிடிக்க வேண்டிய அவசியத்திற்கோ ஆளாகி அப்புறம் ஏன் கூனிக் குறுக வேண்டும்?

எல்லாத் தொழிலும் உயர்வான தொழிலே! எல்லோரும் வெள்ளைக்காரர் வேலைகளை மட்டும் பார்த்தால் சமூகம் சீரழிந்து போகுமே! எல்லோரும் உயர் தொழிலைப் பார்த்தால் மற்றவை ஸ்தம்பித்துப் போகுமே? வீட்டு மேல் வேலைக்காரி ஒருநாள் விடுமுறை எடுத்தால் வீடு என்ன நிலைமைக்கு ஆளாகிறது என்பது கண்கூடாகத் தெரிந்த விடயம்தானே!

எந்தத் தொழிலும் கேவலமானதல்ல. பிச்சை எடுப்பதையும் உடல் விற்பனையும் தவிர!

கம்பனியில் அசிஸ்டன்ட் மனேஜரா இருக்கேன் என்று ஒருவர் பெருமை படச் சொல்வாரேயானால், அசிஸ்டன்ட் மனேஜர்தான்ய இவன். ஆனா மனேஜிங் டைரக்டர் மாதிரிச் சொல்றான்யா என்ற கேள்விக்கு ஆளாவதும் உண்டு.

ஆக நாம் சொல்கிற தொனியை வைத்துத்தான் அத் தொழிலைப் பற்றி உயர்வாகவோ கேவலமாகவோ கருத முற்படுகிறார்கள் என்பது என் கருத்து. அடுத்து நாம் செய்யும் தொழிலை நாம் கேவலமாக நினைக்கிறோமா! உயர்வாக நினைக்கிறோமா? என்பதைத்தான் மற்றவர்கள் உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்.

அப்படியானால் நாம் செய்யும் தொழிலின் பெருமையை நிர்ணயிப்பது நாம் சொல்லும் தொனியே.

இந்தத் தொனி பெருமைப்படவோ, கேவலமாகவோ ஒலிக்காதபடி இயல்பாகச் சொல்வோமானால், நாம் செய்யும் தொழில் என்னவாக இருந்தாலும் அதனால் நமக்குப் பெருமையே சேரும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாருதி சுசுக்கி தொழிலாளர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும்

## ஹற்றன் நகரில் ஆர்ப்பாட்டம்




இந்தியாவில் மாருதி சுசுக்கி வாகன நிறுவனத்தில் பணியாற்றும் 18 தொழிலாளர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கியிருப்பது தொடர்பில் அவர்களை விடுதலை செய்யக் கோரி அழுத்தம் கொடுத்து ஹற்றன் நகரில் சோசலிச சமத்துவக் கட்சி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

சுமார் 25 பேரினால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் ஹற்றன் பேருந்து தரிப்பிடத்தின் ஆலமர சந்தியில் பாதையின் ஒரு புறத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தியாவில் மாருதி சுசுக்கி நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியர்களை உடனடியாக அவர்களுக்கு கொடுத்திருக்கும் தண்டனையிலிருந்து விடுதலை செய்ய அழுத்தம் கொடுக்கும் வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டகாரர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். (இ-3)






# மகிந்தவும் கோத்தபாயவும் மிகவும் நன்றிக்குரியவர்கள்



## ஐ.தே.க. அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்

(கொழும்பு)

கடந்த 30 வருட கால யுத்தத்தை நிறைவு செய்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் நன்றியுடன் நினைவுபடுத்தப்பட வேண்டியவர்கள் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரவித்துள்ளார்.



30 வருடகால யுத்தத்தை நிறைவு செய்த அவர்கள் எந்தவகையிலும் மறக்க முடியாதவர்கள் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மஹரகம இசிபதனாராம விஹாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ வீரர்கள் நினைவு தினத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். (இ-3)

## மாணவர் தேர்வில் குளறுபடி இல்லை

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் மாணவர்களை தெரிவு செய்வதில் எந்தவிதமான குளறுபடிகளும் இல்லை என ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி தன்னிடம் தெரிவித்துள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த தேர்வுகள் தொடர்பாக எந்த நேரத்திலும் யாரும் பார்வையிட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் அண்மையில் மாணவர்களை இரண்டாம் கட்டமாக உள்வாங்கிய போது, பெருந்தோட்ட மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நேர்முகத் தேர்வுகளில் முகம் கொடுக்கின்ற பெருந்தோட்ட மாணவர்களின் பெறுபேறுகள் மிகவும் குறைவாக இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் தகுதியானவர்கள் மட்டுமே உள்வாங்கப்படுவார்கள் என கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (இ-3)

## உணவகத்தில் தீ

அம்பாறை கச்சேரிக்கு முன்னால் உள்ள சிறிய உணவகம் ஒன்றில் தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 2 மணியளவில் இந்தச் சம் பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த தீயினால் கடைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் முஸ்லிம் நபர் ஒருவருக்குச் சொந்தமான உணவகம் ஒன்றே இவ்வாறு சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது. (இ-3)

## ரத்ன தேரரின் வாகனம் மோதி சமுர்த்தி அதிகாரி படுகாயம்

நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் பயணம் செய்த வாகனம் புத்தளம் பிரதேசத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது. புத்தளம் - அநுராதபுரம் வீதியின் கருவலகஸ்வெவ பிரதேசத்திலேயே இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது. ரத்ன தேரர் பயணம் செய்த வாகனம், மோட்டார் சைக்கிள் ஒன்றில் மோதுண்டுள்ளது.

இந்த விபத்தின் போது 52 வயதான முதியன்சேலாகே பத்மினி என்ற சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரே காயமடைந்துள்ளார். காயமடைந்த பெண் புத்தளம் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சம்பவம் இடம்பெற்ற போது அந்த வாகனத்தில் பயணம் செய்த அத்துரலிய ரத்ன தேரர், விபத்தின் பின்னர் வேறு வாகனத்தில் சென்று விட்டதாக வாகனத்தின் சாரதி தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் வாகனத்தின் சாரதியை கருவலகஸ்வெவ பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ-3)

## அனுருத்தவின் வழக்கு ஓகஸ்டில்

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அனுருத்த பாதெனியவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிக்க நாள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஓகஸ்ட் 2ஆம் திகதி குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பேராசிரியர்கள் சரத் விஜேசூரிய, காமினி வியன்கொட ஆகியோர் தாக்கல் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்ட வேளையே வழக்கு விசாரணைக்கான தினமும் ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## மாலபே மருத்துவக் கல்லூரிக்கு மாணவர் சேர்க்கை நிறுத்தம்

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்க்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

புதிதாக மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அப் பல்கலைக் கழகத்தின் தலைவர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ கொழும்பு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து கல்வி அமைச்சும் தமக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்ததாக அவர் தெரிவித்தார்.

மாலபே தனியார் பல்கலைக்கழகத்திற்கு எதிரான மருத்துவர்கள் அடுத்து என்ன செய்வார்கள் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாலபே தனியார் வைத்தியசாலையை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் நோக்கில் அதன் ஆளணி வளம், ஏனைய சொத்துக்கள் தொடர்பில் அண்மையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (இ-3)

# சிங்கள பௌத்த புரட்சி வெடிக்கும்! சிங்கள ராவய பகிரங்க எச்சரிக்கை

ஞானசார தேரர் மீது சிறிய தாக்குதலேனும் நடத்தினால் நாட்டில் சிங்கள பௌத்த புரட்சி வெடிக்கும் என சிங்கள ராவய அமைப்பின் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை கைது செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், அரசாங்கத்தின் பிரதான அமைச்சர் ஒருவரின் மூலமாக ஞானசார தேரரை கொலைசெய்ய முயற்சிக்கப்படுகின்றது.

ஆனால், ஞான சார தேரரை கைது செய்தாலோ அவர் மீது சிறிய தாக்குதலேனும் நடத்தினாலோ நாட்டில் சிங்கள பௌத்த புரட்சி வெடிக்கும்.

இதனைப் புரிந்து செயற்படவேண்டும். அவரைக் கைது செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை நாம் அறிவோம் என்றும் இதனை செய்தால் நாட்டில் சிங்கள, பௌத்த புரட்சி வெடிக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உட்பட அந்த அமைப்பினைச் சேர்ந்த சிலர் குருநாகல்" - கொக்கரெல்ல பகுதிக்குச் சென்று சிறுபான்மை மக்கள் வசிக்கும் இடத்தில் பிரச்சினை ஒன்றை மேற்கொண்டனர். இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நீடித்திருந்தது.

மேலும் ஞானசார தேரரை கைது செய்ய பொலிஸார் முயற்சித்ததாகவும் இதற்கு எதிராக அங்கிருந்த இளைஞர்கள் ஒன்று கூடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெரினாவில் நினைவேந்தல்! 17 பேர் புழல் சிறையில் அடைப்பு

## தமிழக அரசு மீது மே-17 கடும் விசனம்






மெரினா கடற்கரையில் திருவள்ளுர் சிலை அருகே மெழுகுவர்த்தி ஏந்தி நினைவேந்தல் அஞ்சலி செலுத்திய மே- 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, தமிழர் விடியல் கட்சி ஒருங்கிணைப்பாளர் டைசன் ஆகியோர் உட்பட 17 பேரை போலிஸார் கைது செய்தனர்.

அதன் பின்னர், ராயப்பேட்டை அரசு வைத்தியசாலையில் உடல் பரிசோதனை செய்து எழும்பூர் நீதவான் முன்பு ஆஜர்படுத்தி, புழல் சிறைக்கு கொண்டு சென்றனர்.

இது குறித்து பொலிஸார் கூறுகையில், "கைது செய்து கொண்டு போகும் போது பேருந்தின் பின்பக்க படிகட்டு அருகே உள்ள சிறிய கண்ணாடியை உடைத்து விட்டனர். எனவே, விளக்கமறியல் செய்கிறோம்" என்றார்கள்.

வைத்திய பரிசோதனை முடிந்த நிலையில் ராயப்பேட்டை அரசு வைத்திய சாலையில் திருமுருகன் காந்தி கூறுகையில், "மெரினாவின் அழகை சீர்குலைத்து விடுவோம் என்று அனுமதி இல்லை என்கிறார்கள்.

இதுவரை 7 ஆண்டுகளாக அமைதி வழியில் நினைவேந்தலை மெரினாவில் நடத்தினோம். ஒவ்வொரு ஆண்டும் மெரினாவை நாங்கள் சுத்தப்படுத்திக் கொடுத்தோம். ஆனால், இந்த ஆண்டு கைது செய்துள்ளார்கள்.

பொலிஸார் எங்களைத் தாக்கினார்கள். எனவே, எக்ஸ்ரே எடுத்து வைத்திய பரிசோதனை செய்தார்கள்" என்று கூறினார்.

தமிழர் விடியல் கட்சி ஒருங்கிணைப்பாளர் டைசன் கூறுகையில், "ஈழத்தில் கொல்லப்பட்ட தமிழர்களின் நினைவாக தமிழர் கடற்கரையில் கூடுவது நமது பண்பாட்டு உரிமை. இதை தடுக்கும் உரிமையும் அதிகாரமும் யாருக்கும் இல்லை.

மே-17 இயக்கம் முன்னெடுக்கும் இந்த நிகழ்வுக்கு கடந்த ஆண்டுகளைப் போலவே தமிழர் விடியல் கட்சி உறுதுணையாக இருந்தது.

சிறையில் போடுவதன் மூலம் எங்களை அடக்கி ஒடுக்கிவிட முடியாது.

மத்திய பி.ஜே.பி. அரசையும் தமிழக அரசையும் கண்டிக்கிறோம் என்றார்.

இதேவேளை தமிழ்நாடு அரசு, பா.ஜ.க. அரசின் பினாமி அரசாக செயற்படுகிறது என்று மே-17 இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் மீது நடந்த இனப்படுகொலையை கண்டித்து மே-17 இயக்கம் ஆண்டு தோறும் மெரினா கடற்கரையில் நினைவேந்தல் கூட்டம் நடத்தப்படும். கடந்த ஏழு வருடங்களாக இந்தக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு மெரினாவில் நினைவேந்தல் கூட்டம் நடத்துவதற்கு பொலிஸார் அனுமதி மறுத்தனர். இருப்பினும் தடையை மீறி நினைவேந்தல் கூட்டத்தை நடத்த மே- 17 இயக்கம் முயற்சி செய்தது.

மே- 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, வேல்முருகன், டைசன், இயக்குநர் கவுதமன் உள்ளிட்டவர்களை பொலிஸார் கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளனர்.

இதனைக் கண்டித்து மே- 17 இயக்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், "இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது என்பது ஒவ்வொரு மக்களின் உரிமை. அந்த உரிமையை தடுப்பதற்கு யாருக்கும் அதிகாரம்இல்லை. அதனை மறுப்பது மனிதனின்அடிப்படை உரிமையின் மீதான வன்முறை.

தமிழர்கள் காலம் காலமாகவே நீர்ப்படுகையில் முன்னோர்களுக்கு அஞ்சலி செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதனை ஆதிச்சநல்லூர் கண்டெடுத்த முதுமக்கள் தாழிக்கள் மூலம் அறிய முடியும்.

கடந்த ஏழு வருடங்களாக அமைதியான முறையில் நினைவேந்தல் கூட்டம் நடைபெற்று வருகிறது.ஜெயலலிதாவின் பெயரில் ஆட்சி நடத்தும் எடப்பாடி பழனிச்சாமி அரசு தமிழர்களின் உரிமைகளை மறுக்கிறது. அடுத்த ஆண்டு ஏராளமான தமிழ்மக்களின் துணையோடு நிச்சயம் நினைவேந்தல் கூட்டத்தை நடத்துவோம்.

தமிழ்நாடு அரசு பா.ஜ.க. அரசின் பினாமி அரசாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. பாசிச ஆட்சிக்கு எதிராக இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள், செய்தியாளர்கள் போராட முன்வர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1081

Search for people, places and things    Nagendram    Home

### மிதூரன்

பெண்களிடம் காதலை சொல்லும் போது பிடிக்கலைன்னா செருப்பாலை அடிப்பாங்க...



பிடிச்சிருந்தா கல்யாணம் பண்ணிக்கிட்டு பூரிக்கட்டையால அடிப்பாங்க...
பட், அடி கன்பார்ம்.

### குகன்

இளைஞர் : மச்சி...
இந்த சரக்கு டூப்ளிக்கேட்டுடா...
மப்பே ஏறலையே...?
இன்னொருவர் : நீ
மப்புலதான் இருக்கிறாய்...
இளைஞர் : எப்படி மச்சி சொல்லுறாய்?
இன்னொருவர் : நான் உன் அப்பன்...

### கனிமொழி

மனைவி : என்னாங்க பக்கத்து வீட்டில பெரிய சண்டை நடக்குது போய் ஒரு தடவை என்னன்னு பார்த்திட்டு வாங்களேன்.
கணவன் : ஏற்கனவே ஒரு தடவை போனதுக்குத்தான் சண்டையே நடக்குது.




### கவிதா

உலக அளவில் ஆண்கள் சமைக்கும் உணவே அதிக சுவையானது.
ஸ்பெயின் யூனிவர்சிட்டி அறிக்கை.



இந்த விஷயம் கடுகளவு வெளிய தெரிஞ்சாலும் உயிருக்கே ஆபத்து.

### மதனா




### நிதுர்சன்

கடவுள், எனக்குன்னு எழுதுன எல்லா சந்தோஷத்தையும்





காத்துல தான் எழுதிருப்பாரு..
அதான், எல்லாம் காத்தோடு காத்தா போயிருச்சி..

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவின் ஏவுகணைச் சோதனை நடவடிக்கை கண்டிக்கத்தக்கது-டில்லர்சன்



(பியாங் யாங்)

வடகொரியாவின் தொடர் ஏவுகணைச் சோதனை நடவடிக்கை, ஏனையோரை ஏமாற்றும் வகையில் உள்ளது எனவும் அதனால் உலக நாடுகள் பெரும் குழப்பத்தில் உள்ளன எனவும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ரெக்ஸ் டில்லர்சன் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவால் அதன் கிழக்கு கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்தே டில்லர்சன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடகொரியாவின் மிலேச்சத்தனமான நடவடிக்கை தொடர்பில் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் கருத்து தெரிவித்த டில்லர்சன், "வடகொரியாவின் செயற்பாடுகள் ஏனைய நாடுகளை பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளது. இந்த சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கின்றோம்" எனத் தெரிவித்தார்.

வடகொரியாவால் கடந்த வாரமும் இது போன்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனை ஒன்று நடத்தப்பட்டது. அத்துடன் குறித்த ஏவுகணைச்சோதனை வெற்றியளித்தது எனவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த ஏவுகணை சுமார் 2000 கி.மீ. உயரத்தில் பறந்ததாகவும் அது ஒரு நவீனரக ஏவுகணையாக இருக்கலாம் எனவும் அது தொடர்பில் கருத்து தெரிவித்திருந்த ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டிருந்தது. (இ-3)

# இனவாதத்திற்குப் பயந்து கைகட்டி நிற்கிறது அரசு

## கிழக்கு சபை உறுப்பினர் சுபைர் விசனம்



சிறுபான்மையினருக்கெதிரான அட்டகாசங்கள் தலை விரித்தாடுகின்றபோது சட்டத்தை அமுல்படுத்த முடியாத அரசாங்கம் இனவாதத்திற்குப் பணிந்து கைகட்டி நிற்கிறது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். சுபைர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

மட்டக்களப்பு, ஏறாவூர் நகர பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஏறாவூர் நகர பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று திங்கட்கிழமை நகர பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மத் ஹனீபா தலைமையில் இடம் பெற்றது.

அங்கு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களில் ஒருவரான சுபைர் தொடர்ந்தும் பேசுகையில்,

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆளுகையின் கீழ் தற்போது ஒரு அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இனங்களுக்கு மத்தியிலே முறுகலை ஏற்படுத்திக் கொண்டு திரியும் நாசகாரக் கும்பல்களைக் கைது செய்து நாட்டின் உயர் மதிப்பு மிக்க சட்டங்களை அமுல்படுத்த முடியாத கையறு நிலையில் ஆளும் தரப்பு உள்ளது.

இந்த நிலைமை நாட்டிலுள்ள சிறுபான்மை இனங்கள் மத்தியில் ஒருவித அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் அதியுயர் பொறுப்பிலுள்ள ஜனாதிபதி எந்தத் தீர்மானத்தையும் எடுக்காமல் கைகட்டிப் பார்த்திருக்கும் நிலையை சிறுபான்மை மக்கள் ஒருவித ஆதங்கத்தோடு அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எந்தக் கோணத்தில் இந்த நிலைமையை உற்றுக் கவனித்தாலும் இது இந்த நாட்டுக்கு நல்லதல்ல.

நல்லாட்சியின் பங்காளிகள் இந்த விடயத்திலே தவறிழைத்து விட்டதாகவே மக்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

இந்த அவநம்பிக்கை கலந்த சூழ்நிலை நீடிக்குமானால் எதிர்காலத்தில் இந்த நாடு அழிவுப் பாதையைத் தானாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டதாகவே அமையும்.

யுத்தத்திற்குப் பின்னர் எதிர்பார்த்த எந்த நல்ல மாற்றத்திற்கும் நாட்டில் தற்போது மேலெழுந்துள்ள இனவாதப் போக்கும் அதனை மறைமுகமாக அங்கீகரித்து அகமகிழ்கின்ற ஆட்சியாளர்களின் போக்கும் இந்த நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும் என்ற எச்சரிக்கை மணியாகவே மக்களின் அபிப்பிராயம் அமைந்துள்ளது.

ஒட்டுமொத்த நாட்டின் நிலை அவ்வாறிருந்தாலும் பிரதேச ரீதியாக எழுகின்ற இன முறுகல்களைத் தணித்து இன ஒற்றுமைக்கு விதை தூவுகின்ற நல்ல காரியங்களை அதிகாரிகள் செய்ய வேண்டும்.

இந்தக் கடமையை அதிகாரிகள் செய்து முடித்தால் குறைந்தபட்சம் அதுவாயினும் ஏக்கப் பெருமூச்சோடும் அச்சத்தோடும் காலங்கழிக்கும் சிறுபான்மை மக்களுக்கு ஒரு ஆறுதலாகவும் நம்பிக்கைத் துளியாகவும் இருக்கும்.

பொலிஸாரும் பிரதேசங்களில் ஏற்படுத்தப்படுகின்ற இன முறுகல்களை உடனடியாக கட்டுக்குள் கொண்டு வருகின்ற கைங்கரியங்களைச் செய்வதற்கு தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

இன ஐக்கியத்தை வெளிக்காட்டுவதிலும் நடைமுறையில் வாழ்ந்து காட்டுவதிலும் சிறுபான்மை இனங்கள் எப்பொழுதும் போல இனிமேல் காலங்களிலும் முன்னுதாரணம் மிக்கவர்களாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)



யாழ். ஐதுரூஸ் மகாம்பள்ளிவாசல் 27 வருடங்களுக்கு பின்னர் நேற்று முன்தினம் மாலை திறக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு யாழில் 13 பள்ளிவாசல்களில் தொழுகைகள் நடந்தன. கடந்த 1990 ஆம் ஆண்டில் யாழ். முஸ்லிம்களின் வெளியேற்றத்தின் பின்னர் அனைத்து பள்ளிவாசல்களும் சேதமாகின. மீண்டும் மீள்குடியேறியவர்கள் தத்தமது பள்ளிகளை புனரமைத்தனர். இந்தப்பள்ளி மட்டும் இடிந்தநிலையில் காணப்பட்டது. தற்போது நீண்டகால முயற்சியில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் மாலை ஆரம்பிக்கப்பட்டது. இது ஐந்து சந்தியிலிருந்து நாவலர் வீதியாக வரும் போது ஐதுரூஸ் மகாம் வீதியில் காணப்படுகிறது. (படங்கள்: ஷொ. சோபிகா)

# ஞானசாரரை கைதுசெய்ய தயக்கம் காட்டுவது ஏன்?

## முஸ்லிம் அமைச்சர் கேள்வி

(கொழும்பு)

அல்லாஹ்வையும் முஸ்லிம்களையும் தொடர்ச்சியாக, மோசமாக கேவலப்படுத்தி வரும் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரைக் கைது செய்வதற்கு அரசாங்கம், தயக்கம் காட்டுவது ஏன் என்று அமைச்சர் றிசாத் பதியுதீன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வினவியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அல்லாஹ்வையும் முஸ்லிம்களையும் தொடர்ச்சியாக நிந்திக்கும் ஞானசார தேரர், கடந்த 19 ஆம் திகதி பொலிஸ் நிலையத்துக்கு வந்திருந்தார். அப்போதும், அவருக்கெதிராக முறைப்பாடு இருந்தது. எனினும், அவரைக் கைது செய்யாமல் விட்டு விட்டனர்.

இந்நிலையில், குருநாகல் பகுதியில் வைத்து, கடந்த 20 ஆம் திகதி இரவு, அவரைக் கைது செய்வதாக பொலிஸார். நாடகம் காட்டியுள்ளனர். முஸ்லிம்களுக்கு எதிரான ஞானசார தேரரின் நடவடிக்கைகள் எல்லைமீறி இருப்பதை பிரதமரிடமும் ஜனாதிபதியிடமும் காட்டமாக தெரிவித்திருந்ததுடன் அவரைக் கைது செய்யுமாறு கோரி பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடொன்றை செய்திருந்தோம்.

இதுவரை அது நடக்கவில்லை. ஆனால், அவரைக் கைது செய்வது போன்ற திட்டமிட்ட நாடகம் ஒன்றுதான் அரங்கேற்றப்பட்டுள்ளது. சட்டத்தைக் கையிலெடுத்து ஆடும் இந்தத் தேரரை அரசாங்கம் அடக்குவதற்கு ஏன் அஞ்சுகிறதோ தெரியவில்லை. சிறுபான்மையின மக்களை, குறிப்பாக முஸ்லிம்களை அச்சுறுத்தி எந்த விதப் பயமும் இல்லாமல் அவர் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். மத்துகமை, தர்ஹா நகர் ஊடாக ஊர்வலம் சென்ற, பொதுபல சேனா இயக்கத்துக்கு, அளுத்கம பொலிஸார் பாதுகாப்பு வழங்கியுள்ளனர். பொலிஸாரின் கபடத்தனம், இந்தச் செயலில் இருந்து, குருநாகலில் நடத்தியது நாடகம் என்பது மட்டும் நன்கு புரிகின்றது.

ஞானசார தேரரையும் அவரது இயக்கத்தையும் பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்டு பொலிஸார் தமது பணிகளை முன்னெடுக்கின்றனரே ஒழிய முஸ்லிம்களின் அச்சத்தை நீக்க எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. புனித ரம்ழான் நெருங்க நெருங்க முஸ்லிம்கள் மீதான அடாவடித்தனங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. கடந்த வாரம் முஸ்லிம் சமூகத்தின் மீதும் பள்ளிவாசல்கள் மீதும் மோசமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மல்லவபிட்டியில் பள்ளிவாசலின் மீது, கடந்த 20 ஆம் திகதி இரவு பெற்றோல் குண்டுகளை வீசி சேதப்படுத்தியுள்ளனர். எல்பிட்டியில் உள்ள முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான வியாபாரத்தளமொன்று நேற்று முன்தினம் காலை தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சட்டமும் ஒழுங்கும் செத்துக்கிடப்பதாகவே நாங்கள் கருதுகின்றோம். எனவே, இனவாதத்தின் ஊற்றுக்கண்ணான ஞானசார தேரரை உடன் கைது செய்ய வேண்டுமென இந்த அரசின் பங்காளிக் கட்சியென்ற வகையிலும் அமைச்சர் என்ற வகையிலும் பொறுப்புடன் கோரிக்கை விடுக்கின்றேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

# சட்டவிரோத அகதிகளை வெளியேற்ற ஆஸி முடிவு



(கான்பரா)

அவுஸ்திரேலியா நாட்டில் சட்டவிரோதமாக தங்கியுள்ள சுமார் 7 ஆயிரத்து 500 அகதிகளை வெளியேற்ற முடிவு செய்துள்ளதாக அந்நாட்டு குடியுரிமை அமைச்சர் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா நாட்டில் இலங்கை, மியன்மார், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். முறையான காரணங்கள் இல்லாமல் சிலர் தங்கியிருப்பதாகவும் இவர்களால் அரசுக்கு பெரும் நிதிச்சுமை ஏற்படுவதாகவும் பல்வேறு கட்சியினர் குற்றஞ்சாட்டி வந்தனர்.

இந்நிலையில், அகதிகளாக பதிவு செய்வதற்கு போலியான காரணங்களை அளித்து சட்டவிரோதமாக அங்கு தங்கியிருக்கும் சுமார் 7 ஆயிரத்து 500 பேரை நாட்டை விட்டு வெளியேற்ற முடிவெடுத்துள்ளதாக அந்நாட்டு குடியுரிமை அமைச்சர் பீற்றர் டட்டன் தெரிவித்துள்ளார். 2013ஆம் ஆண்டுக்கு முன்னர் ஐந்தாண்டு காலத்தில் வந்த சுமார் 50 ஆயிரம் பேரில் 20 ஆயிரம் பேருக்கு அப்போதைய தொழிலாளர் கட்சி அரசு புகலிடம் அளிக்க முடிவு செய்தது. மேலும் 30ஆயிரம் பேரின் நிலை குறித்து ஐயம் எழுப்பியிருந்தது. இந்நிலையில், அவர்களில் சுமார் 7ஆயிரத்து 500 பேர் முறையான காரணம் இல்லாமல் அகதிகள் அந்தஸ்து பெற முயல்வதாகத் தெரிய வந்துள்ளதால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் முடிந்துவிட்டது மீறல்கள் தொடர்கின்றன



இலங்கையில் நடந்து முடிந்த குருதி தோய்ந்த உள்நாட்டு யுத்தத்தின் எட்டாவது ஆண்டு கடந்த வெள்ளியன்று நிறைவடைந்தது.

இந்த யுத்தத்தின் போது காணாமற்போன உறவுகளை இவர்களின் குடும்பத்தவர்கள் தேடிக்கொண்டிருக்கும் அதேவேளையில் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் உள்ள தமது நிலங்களை விடுவிக்குமாறும் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதுமட்டுமல்லாது, இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் கடலுக்குச் செல்வது தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் இந்தத் தடையை நீக்குமாறு கோரியும் தமிழ் மீனவர்கள் போராட்டம் நடத்துகின்றனர். போரின் போது தமது கணவன்மாரை இழந்த பெண்கள் தமது குடும்பங்களைப் பராமரிப்பதிலும்



ஊனமுற்றோர் எவ்வித தொழிலுமின்றியும் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மக்கள் நிச்சயமற்ற உணர்வுடன் வாழ்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

போரின் போது இறந்த இலங்கை இராணுவ வீரர்களின் குடும்பத்தவர்கள் கடந்த வெள்ளியன்று கொழும்பிலுள்ள யுத்த நினைவாலயத்தில் தமது வணக்கத்தைச் செலுத்தினர். இந்த நிகழ்விற்கு இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் வருகை தந்திருந்தார்.

இறுதி யுத்தம் இடம்பெற்ற போர் வலயத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்திற்கு அருகில் தமிழ் மக்கள் நினைவு வணக்கம் செலுத்தினர்.

இதுமட்டுமல்லாது தமிழ் மக்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கின் பல இடங்களிலும் போரின் போது இறந்தவர்களை நினைவு கூர்ந்து வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததிலிருந்து வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாவிட்டாலும் கூட வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளதாக வடக்கிலுள்ள தமிழ் மக்கள் முறையிட்டுள்ளனர்.

ஆனால் தொடர்ந்தும் இராணுவத்தினரின் பலத்தை அதிகரிக்கவுள்ளதாக வெள்ளியன்று வணக்க நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.



தேசிய பாதுகாப்பு மீது அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது. எமது முப்படைகளையும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எப்போதும் எடுப்போம்.

கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் எமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்' என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

போரை வென்றெடுத்த அதிகாரம்மிக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து 2015 தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேன மீது மக்கள் அதீத நம்பிக்கை வைத்திருந்தனர்.

மகிந்த ராஜபக்ஷ மீது மக்கள் கொண்டிருந்த கோபத்தை விட தற்போதைய அரசாங்கத்தின் மீதே மக்கள் அதிக கோபம் கொண்டுள்ளனர்.

ஏனெனில் ராஜபக்ஷ தமக்காக எந்தவொரு நல்லதையும் செய்வார் என மக்கள் எதிர்பார்க்கவில்லை' என வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காகப் பணியாற்றும் ரி.பரந்தாமன் தெரிவித்தார்.

சிங்கள பெரும்பான்மை அரசாங்கம் தமக்காக எதையும் தரப்போவதில்லை என்பது தொடர்பாக மக்கள் மத்தியில் அவநம்பிக்கை கள் காணப்படுகின்றன' என பரந்தாமன் தெரிவித்தார்.

போரின் போது காணாமற்போன பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக தாம் கண்டறிந்து கூறுவதாக தற்போதைய அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் இவற்றை இன்னமும் நிறைவேற்றவில்லை.

போரின் இறுதிநாட்களில் தம்மிடம் ஒப்படைக்குமாறு இலங்கை இராணுவத்தினர் கூறியமையாலேயே தாம் தமது உறவுகளை அவர்களிடம் ஒப்படைத்ததாக காணாமற் போனோரின் உறவினர் கூறுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், அரசாங்கத்தால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரணை செய்வதற்கான நீதிப் பொறிமுறை இதுவரையிலும் அமைக்கப்படவில்லை.

புலிகள் அமைப்புடன் தொடர்புபட்டவர்கள் என்கின்ற குற்றச்சாட்டின் பேரில் பலர் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாக எவ்வித குற்றங்களும் உறுதிப்படுத்தப்படாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வித குற்றங்களுமின்றி சந்தேகத்தின் பேரில் தடுத்து வைப்பதற்கான அனுமதியை வழங்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் தற்போதும் நடைமுறையிலுள்ளது. இந்த நாட்டை தமிழ்ப் புலிகளிடமிருந்து பாதுகாத்த இலங்கை இராணுவத்தினருக்கு தண்டனை வழங்குவதற்கு தான் ஒருபோதும் அனுமதியேன் என அடிக்கடி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்து வருகிறார்.


போரின் போது பொது மக்கள் மற்றும் வைத்திய சாலைகள் மீது கண்மூடித்தனமாக எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டமை மற்றும் போர் வலயத்திற்குள் அகப்பட்டுத் தவித்த பல ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு உணவு மற்றும் மருந்து போன்றவற்றை வழங்காது தடுத்து வைத்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன. போரின் இறுதிக்கட்டத்தில் மட்டும் 40,000 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஐ.நா உறுதிப்படுத்தியது.

இதேபோன்று சிறுவர்களை போரில் ஈடுபடுத்தியமை, மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் புலிகள் அமைப்பிற்கு எதிராக முன்வைக்கப்பட்டன.

போரின் போது பல்வேறு மீறல்களில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காது தொடர்ந்தும் இவர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது தேசிய பாதுகாப்பு மிக்க நாடாக இலங்கையை மாற்றுவதற்கான எவ்வித முயற்சியையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என அனைத்துலக நெருக்கடிகள் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்தும் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளமை மற்றும் போர் மீறல்கள் தொடர்பாக எவ்வித விசாரணையும் முன்னெடுக்கப்படாமை போன்றன பல தமிழ் மக்களின் தேசிய உணர்வுகளை மேலும் பலப்படுத்துவதற்கும் சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களுடன் குழப்பங்களை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும் என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிராந்திய சுயாட்சியை வழங்குவதில் அரசாங்கம் தொடர்ந்தும் காலத்தை இழுத்தடிப்பதானது நாட்டில் அமைதியின்மை ஏற்படவும் மோதல்கள் ஏற்படவும் வழிவகுக்கும் எனவும் அனைத்துலக நெருக்கடிகள் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



ஆங்கிலத்தில் – KRISHAN FRANCIS
வழிமூலம் – ASSOCIATED PRESS
மொழியாக்கம் – நித்தியபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதைக்கிற கழுதையே உழைக்கும்

குருதேவா! ஜமீன்தார் ஜம்புலிங்கம் வீட்டில் துணி துவைப்பதற்கு ஆள் தேவையாம். அந்த வேலையைச் செய்தால் என்ன? என்று சீடர்கள் கேட்டனர்.

துணி துவைக்கிற தொழிலுக்குப் பொதி சுமக்கும் கழுதை வைத்திருக்க வேண்டும். நம்மிடம் அது இல்லையே, என்ன செய்வது? என்றார் பரமார்த்தர்.

கழுதை இல்லாவிட்டால் என்ன? அதற்குப் பதில், தான் நாங்கள் இருக்கிறோமே! என்று சீடர்கள் கூறினர்.

இருந்தாலும், நிஜமான கழுதை இருந்தால் நல்லது! நல்ல கழுதையாக ஒன்று வாங்கி வாருங்கள், என்று உத்தரவிட்டார், பரமார்த்த குரு.

அன்று மாலையே அவர் மடத்துக்கு கழுதை ஒன்று வந்து சேர்ந்தது.

கழுதையைப் பார்வையிட்ட பரமார்த்தர், அதன் வாலைப் பிடித்து முறுக்கிப் பார்த்தார்! கோபம் கொண்ட கழுதை, விலுக் கென்று ஒரு உதை விட்டது!

ஐயோ! என்று அலறியபடி தூரப் போய் விழுந்தார் பரமார்த்தர். முட்டாள்களே! என் பெருமைகளைப் பற்றி கழுதையிடம் ஒன்றுமே சொல்ல வில்லையா? என்று கோபமாகக் கேட்டார்.

குருதேவா! உங்களைப் பற்றி எல்லா விஷயங்களையும் தெளிவாக எடுத்துச் சொன்னோம்! அதனால்தான் உதைத்ததோ என்னவோ! என்றான் மடையன்.

ஆமாம் குருவே! அப்படியும் இருக்கலாம். என்று ஒத்து ஊதினான், மட்டி.

பரவாயில்லை. அடிக்கிற கைதான் அணைக்கும். அதுபோல் உதைக்கிற கழுதைதான் உண்மையாய் உழைக்கும். ஆகையால் இந்தக் கழுதையே இருக்கட்டும்! என்றார் பரமார்த்தர்.

குருவும் சீடர்களும் கழுதை வைத்திருப்பதை அறிந்த உள்ளூர் திருடன், அதை எப்படியாவது திருடிச் செல்ல திட்டமிட்டான்.

ஒருநாள், கழுதையின் கழுத்தில் கட்டப்பட்டு இருந்த கயிற்றை அவிழ்த்துக் கொண்டு இருந்தான், திருடன். ஆனால் அதற்குள் சீடர்கள் வரும் சப்தம் கேட்கவே அவசரம் அவசரமாகக் கழுதையை மட்டும் தூர ஓட்டிவிட்டு, அதன் இடத்தில் தான் நின்று கொண்டான்.

வெளியே வந்து பார்த்த சீடர்களுக்கு வியப்பும் அதிர்ச்சியுமாக இருந்தது.

இதென்ன? கழுதை இருந்த இடத்தில், மனிதன் இருக்கிறானே! என்றான் மூடன்.

ஒருவேளை இது மாயமந்திரம் தெரிந்த கழுதையாக இருக்குமோ! எனச் சந்தேகப்பட்டான் மண்டு.

அதற்குள் பரமார்த்தரும் வந்து சேர்ந்தார். உன்னைக் கழுதையாகத்தானே வாங்கி வந்தோம். நீ எப்படி மனிதமாக மாறினாய்? என்று கேட்டான் முட்டாள்.

நான் முதலில் மனிதனாகத்தான் இருந்தேன். ஒரு முனிவரின் கோபத்துக்கு ஆளாகி விட்டேன். அவர்தான் என்னைக் கழுதையாகப் போகும்படிச் சாபம் இட்டார்.. இப்போது சாபம் நீங்கி விட்டதால் மறுபடி மனிதனாக மாறி விட்டேன்! என்று புளுகினான், திருடன்.

திருடனின் பொய்யைப் புரிந்து கொள்ளாத பரமார்த்தர், மனிதனைக் கழுதையாக மாற்றியதால் தப்பித்தோம். அதே முனிவர் சிங்கத்தையோ, புலியையோ கழுதையாக மாற்றியிருந்தால் இந்நேரம் நம்மையெல்லாம் சாப்பிட்டிருக்கும். நல்லகாலம்! தப்பித்தோம்! என்று மகிழ்ந்தார்.



சீடர்களும், விட்டது தொல்லை, என்று மகிழ்ந்தனர்.

கழுதை இல்லாமலேயே ஜமீன்தார் வீட்டில் வேலைக்குச் சேர்ந்த சீடர்கள், துணிகளை மூட்டை கட்டி, பாசி பிடித்த ஒரு குட்டைக்கு எடுத்துச் சென்றார்கள்.

வெள்ளை வெளேர் என்று இருக்க வேண்டும் என்பது ஜமீன்தார் கட்டளை என்று சொல்லியபடி, வெவ்வேறு நிறங்களில் இருந்த துணிகளைக் கல்லில் தேய்த்துக் கிழித்தான், மட்டி.

வெள்ளையாக இருந்த வேஷ்டியில் பாசியை தோய்த்துப் பச்சை நிறமாக மாற்றினான் மடையன்.

ஒரே துணியாக இருந்ததைக் கசக்கிப் பிழிந்து முறுக்கி, பல துண்டுகளாக ஆக்கினார்கள், முட்டாளும் மூடனும்.

அப்பாடா! ஒரு வழியாக நன்றாக வெளுத்துக் கட்டி விட்டோம்! என்று மகிழ்ந்தபடி ஜமீன்தார் வீட்டுக்குப் புறப்பட்டனர்.

நீங்கள் ஒரு துணி போட்டீர்கள். நான் அதையே பத்தாக்கிக் கொண்டு வந்திருக்கிறேன்! என்று பெருமை அடித்துக் கொண்டான், முட்டாள்!

வெள்ளையைப் பச்சையாக்கி விட்டேன்! என்று குதித்தான் மடையன்.

சீடர்கள் கொண்டு வந்த துணிகளைப் பிரித்துப் பார்த்த ஜமீன்தாருக்கு மயக்கமே வந்து விடும் போலிருந்தது.

அடப்பாவிகளா! முழுசாய் இருந்ததை எல்லாம் கிழித்துக் கோவணத் துணிகளாய் ஆக்கி விட்டீர்களே புத்திகெட்டவர்களை நம்பி இந்தக் காரியத்தைச் செய்யச் சொன்னேனே! என்று புலம்பியபடி சீடர்களை விரட்டி அடித்தார்.

நம் தொழிலையும், திறமையை யாருமே புரிந்து கொள்ள மாட்டார்கள் போலிருக்கிறதே! என்று வருத்தப்பட்டபடி மடத்துக்கே திரும்பினார்கள், ஐந்து சீடர்களும்.




- 1430 - ஜோன் ஒஃப் ஆர்க் பிரான்சில் பேர்கண்டியரினால் கைது செய்யப் பட்டாள்.
- 1568 - நெதர்லாந்து ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1805 - நெப்போலியன் பொனபார்ட் இத்தாலி யின் மன்னனாக முடி சூடினான்.
- 1813 - தென்னமெரிக்க விடுதலைப் போராட்டத் தலைவர் சிமோன் பொலிவார் வெனிசு வேலாவின் முற்றுகைக்குத் தலைமை வகித்துச் சென்று "விடுவிப்பாளர்" எனத் தன்னை அறிவித்தார்.
- 1846 - மெக்சிக்கோ ஐக்கிய அமெரிக்கா மீது போரை அறிவித்தது.
- 1865 - வாஷிங்டன், டிசியில் அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவுற்றமை கொண் டாடப்பட்டது.
- 1915 - முதலாம் உலகப் போர்: இத்தாலி ஆஸ்திரியா-ஹங்கேரி மீது போரை அறிவித்தது.
- 1929 - மிக்கி மவுசின் முதலாவது பேசும் கார்ட்டூன் "கார்னிவல் கிட்" வெளிவந்தது.
- 1949 - ஜெர்மன் கூட்டாட்சி குடியரசு அமைக் கப்பட்டது.
- 1951 - திபெத்தின் விடுதலைக்கான 17 அம்ச உடன்பாட்டில் திபெத்தியர்கள் கட்டா யமாகக் கைச்சாத்திட வைக்கப்பட்டார்கள்.
- 1958 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்மதி எக்ஸ்புளோரர் 1 தனது பூமி யுடனான தொடர்பை இழந்தது.
- 1998 - புனித வெள்ளி உடன்பாட்டிற்கு ஆதரவாக வட அயர்லாந்து மக்களின் 71 விழுக்காட்டினர் வாக்களித்தனர்.

### பிறப்புகள்

- 1707 - கரோலஸ் லின்னேயஸ், தற்கால வாழ்சூழலியலின் முன்னோடி (இ. 1778)
- 1920 - காயத்திரி தேவி, ஜெய்ப்பூர் மகாராணி (இ. 2009)
- 1922 - பாலா தம்பு, இலங்கை இடதுசாரித் தொழிற்சங்கவாதி (இ. 2014)
- 1951 - அனத்தோலி கார்ப்பொவ், ரஷ்ய சதுரங்க வீரர்.

### இறப்புகள்

- 1906 - ஹென்ரிக் இப்சன், நவீன நாடக இலக்கியத்தின் தந்தை (பி. 1828)
- 1997 - அல்பிரட் ஹேர்ஷ்லி, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1908)
- 1981 - உடுமலை நாராயணகவி தமிழ்த் [illegible]

### சிறப்பு நாள்

- உலக ஆமைகள் தினம்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 80 | 120 | 160 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 80 | 120 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 240 | 300 | 220 | 250 | 200 | 200 |
| தக்காளி | 120 | 160 | 80 | 220 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 80 | 60 | 80 | 80 | 100 |
| கோவா | 160 | 200 | 140 | 160 | 160 | 120 |
| கரட் | 230 | 400 | 200 | 250 | 400 | 250 |
| பூசணி | 70 | 100 | 40 | 60 | 80 | 60 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 50 | 100 | 40 | 40 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 280 | 280 | 300 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 300 | 140 | 200 | 160 | 180 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 70 | 120 | 120 | 100 |
| பயற்றங்காய் | 180 | 100 | 50 | 80 | 80 | 120 |
| லீக்ஸ் | 90 | 100 | 70 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 100 | 100 | 120 | 140 | 140 |
| கறிமிளகாய் | 180 | 200 | 100 | — | 200 | 160 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 120 | 120 | 160 | 100 |
| போஞ்சி | 200 | 250 | 140 | 200 | 200 | 220 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 50 | — | 100 | 90 |
| கீரை-1பிடி | 30 | 50 | 20 | 40 | 30 | 25 |
| தேசிக்காய் | 50 | 80 | 50 | 80 | 40 | 80 |
| தேங்காய (ஒன்று) | 70 | 50 | 60 | 65 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 250 | 400 | — | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 200 | — | — | 320 | — |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 80 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | — | — | — | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனைக்கு விளையாட்டு
சுண்டெலிக்கு சீவன் போகிறது.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வேலையற்ற பட்டதாரிகளின் அவலநிலை களைய முடியாதோ!

அரச நியமனம் வழங்குமாறு கோரி வட மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் நடத்தும் தொடர் போராட்டம் இன்று 85ஆவது நாளாக நீண்டு செல்கிறது.

85 நாட்களாக வேலையற்ற பட்டதாரிகள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர் எனும் போது, அவர்கள் வேலையில்லாமல் மிகப் பெரும் துன்பங்களை தத்தம் குடும்பங்களில் அனுபவிக்கின்றனர் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வசதி வாய்ப்புக்கள்; வேலை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் இருக்குமாக இருந்தால், 85 நாட்கள் என்ற நீண்ட நெடு நாள் போராட்டத்தை வேலையற்ற பட்டதாரிகள் முன்னெ த்துச் செல்ல மாட்டார்கள்.

ஆக, படித்துப் பட்டம் பெற்றதும் வேலை செய்யலாம். அவ்வாறு வேலை செய்வதன் மூலம் தங்கள் குடும்பத்தின் கஷ்டங்களை போக்கலாம் என்ற எதிர்பார்ப்புடனேயே பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றனர்.

ஆனால், பட்டம் பெற்றும் வேலைக்காக வருடக் கணக்கில் காத்திருப்பதென்பது மன நிலையை கடுமையாக பாதிக்கக்கூடியது.

பொருளியலில் பேசப்படும் மனித மூலதனம் என்பது உச்சமாகவும் திறமையாகவும் பயன் படுத்தப்பட வேண்டும்.

ஆனால் நடைமுறையில் எங்கள் வடபுலத்தில் மனித மூலதனம் என்பது கோரிக்கையற்று கிடக்கின்ற வேரில் பழுத்த பலா வகையாக இருப்பதைக் காண முடிகின்றது.

இதன் காரணமாகத்தான் வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு நியமனம் வழங்குமாறு கோரி தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

எனினும் அவர்களின் போராட்டம் 85ஆவது நாளைக் கடந்துள்ள நிலையில் அவர்கள் பற்றி யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. 85 நாட்களாக வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம் நடத்துவதென்பதை ஆட்சியாளர்கள் உதாசீனம் செய்வது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

இஃது வேலையற்ற பட்டதாரிகளின் வாழ்வியல் பிரச்சினை, சதா சந்திக்கக்கூடிய பொருளாதாரப் பிரச்சினையுடன் நெருங்கிய தொடர்புடையது.

ஆகையால் நீங்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்ற நினைப்பில் சம்பந்தப்பட்டவர்கள் பேசாதிருந்துவிட முடியாது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த போது தொடர் போராட்டம் நடத்தும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஒரு சரியான – நம்பிக்கையான உத்தரவாதத்தை வழங்கி அவர்களின் தொடர் போராட்டத்தை முடிவுறுத்தியிருக்க வேண்டும்.

இதைவிடுத்து இந்தப் பிரச்சினை தென் பகுதியிலும் உள்ளது. வேலையற்ற ஆயிரம் பட்டதாரிகளுக்கு வட மாகாணத்தில் நியமனம் வழங்கவுள்ளோம் எனக் கூறுவதானது ஒரு சாட்டுப்போக்காக இருக்க முடியுமேயன்றி,

போராட்டம் நடத்தும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நம்பிக்கை தரக்கூடிய உறுதிமொழியன்று.

எனவே வேலையற்ற பட்டதாரிகள் 85ஆவது நாளாக நடத்துகின்ற தொடர் போராட்டத்தை கண்டுகொள்ளாமல் இருப்பதை விடுத்து அவர்களுக்கு நியமனம் வழங்க சம்பந்தப்பட்ட சகலரும் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

## ஞானசார தேரரை கைது செய்ய அமைச்சர் சாகலவிடம் கோரிக்கை

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை கைது செய்யுமாறு ஸ்ரீலங்காவின் முஸ்லிம் தலைவர்கள் குழு ஒன்று சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் நேற்றுக் காலை நேரடியாக சந்தித்து ஸ்ரீலங்காவின் முஸ்லிம் தலைவர்கள் குழு இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

நாட்டில் நல்லிணக்கத்துடன் வாழும் முஸ்லிம்களை சீர்குலைக்க ஞானசார தேரர் முயற்சிப்பதாக அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் குறித்த முஸ்லிம் தலைவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிஸாட் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அப்துல் ரவூப் ஹக்கீம், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி உள்ளிட்ட முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (செ–11)

## கற்கை நிலையம் இடமாற்றம்

(கட்டுடை)

வடமாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற மும்மொழிக் கற்கை நிலையமானது இம்மாதம் முதல் இடமாற்றப்பட்டுள்ளது. இது வரை காலமும் G.P.S வீதி கல்வியங்காட்டில் இயங்கியது. தற்போது திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள யா/கலட்டி மெதடிஸ்த மிஷன் த.க.பாடசாலையிலுள்ள வளாகத்தில் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நிலையத்தினால் நடத்தப்படும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கான கற்றல் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கற்கை நெறிகள் யாவும் இலவசமாகவே நடத்தப் படுவதுடன் ஆர்வமுள்ள எவரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ளமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.(இ-102)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**எட்டு விதத் திருமணங்கள் என்பவை எவை?**

முந்தைய காலத்தில் பூவுலகத்திற்கும் மேலோகத்திற்கும் பயனுள்ளதாக எட்டு விதமான திருமணங்கள் நடைமுறையில் இருந்தன.




ப்ராமம், தெயவம், ஆர்ஷம், பிரஜாபத்யம், அசுரம், கந்தர்வம், ராட்சஸம், பைசாஸம் என்பவை அந்த எட்டுவிதத் திருமணங்கள் ஆகும்.

இவற்றில் பைசாஸம் மிகவும் அதர்மமும் வெறுக்கத்தக்கதுமாகும். முதல் ஆறு வகைத் திருமணங்கள் பிராமணன் ஏற்றுக் கொள்ளக்கூடிய தர்மங்களோடு கூடியவையாகும்.

பிராமணனுக்கு முதல் நான்கும் சத்திரியனுக்கு ராடசஸமும் வைசியனுக்கும் சூத்திரனுக்கும் அசுரம் மட்டுமே பிரபலம் என்றாலும் பிரஜாபத்யம், ராட்சஸம், கந்தர்வம் ஆகியவை அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தில புலோப்பளை, அல்லிப்பளை, ஆரத்தி நகர் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் பெரிய நீலாங்சேனை, இத்திக்கண்டல், சொர்ணபுரி, பாப்பா மோட்டை, அடம்பன், பரப்பாங் கண்டல், அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## 1103 கிலோகிராம் கழிவுத் தேயிலை இருவர் கைது

அனுமதிப் பத்திரமின்றி 1103 கிலோகிராம் கழிவுத் தேயிலையை கொண்டு சென்ற இருவரை நாவலப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட்டவளையிலிருந்து - கெலிஓயாவிற்கு டொல்பின் ரக வான் ஒன்றில் கொண்டு சென்ற போதே நேற்று முன்தினமிரவு நாவலப்பிட்டி பொலிஸாரினால் குறித்த வாகனம் சுற்றிவளைக்கப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நாவலப்பிட்டி கினிகத்தேன 2 ஆம் கட்டை பகுதியில் வைத்து குறித்த வானை மடகிசோதனையிட்ட போதே பொதி செய்யப்பட்ட 62 மூடைகள் கைப்பற்றப்பட்டன.

கம்பளை வெள்ளம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த இருவரை கைது செய்துள்ளதுடன் சந்தேக நபர்களையும் மீட்கப்பட்ட கழிவுத் தேயிலையுடன் நாவலப்பிட்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

## ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் நடத்தும் 41வது ஆண்டு நிறைவு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல. 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாண கல்லூரி பட்டதாரிகள் பிரிவில் (கொமர்ஷல் வங்கிக்கு அருகில்) இடம்பெறும். யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஏ. எஸ். அற்புதராஜ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்லுவல்கள், விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் வே. தவச்செல்வம், கௌரவ விருந்தினராக கிறீன்கிறாஸ் விடுதி உரிமையாளர் தி. ஜெகசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)




ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டிருந்தான் பரந்தாமன்.

தவவாழ்க்கை பூண்டிருந்த நாராயணன் என்னும் மகரிஷி ஒருவர் மாதவனைத் தரிசிப்பதற்காக வைகுந்தம் ஏகினார்.

நாராயண மகரிஷியைக் கண்டதும் கார்வண்ணன் முகத்தில் ஓர் கள்ளப் புன்னகை.

தவ சிரேஷ்டரே... தரணியில் சில காலம் தங்கியிருக்க வேண்டும் என்பது என் இச்சை. வைகுந்தத்தைக் காட்டிலும் வளமாக இடம் ஒன்று பார்த்து வந்து சொல்லுங்களேன் என்று அவரைப் பணித்தான்.

மகரிஷி மகிழ்ந்தார். கடவுள் காலால் இட்ட பணியைத் தலை மேல் சுமந்து தரணியைச் சுற்றி வந்தார்.

இறுதியில் குன்று ஒன்று கண்டார். அந்தக் குன்றின் மேனியெங்கும் மேகங்கள் கொஞ்சி விளையாடின. (தொடரும்)

## நாய்க்கடியிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்!

உறக்கத்திலிருக்கும் நாய்க்கு அருகில் வேகமாக ஓடிச் செல்லாதீர்கள். திடுக்குற்று விழிப்புறும் நாய் கடித்துவிட நேரிடலாம்.

**செல்லப்பிராணிகளுக்கு விலங்கின் விசர் நோய் தடுப்பூசியை கிரமமாக ஏற்றுவோம்.**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ மனிதனை அவனது உண்மை நிலைக்கு உயர்த்துவது இயற்கையை மீறும் முயற்சியே. இயற்கைக்கு இணங்குவதல்ல.

❖ பிறரது குற்றங்களைப் பற்றி ஒருபோதும் பேசாதே. அவை எவ்வளவு கெட்டவை. ஆனாலும் சரி அதனால் எந்தப் பயனும் என்றும் விளைவதில்லை. ஒருவனுடைய குற்றங்களைப் பற்றிப் பேசுவதால் அவனுக்கு ஒருநாளும் நீ உதவி செய்தவனாகமாட்டாய். மாறாக அவனுக்கும் கேடு செய்து உனக்கும் கேடு இழைத்துக் கொள்கிறாய்.

❖ புகை குடிக்கப் புகையிலையை ஒழுங்காகத் தயாரிக்கக் கூடியவனால்தான் ஒழுங்காகத் தியானிக்கவும் முடியும்.

❖ தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வெளியேயுள்ள எதற்கும் வசப்படமாட்டான். அவனுக்கு அதன் பின் அடிமைத்தனம் இல்லை. அவனது மனம் விடுதலை பெற்று விட்டது. அத்தகையவனே உலகத்தில் நன்றாக வாழும் தகுதி பெற்றவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணம்

# யாழ்.சென்றலைட்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனாகியது ஹாட்லியைற்ஸ் அணி






ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி நேற்று முன்தினம் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் மிகப் பிரமாண்டமாக இடம் பெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் சுற்றுத் தொடரில் ஹாட்லியைற்ஸ் அணியும் யாழ். சென்றலைட்ஸ் அணியும் கிண்ணத்தை கைப்பற்ற மோதிக் கொண்டனர். முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 35.5 பந்துப் பறிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆரம்ப வீரர் மணிமாறனின் சிறந்த தொடக்கமும் மத்திய வரிசையில் பிரசாத்தின் அற்புதமான அதிரடி ஆட்டமும் கைகொடுக்க கௌரவமான இலக்கை எட்டியது ஹாட்லி யைற்ஸ் அணி.

மணிமாறன் 37 ஓட்டங்களையும் பிரசாத் 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

பின் சுலபமான இலக்கை விரட்டி கிண்ணத்தை தட்டிப் பறிக்கும் முனைப்புடன் களம் கண்ட சென்றலைட்ஸ் அணிக்கு ஆரம்பத்திலேயே வயிற்றில் புளியைக் கரைத்தனர்ஹாட்லியைற்ஸ் அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர்களான பிரதீப் மற்றும் சாகித்யன்.

இவர்களது வேகத்தில் சென்றலைட்ஸ் அணி 50 ஓட்டங்களைக் கடப்பதற்குள் முக்கிய 6 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தனர்.

எனினும் ஆட்டத்தை தனி ஆளாக கையில் எடுத்துக் கொண்ட டர்வினின் துடுப்பாட்டம் போட்டியின் முடிவை சென்றலைட்ஸ் அணிக்கு சாதகமாக மாற்றியது.

பின் அனுபவ வீரர் நிஷாந்தன் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தி மீண்டும் போட்டியினை ஹாட்லியைற்ஸ் கைகளுக்கு மாற்றினார்.

எனினும் டர்வினின் சிறந்த அதிரடி ஆட்டம் தொடர ஒரு கட்டத்தில் 147/8 என்ற பரபரப்பான இறுதிக் கட்டத்தை எட்டியது போட்டி.

தனது அற்புதமான சுழலில் டர்வின் மற்றும் இறுதி வீரரை வெளியேற்றி ஹாட்லியைற்ஸ் அணியின் கிண்ணக் கனவை நினைவாக்கினார் பிரசாத்.

பிரதீப் மற்றும் பிரசாத் தலா 3 விக்கெட்டுக்களையும் சாகித்யன் மற்றும் நிசாந்தன் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி அ[illegible] யின் வெற்றிக்கு வித்திட்டனர்.

போட்டியின் சிறந்த வீரராக பிரசாத்தும் சுற்றுத் தொடரின் சிறந்த வீரராக சாகித்யனும் தெரிவுசெய்யப்பட்டனர். (க)

# குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுத் தொடர்

## பலாலி விண்மீன் சம்பியன்






பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய அமரர் 'மாமனிதர் குமார் பொன்னம்பலம்' ஞாபகார்த்த மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி 20.05.2017 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு கழக ம்மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் அணி மோதியது.

முற்பாதியாட்டத்தில் 7 வது நிமிடத்தில் பொம்மர்ஸ் அணிக்கு கிடைக்கப்பெற்ற தண்ட உதையினைப் பயன்படுத்தி பொம்மர்ஸ் அணி முதலாவது கோலினைப் பதிவு செய்தது. பதிலுக்கு பொம்மர்ஸ் அணியின் தற்காப்பு வியூகங்களை உடைத்து டேமியனால் முதலாவது கோல் விண்மீன் சார்பாக பதிவு செய்யப்பட்டது. 1:1 என்ற சமநிலையில் முற்பாதியாட்டம் முடிவுக்கு வந்தது.

பிற்பாதியாட்டத்தில் இரு அணிகளின் கோல்போடும் முயற்சிகள் பின்கள வீரர்களால் .முறியடிக்கப்பட்டன.

இறுதி 4 நிமிடம் இருக்கும் போது யூட்கெனடி அதிரடியாக கோல் போட்டு விண்மீன் அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். போட்டி முடிவில் 02:01 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது பலாலி விண்மீன்.

ஆட்ட நாயகனாக விண்மீன் அணித்தலைவர் டேமியன் தெரிவு செய்யப்பட்டார். (க)





**வடக்கு மாகாண பாடசாலைக்கு இடையிலான எல்லே போட்டியில் ஆண்,பெண் இரண்டிலும் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது சாவகச்சேரி இந்து. அவ் அணியைப் படங்களில் காணலாம்.**

# கஜகோபன்,எடிசன் சிறப்பாட்டம்

## மன்னார் கில்லறி அணியை வீழ்த்தியது ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்



கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து நடத்துகின்ற அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரின் (20.05.2017) அன்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதியில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் மன்னார் கில்லறி அணியுடன் மோதியது.

ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய றோயல் விளையாட்டுக் கழகம் நட்சத்திர வீரர் கஜகோபன், எடிசன் ஆகியோரின் அதிரடி ஆட்டத்தின் மூலம் 6 : 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குள் நுழைந்தது.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

றோயல் விளையாட்டுக்கழகம் சார்பாக கஜகோபன், எடிசன் ஆகியோர் தலா இரண்டு கோல்களை அடித்தனர். கானுயன்.நிதர்சன் தலா ஒவ்வொரு கோல்களை பெற்றனர். முன்னர் நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் மன்னார் சென்லூசியா அணி 4 : 2 என்ற கோல்கணக்கில் கிளிநொச்சி உதயதாரகை அணியை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் மோதல்...

க்கழகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றுள்ளது. இந்த சம்பவத்தில் ஐந்து மாணவர்கள் காயமடைந்த நிலையில் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகவும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் முதலாம் வருட கலைப்பீட மாணவர்களை வேட்டி அணிந்து வருமாறு இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்கள் கூறியுள்ளனர். எனினும் இரண்டாம் வருட மாணவர்கள் இவ்வாறு பகிடிவதை செய்ய முடியாது என மூன்றாம் வருட கலைப்பீட மாணவர்கள் கூறியுள்ளனர். சில மாணவர்கள் மூன்றாம் வருட மாணவர்களின் பணிற்பிற்கு கட்டுப்படாது செயற்பட்டுள்ளனர். இதன் காரணமாக கலைப்பீட இரண்டாம் மூன்றாம் வருட மாணவர்களுக்கிடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த கருத்து மோதல் மேலும் முற்றியதை அடுத்து இரு மாணவர குழுக்களுக்கிடையில கடும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் உச்ச கட்டமாக இரண்டாம் வருட மாணவர்களின் விரிவுரைகள் நடைபெற்றுகொண்டிருக்கும் போதே மூன்றாம் வருட மாணவர்கள் விரிவுரை அறைக்குள் புகுந்து கடுமையாக தாக்கியுள்ளனர். இதில் ஐந்து பேர் வரையில் காயமடைந்த நிலையில் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் நேற்றுவரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு எதுவும் செய்யப்படாத நிலையில், தாக்குதல்மேற்கொண்ட மாணவர்கள் மீது பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுக்கும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக விரிவுரையாளர் முன்பாகவே விரிவுரை அறைக்குள் மாணவர்கள் மோதிக்கொண்ட அளவிற்கு நிலைமை சென்றுள்ளதால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (செ-4)

## அச்சுறுத்தல் குறித்து...

தமக்கு அறிவித்தல் ஒன்றை தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மே 12ஆம் திகதி செம்மணியில் ஆரம்பமாகிய முள்ளிவாய்க்கால் வாரம், மே 15 ஆம் திகதி குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்ட குமுதினி படுகொலை நினைவு தூபியிலும், 16 ஆம் திகதி வவுனியாவிலும், கிளிநொச்சிலும், 17ஆம் திகதி மன்னாரிலும்,

இறுதி நாளான 18ஆம் திகதி அன்று முள்ளிவாய்க்காலில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நினைவு தின நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நினைவு நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான மக்களும் அரசியல்கட்சி பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் ஒட்டுமொத்த தமிழர்களும் துக்க தினமாக அனுஷ்டிக்கும் இந்த நினைவு நாளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இனப்படுகொலையை அரங்கேற்றும் போது அதற்கு ஆதரவாக இருந்த இந்நாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மே மாதம் 18ஆம் திகதி முல்லைத்தீவில் வறுமை ஒழிப்பு திட்டத்திற்காக வருகை தர திட்டமிட்டிருந்தார். பின்னர் எமது எதிர்ப்பு காரணமாக அது கைவிடப்பட்டது.

இது தவிர எம்மால் முள்ளிவாய்க்கால் வாரம் அனுஷ்டிக்கப்பட்டபோது எமக்கு தொலைபேசி ஊடக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. ஜாதிக ஹெல உறுமய, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், என பலரும் எம்மை அச்சுறுத்தும் வகையிலும் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். இவை எல்லாமே அச்சுறுத்தல்கள் தான்.

முள்ளிவாய்க்காலில் நினைவுக் கற்களை செதுக்கி நினைவு நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்த அருட்தந்தை இ.எழில்ராஜன் விசாரணை என்ற பெயரில் இரு தடவைகள் அழைக்கப்பட்டு மனதளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். இவ்வாறு வணக்கத்துக்குரிய அருட்தந்தை மற்றும் மக்கள் பிரதிநிதிகளான எம்மையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குகின்றனர் என்றால் சாதாரண மக்களின் நிலை எப்படி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்.

மேலும் முள்ளிவாய்க்கால் தினத்தை நினைவு கூர்ந்தார்கள் என்ற காரணத்துக்காக 8 இளைஞர்கள் தென்னிலங்கை நிறுவனம் ஒன்றினால் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதெல்லாம் ஒருதிட்டமிட்ட ஒடுக்கு முறைகளாகவே உள்ளன. இந்த அச்சுறுத்தல்கள் எப்போதும் தொடர்ந்து கொண்டேயுள்ளன. மகிந்த மைத்திரி அரசாங்கங்கள் இதற்கு விதிவிலக்கு அல்ல என்றார் சிவாஜிலிங்கம். (செ-4)

## குற்ற ஒப்புதல்...

கொழும்பு விசேட மேல் நீதிமன்று நேற்றைய தினம் நிராகரித்துள்ளது.

இந்த வழக்கு தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி பகுதியை சேர்ந்த ஜெயராம் ராமநாதன் என்பவர் கடந்த 2008ஆம் ஆண்டு புறக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார் விசாரணையின் போது கடும் தாக்குதலை மேற்கொண்ட இரகசிய பொலிஸார் மேலதிக விசாரணைக்காக அவரை பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பின்னர் பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிஸார் எதிரியிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்றுள்ளனர்.

குறித்த நபருக்கு எதிராக சட்டமா அதிபரினால் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் 2010ஆம் ஆண்டு நீதிமன்றில் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. ஜப்பான் அரசினால் நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு தொட்டலங்க பாலத்திற்கு வெடி குண்டு வைத்து தகர்க்க திட்டம் தீட்டியதாக முதல் குற்றச்சாட்டும், கடும் சேதம் விளைவிக்க கூடிய குண்டுகளை உடமையில் வைத்திருந்ததாக இரண்டாம் குற்றச் சாட்டும் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் முக்கிய சான்றாக எதிரியினால் சுயவிருப்பில் பொலிஸாருக்கு வழங்கப்பட்டதாக தெரிவித்து அரச தரப்பால் முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகப் வழங்கப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்த விசாரணை நடத்தப்பட்டது.

இந்த விசாரணையில் எதிரியின் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி தவராசா தனது வாதத்தில், பொலிஸாரின் சித்திரவதையினால் எதிரிக்கு ஒன்பது காயங்கள் ஏற்பட்டுள்ளதாக சட்ட மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதை நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தார் இதன் அடிப்படையில் குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை கொழும்பு மேல் நீதிமன்று ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்து அதை நிராகரித்துள்ளது.

எனினும் குறித்த எதிரிக்கு மேலும் 6 வழக்குகள் நீதிமன்றில் நடைபெற்று வருவதால் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார். (செ-9)

## யாழ்தேவி மோதி...

தலைவரும்,

இம்முறை வணிக பிரிவில் உயர்தரப் பரீட்சை எழுதவிருந்த பிஷான் ஜயவர்தன என்ற (18 வயது) மாணவரே இதில் உயிரிழந்தவராவார்.

இவர் அனுராதரபுரம் புபுது மாவத்தையில் வசிக்கும் மாணவன் எனவும் அயலவர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த மாணவனின் சடலம் அதே ரயிலில், ரயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு பாடசாலை அதிபர் உட்பட பல ஆசிரியர்கள் மற்றும் அனுராதபுரம் பொலிஸ் தலைமையக அதிகாரிகள் வருகை தந்திருந்தனர்.

இந்த சம்பவம் தற்கொலையா அல்லது விபத்தாக இருக்கலாம் என சந்தேகிக்கும் அனுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## ஜனாதிபதி இன்று...

மெல்கம் டேர்ன்புல்ன் விசேட அழைப்பை ஏற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று அவுஸ்திரேலியா பயணமாகிறார்.

இதற்கு முன்னர் 1954ஆம் ஆண்டு முன்னாள் பிரதமரான ஜோன் கொத்தலாவல அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்திருந்தார்.

அப்போது இலங்கையின் அரச தலைவராக இருந்தவர் பிரித்தானியாவின் இராணி என்பதால் ஜோன் கொத்தலாவல அவர்களுக்கு அரச விஜயத்திற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதுடன், அவ்விஜயம் ஒரு உத்தியோகபூர்வ விஜயமாகவே கருதப்படுகிறது. அந்தவகையில் சுதந்திர இலங்கையின் எந்தவொரு அரச தலைவருக்கும் இதற்கு முன்னர் அவுஸ்திரேலிய அரசாங்கத்திடமிருந்து அரச விஜயத்திற்கான அழைப்பு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. அவுஸ்திரேலிய அரசாங்கத்திடமிருந்து இலங்கை அரச தலைவர் ஒருவருக்கு கிடைக்கப்பெற்றிருக்கும் முதலாவது அழைப்பு என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இவ் விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான ஏழு தசாப்தகால உறவுகள் கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த காலத்தில் பெரும்பாலான சர்வதேச மன்றங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவுஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டேர்ன்புல்லிற்கும் இடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

பாதுகாப்புத் துறையில் இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருந்து வருகிறது. கடற் பயணங்கள் மட்டுமன்றி மனிதக் கடத்தல்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் இதில் அடங்கும். சமுத்திர பாதுகாப்பு மற்றும் மனிதக் கடத்தல் நடவடிக்கைகளை தடுக்கும் நடவடிக்கைகளுக்கு அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்புகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அண்மையில் வெளியிடப்பட்ட அவுஸ்திரேலிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும் விவசாயம், பண்ணை உற்பத்திகள், கல்வி மற்றும் விளையாட்டு போன்ற துறைகளிலும் இரு நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்துவருவதுடன், இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் செய்து கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளிலும் கடந்த காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அவுஸ்திரேலிய முதலீடுகளை நாட்டுக்கு கொண்டு வருதல் மற்றும் இலங்கைக்கு நன்மை பயக்கும் இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்தல் என்பன ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது முக்கிய கவனத்தைப்பெறும். அந்த வகையில் ஜனாதிபதியின் இவ் விஜயத்தின் போது இரண்டு நாடுகளுக்கும் இடையில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

நாட்டின் விவசாய அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்தி வரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த விஜயத்தின்போது அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் பொதுநலவாய அமைப்பின் அனுசரணையில் தாபிக்கப்பட்டுள்ள உணவுப்பொருள் ஆய்வுக்கூடத்தையும் பார்வையிடவுள்ளார்.

சுற்றாடல் துறை அமைச்சர் என்ற வகையில் நாட்டின் வனப் பரவலை அதிகரிப்பதற்காக பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ள ஜனாதிபதி, அது தொடர்பாக அவுஸ்திரேலியாவின் அனுபவங்களை அறிந்துகொள்வதற்காக கென்பராவில் உள்ள பிரபல தாவரப் பூங்காவையும் பார்வையிடவுள்ளார். (செ-11)

## விடுதலைப் புலி...

பினராக இருந்த கே.பி என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைக் கூறியுள்ளார்.

மேலும், எம்.ஜீ.ஆர் வழங்கிய பெரும்பாலான நிதி, ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவே பயன்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், லெபனான் உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் புலிகளுக்காக ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும தெரிவித்த அவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் எழுச்சிக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தைய நாடுகளும் போதுமான வாய்ப்புக்களை வழங்கியதாகவும் தெரிவித்தார்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவுமாறு இந்திய உளவுப் பிரிவான றோவிற்கு இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி முதன்முதலாக பணித்திருந்தார் என குறிப்பிட்ட கேபி, அதுவே புலிகள் அமைப்பு மீதான இந்தியாவின் ஈடுபாட்டின் ஆரம்பப் புள்ளி எனவும் தனது செவ்வியில் குறிப்பிட்டிருந்தார். (செ-11)

## 7500 அகதிகளை ...

அந்த நாட்டில் இலங்கை, மியன்மார், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை சேர்ந்த ஏராளமான அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

முறையான காரணங்கள் இல்லாமல் சிலர் தங்கியிருப்பதாகவும், இவர்களால் அரசுக்கு பெரும் நிதிச்சுமை ஏற்படுவதாகவும் பல்வேறு கட்சியினர் குற்றஞ்சாட்டி வந்தனர்.

இந்நிலையில், அகதிகளாக பதிவு செய்வதற்கு போலியான காரணங்களை அளித்து சட்டவிரோதமாக அங்கு தங்கியிருக்கும் சுமார 7 ஆயிரத்து 500 பேரை நாட்டை விட்டு வெளியேற்ற முடிவெடுத்துள்ளதாக அந்நாட்டு குடியுரிமை அமைச்சர் பீட்டர் டட்டன் தெரிவித்துள்ளார்.

2013-ம் ஆண்டுக்கு முன்னர் ஐந்தாண்டு காலத்தில் வந்த சுமார் 50 ஆயிரம் பேரில், 20 ஆயிரம் பேருக்கு அப்போதைய தொழிலாளர் கட்சி அரசு புகலிடம் அளிக்க முடிவு செய்தது.

மேலும் 30 ஆயிரம் பேரின் நிலை குறித்து ஐயம் எழுப்பியிருந்தது. இந்நிலையில், அவர்களில் சுமார் 7 ஆயிரத்து 500 பேர் முறையான காரணம் இல்லாமல் அகதிகள் அந்தஸ்து பெற முயல்வதாகத் தெரியவந்துள்ளதால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (செ-11)

## அஞ்சலி செய்வோரை...

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக் கற்களைச் சுற்றி பிரார்த்தனை செய்வதற்கு, இரு வாரங்களுக்கு தடைசெய்யும் கட்டளை ஒன்றை முல்லைத்தீவு நீதிமன்றம் கடந்த 17ஆம் திகதி புதன்கிழமை பிறப்பித்திருந்தது.

மக்களின் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் நாட்டின் கூறுபடாத நிலைக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் என்ற காரணத்திற்காகவே இந்தத் தடைவிதிக்கப்பட்டது.

இந்தக் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்தபோது, நினைவுக் கற்களில் பொறிக்கப்படவிருந்த பெயர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளின் பெயர்களும் இருக்கலாம் என்பதையிட்டு கரிசனை எழுந்ததாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூகா,

உயிரிழந்தவர் ஒருவருக்காக துயரப்படுவதற்கான உரிமை உலகளாவிய ரீதியில் சகலருக்கும் உரித்தானது, தங்களது பிள்ளைகள் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்தவர்களாக இருப்பினும், அவர்கள் உயிரிழந்தமை தொடர்பில் தாய், தந்தையர்கள் துயரடைவதைத் தடுக்க முடியாது.

அந்தவகையில் உயிரிழந்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களோ, அல்லவோ என இந்தத் தருவாயில் எமக்குத் தெரியாது.

துயரடைவதைத் தடுப்பது தமிழர்கள் இறந்த பின்னும் அவர்கள் குற்றம் புரிந்தவர்கள் என்பதற்கு ஒத்ததாகும்.

மேலும், இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு உட்படுத்துவது குறித்து எந்நேரமும் பேசிக்கொண்டிருக்கும் ஒரு நாட்டில், இவ்வாறு செய்வது முற்றிலும் அபத்தமானதொரு விடயம் என உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயற்திட்டத்தின் பணிப்பாளர் ஜஸ்மின் சூகா கூறியுள்ளார்.

நினைவுக்கற்கள் தொடர்பில் விபரம் அறிவதற்கென அருட்தந்தை எழில்ராஜன் இந்த வாரம் இரண்டாவது தடவையாக பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருக்கு சிங்களம் தெரியாத போதிலும், வவுனியா பொலிஸ் நிலையத்தில் விசாரணை மேற்கொண்ட பின்னர், சிங்களத்தில் எழுதப்பட்ட வாக்குமூலத்தில் அவரது ஒப்பம் பெறப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை பொலிஸ்மா அதிபரின் கட்டளையின் கீழ் எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அருட்தந்தை எழில்ராஜனின் பெற்றோரை பொலிஸார் தொடர்புகொண்டு அவரின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்து அச்சுறுத்த முயன்றுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் பெயர் பட்டியல்களை கையளிக்குமாறு அருட்தந்தை எழில்ராஜனிடம் மீண்டும் மீண்டும் கோரப்பட்டதுடன், அவர் பயங்கரவாதத்தை ஆதரவளிப்பவரா எனவும் வினவப்பட்டுள்ளார்.

இவ்வாறு செய்வது பக்கச்சார்பற்ற விசாரணை நடத்துவதற்குப் பதிலாக முறைப்பாடு செய்தவரை அச்சுறுத்தவே என்பது தெளிவாகும். அருட்தந்தையின் பெற்றோரிடம் சென்று அவரைப் பற்றி பொலிஸார் விசாரணை செய்வது மனசாட்சிக்கு ஒவ்வாத விடயமாகும்.

இவ்வாறு செய்வது அவருடைய குடும்பத்தினரை அச்சுறுவத்துவதன் மூலம் சகல தமிழ் செயற்பாட்டாளர்களையும் அச்சத்திற்கு உள்ளாக்குவதற்கு என்பதே தெளிவு என்றும் ஜஸ்மின் சூகா தெரிவித்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை ... யாழ்ப்பாண பொது நூலகம்

## சமூக நீதியை உறு...

முற்பகல் உத்தியோகபூர்வமாக திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

சமூக நீதி, மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், மக்களின் சுதந்திரம், ஜனநாயகம் ஆகிய அம்சங்கள் குறித்து தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பாரிய செயற்திட்டங்களை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அரசியலமைப்பின் 18-வது திருத்தம் நீக்கப்பட்டமையும் 19-வது திருத்தம் நிறைவேற்றப்பட்டமையும் இந்த நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் கிடைத்த பெரும் வெற்றியாகும் எனக் குறிப்பிட்டார்.

19-வது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுக்களினூடாக நாட்டில் அனைத்து பிரஜைகளுக்கும் சட்டத்தின் நீதி, சமூக நீதி, சுதந்திரம், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் ஆகிய அனைத்திற்கும் பலமான ஒரு அடித்தளம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த சுயாதீன ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளை மிகவும் முறையாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு அண்மையில் குறித்த அதிகாரிகளை அழைத்து ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து இலங்கை முழுமையாக சுதந்திரம் பெற்ற தினம் (நேற்று) இன்றாகும் என்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, 1972 மே மாதம் 22ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் மூலம் நீதித்துறை நாட்டில் முழுமையான சுதந்திரமும் ஜனநாயகபூர்வமானதாகவும் மாற்றப்பட்டது எனக் குறிப்பிட்டார்.

நீதிமன்ற கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் இந்த நீதிமன்ற கட்டிடத் தொகுதி நீதி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இரண்டு மாடிகளைக் கொண்ட இப்புதிய நீதிமன்ற கட்டிடத் தொகுதிக்கு 76 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

புதிய நீதிமன்ற கட்டிடத் தொகுதி நீதியரசர்களுக்கான உத்தியோகபூர்வகூடம், ஆவணகாப்பகம், சட்டத்தரணிகளுக்கான ஓய்வுஅறைகள், குடும்ப ஆலோசனை அலுவலகம் போன்ற வசதிகளைக் கொண்டுள்ளது.

புதிய கட்டிடத் தொகுதியை திறந்து வைத்த ஜனாதிபதி, அதனை பார்வையிட்டதுடன், சட்டத்தரணிகள் சங்க அதிகாரிகளுக்கு சட்ட நூல்களையும் வழங்கி வைத்தார்.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, அமைச்சர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, சரத் அமுனுகம, நவீன் திசாநாயக்க, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, பிரதி அமைச்சர் துஷ்மந்த மித்ரபால, பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-11)

## கர்ப்பிணி கொலை...

இதனையடுத்து குறித்த விடயம் தொடர்பாக விரிவான விசாரணைகளை நடத்துமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம்.எம்.றியால் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் ஊர்காவற்றுறை கரம்பொன் எனும் பிரதேசத்தில் வீட்டில் தனித்திருந்த ஏழு மாத கர்ப்பிணி பெண் மற்றும் அவரது வயிற்றில் இருந்த குழந்தை ஆகியோர் இனந்தெரியாதோரால் கொடூரமாக கொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

இவ் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளினூடாக இருவர் இக் கொலையை செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் வழக்கு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றது. இவ் வழக்கு நடவடிக்கையானது நேற்றைய தினம் இடம்பெற்றபோது, மன்றில் முன்னிலையான கொல்லப்பட்ட பெண்ணின் சார்பான சட்டத்தரணி சுகாஸ், குறித்த வழக்கில் சந்தேகநபர்கள் தரப்பு சட்டத்தரணியால் குறித்த இரண்டு பேரும் சம்பவம் இடம்பெறும் போது மருதனார்மடம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்ததாக கூறி அதற்கான ஆதாரமாக அவ் எரிபொருள் நிரப்பு நிலைய பாதுகாப்பு கமரா வீடியோ பதிவு உள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் பொலிஸாரால் பெற்றுக் கொள்ளப்பட்ட குறித்த வீடியோ கமரா ஒளிப்பட பதிவின் ஆய்வறிக்கை இன்னமும் மன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை மன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும் குறித்த வழக்கில் கண்கண்ட சாட்சியான வாய்பேச முடியாத சிறுவனை இவ் வழக்கு தொடர்பில் சாட்சியமளிக்க கூடாது எனவும் அதற்காக பணம் தருவதாகவும் சிறைச்சாலையில் உள்ள நபர் ஒருவர் தம்மிடம் கூறியதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் குறித்த பேரம் பேசும் விடயம் இடம்பெற்றதாக கூறப்படும் காலப்பகுதியில் குறித்த நபர் சிறைச்சாலையில் இருந்திருக்கவில்லை.

அவர் இவ் பேரம் பேசும் விடயம் கூறப்பட்டதாக கூறப்படும் காலத்திற்கு பின்னரே யாழ்.மேல் நீதிமன்றால் பாலியல் வன்புணர்வு படுகொலை வழக்கில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டு சிறை சென்றிருந்தார்.

இவ்வாறான நிலையில் குறித்த வழக்கில் சிறையில் இருந்தவர் பேரம் பேசியதாக கூறும் விடயங்களை அவதானிக்கின்ற போது இது இவ் வழக்கை திசை மாற்றுவதற்கான முயற்சிகள் நடக்கின்றதா? என்ற சந்தேகம் உள்ளதாக சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

இவற்றைத் தொடர்ந்து குறித்த சட்டத்தரணியின் விடயம் தொடர்பிலும் விரிவான விசாரணையை நடத்துமாறும் பொலிஸாருக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம்.எம்.றியால் உத்தரவிட்டதுடன் குறித்த இரு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார். (செ-4)

## வித்தியா கொலை...

தொடர்பான முடிவுகள் இவ் வாரத்திற்குள் வெளிவர இருப்பதாகவும் சட்டமா அதிபர் திணைக்கள தகவல்கள் தெரிவித்துள்ளன.

புங்குடுதீவு மாணவியான சிவலோகநாதன் வித்தியா கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாடசாலை செல்லும் போது கடத்தி செல்லப்பட்டு கூட்டு பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இப்படுகொலை தொடர்பில் 12 சந்தேகநபர்கள் விசாரணைகளினூடாக பொலிஸாராலும் பின்னர் குற்றப் புலனாய்வு பிரிவினராலும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 12 சந்தேகநபர்களுக்கும் எதிராக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் வழக்கானது இரண்டு ஆண்டுகளாக் இடம்பெற்று வழக்கு விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டது.

முடிவுறுத்தப்பட்ட வழக்கின் விசாரணை கோவைகள் சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கின் பத்தாவது மற்றும் பன்னிரண்டாவது சந்தேகபர்களை 'சட்டமா அதிபர் திணைக்களமானது வழக்கில் இருந்து விடுதலை செய்திருந்தது.

அத்துடன் பதினொராவது சந்தேகநபர் அரச தரப்பு சாட்சியாக மாற்றப்பட்டிருந்தார். தொடர்ந்து குறித்த வழக்கின் குற்றப்பத்திரமும் அதனுடான ஆவணங்களும் சட்டமா அதிபரால் யாழ்.மேல் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த வழக்கை கொழும்புக்கு மாற்றுவது தொடர்பாக உயர்மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலே இவ் வழக்கின் குற்றப்பகிர்வு பத்திரமானது யாழ். மேல் நீதிமன்ற பதிவாளரால் இரும்பு பெட்கத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலையில் குறித்த வழக்கை கொழும்புக்கு மாற்றாது யாழ்ப்பாண மேல் நீதிமன்றிலேயே நடத்துமாறு சட்டமா அதிபர் பிரதம நீதியரசரை கோரியுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் வழக்கை நடத்துவதற்காக மூன்று தமிழ் நீதிபதிகளையும் நியமிக்குமாறும் சட்டமா அதிபர் பிரதம நீதியரசரை கோரியுள்ளதாக தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் குறித்த வழக்கை யாழ்ப்பாணத்திலா அல்லது கொழும்பிலா ரயல் அட் பார் தீர்ப்பாயத்தில் நடத்துவது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தலானது இவ் வாரத்திற்குள் வெளிவரும் என சட்டமா அதிபர் திணைக்கள தகவல்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

## விடுதலைப் புலிக...

தாகவும் அந்தக் கட்சி கூறியுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெற்று மறுநாள் அதிகாலையில் கிளிநொச்சி முகமாலை பளை பிரதேசத்தில் பொலிஸார் பயணித்த வாகனம் மீது இனந்தெரியாத குழுவொன்று துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருந்தது.

இந்த சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இருந்த போதிலும் சந்தேகநபர்களை கைது செய்வதற்காக பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து பளை பகுதியில் இரவு பகலாக இரண்டு தினங்கள் பாரிய தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் நாடளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் ஏற்பாட்டில் கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பளை பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவத்திற்குப் பின்னால் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு தொடர்பிருப்பதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த சமரவீர புதுக்கதையை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரவிக்கையில்,

கடந்த 18ஆம் திகதி அதிகாலை பளை பிரதேசத்தில் வைத்து நடமாடும் பாதுகாப்புச் சேவை வாகனம் மீது ரி-56 ரக துப்பாக்கியினால் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. வாகனத்தின் மீது மூன்று ரவைகள் பாய்ந்ததோடு, மொத்தம் 7 சூடு நடத்தப்பட்ட...

இதனூடாக வழங்கப்பட்ட செய்தி என்ன? கடந்த போர்க் காலத்தில் 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதிக்குப் பின்னர் இந்தியாவுக்குத் தப்பிச்சென்ற விடுதலைப் புலி உறுப்பினர்கள் ரோலர் படகொன்றில் தலைமன்னாருக்கு வந்து வடக்கிலும், கிழக்கிலும் தங்கியிருந்து, மீண்டுமாரு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

மே 12ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதிவரை இனப்படுகொலை வாரமாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதியும் அந்தப் பகுதிக்கு வரமுடியாதபடி தடை விதித்து, சிவாஜிலிங்கம் நினைவேந்தலை நடத்தினார்.

அதன் இறுதியில் மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெற்று மறுநாள் அதிகாலை 2.45 அளவில் துப்பாக்கிச் சூடு நடத்தி நாங்கள் தயார் என்ற ...தியை வழங் கியிருக்கின்றனர்.

இந்தச் செய்தியை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறான செய்தி வெளியிடக் காரணம் என்ன? புலனாய்வுப் பிரிவு இன்று செயலிழப்பு செய்யப்பட்டுள்ளது. அதிகாரிகள் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தமிழ்ப் பிரிவினைவாதிகளுக்கும், ஆயுததாரிகளுக்கும் தற்போது சுதந்திரமாக செயற்படுவதற்கான சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. ஒருபக்கம் புலனாய்வு அதிகாரிகள் நீக்கப்படுகின்ற அதேவேளை அடுத்தபுறம் காணி உரித்து என்ற பெயரில் இராணுவ முகாம்கள் அகற்றப்படுகின்றன.

முல்லைத்தீவு பாதுகாப்பு படை தலைமையகத்தை இடமாற்றம் செய்ய ஆயத்தமாகி வருகின்றனர். முல்லைத்தீவு விமானப் படை ஓடுதளத்திற்கு அருகிலுள்ள காணியும் விடுவிக்கப்பட்டது. இது இவ்வாறு இடம்பெறுகையில் காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் ஊடாக இராணுவ சிப்பாய்களை சர்வதேச நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்வதற்கான செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது எனவும் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார். (செ-11)


### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

### வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

மிகக்குறைந்த கட்டணத்தில்
UK - 5Kg மேற்பட்ட பொதி 800/=
UK - 11 Kg மேற்பட்ட பொதி 500/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற் Pvt (Ltd)
T.P:- 077 755 4528
யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி
பருத்தித்துறை, சங்கானை, கிளிநொச்சி

# பதவி வெற்றிடம்

- அச்சு இயந்திர இயக்குநர்கள் (அனுபவமுள்ளவர்கள்)
- உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும் - ஊடகத்துறை அனுபவமுள்ளவர்கள்)
- செய்தியாளர்கள் (இருபாலாரும்)

ஆர்வமும் தகைமையும் உடையவர்கள் நாளை 24.05.2017 புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வலம்புரி அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

குறிப்பு : நேரில் வருகை தரும் போது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வருவது அவசியமானதாகும்.

இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

- பொது முகாமையாளர்
வலம்புரி

### எடிசன் கல்லூரி - கிளிநொச்சி

(வலயக்கல்வி பணிமனைக்கு முன்பாக)

முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கான வகுப்புக்கள் இன்று (23.05.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகின்றது. Y.தவசேகர் - 0775483470

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org